# ஆசரிப்புக் கூடாரம்

"அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக"
(யாத். 25:8)

First Edition : 1975
Second Edition : 1990
Third Edition : 2004
Reprint : 2008
Reprint : 2013

All rights reserved.

**பிரதிகளுக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:**
**பெந்தெகொஸ்தே சபை,**
ரோஜா தெரு, S.V. நகர் போஸ்ட்,
இரும்புலியூர், சென்னை - 63.
இந்தியா.
தொலைபேசி : (044) 2279 - 0079
Email : tpmadyar@vsnl.com

Printed by

Pentecost Press Trust,
Roja St., S.V. Nagar Post,
Irumbuliyur, Chennai - 63.

வெளியீடு எண் : C 2

# ஆசரிப்புக் கூடாரம்

# முகவுரை

ஆசரிப்புக் கூடாரம் என்பது இஸ்ரவேலர் மத்தியில் தேவனாகிய கர்த்தர் வாசம்பண்ணின இடமாகும். அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த காலத்தில் அவர்கள் மத்தியில் அவர் வாசம்பண்ணும்படியாக ஒரு வாசஸ்தலம் இருக்கவில்லை. அவர்களை அவர் வனாந்தரத்திற்குக் கொண்டுவந்த பின், "அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக" (யாத். 25 : 8) என்று மோசேயின் மூலமாக அவர்களுக்குக் கட்டளையிட்டார். அந்தக் கட்டளையின்படி மோசே வனாந்தரத்தில் உண்டாக்கின கர்த்தருடைய வாசஸ்தலமே ஆசரிப்புக் கூடாரமாகும். இதில் கர்த்தர் தம்முடைய மகிமையுடன் வந்து வாசம்பண்ணி, இஸ்ரவேலரைக் கானானுக்கு வழிநடத்தினார்.

ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கும் இப்பெரிய வேலை மோசேக்குக் கையளிக்கப்பட்டது. இந்த மோசே ஹெலியோ போலிஸ் என்ற இடத்தில் பிறந்தவன். பார்வோனின் குமாரத்தி, தான் நினைத்ததை உடனே செயல்படுத்திவிடக் கூடிய மன உறுதி படைத்தவளாயிருந்தாள். அவள் குழந்தை இல்லாதவளாக இருந்தாள். ஆற்றோரமாக அழுதுகொண்டு கிடந்த குழந்தையாகிய மோசேயின் சத்தத்தை அவள் கேட்டு, அதன் மேல் மிகவும் மனதுருகி, அதை எடுத்துச் சென்று, அதைத் தன் சொந்த மகனைப் போல் வளர்த்தாள். மோசே எகிப்தின் சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வளர்ந்து வந்தான். அவன் எவ்விதம் எகிப்துக்காக எத்தியோப்பியாவுக்கு விரோதமாக யுத்தஞ்செய்து, எத்தியோப்பியாவின் தலைநகரைப் பிடித்து, அப்பட்டணத்துக்குத் தன்னுடைய வளர்ப்புத் தாயின் பெயரை இட்டான் என்ற விவரத்தை முதலாம் நூற்றாண்டு வரலாற்று ஆசிரியராகிய ஜோஸஃபஸ் கூறுகிறார் (P. 483 of Fausset's Encyclopaedia and Dictionary). பார்வோனுடைய அரண்மனையில் வளரும்போதே மோசே உண்மையுள்ளவனாயிருந்தான் என்பது இதனால் விளங்குகிறது.

மோசே விசுவாசத்தில் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, தனக்குண்டாயிருந்த எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டான் (எபி. 11 : 24, 25). இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, கானானியர் முதலான ஏழு ஜாதியார் குடியிருந்த கானானை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பது கர்த்தருடைய திட்டமாயிருந்தது (உபா. 7 : 1). இந்தப் பெரிய நோக்கத்தை நிறைவேற்றும்படியாகக் கர்த்தர் இறங்கினதை நாம் அறிவோம். "அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்" (யாத். 3 : 8) என்று அவர் சொன்னார். இந்தப் பெரிய வேலையைச் செய்யும்படியாக அவர் இறங்கும் முன்பாக, பூமிக்குரிய எல்லா அந்தஸ்துகளையும் சிற்றின்பங்களையும் விட்டுவிட்ட ஒரு மனுஷன் அப்பணிக்கென்று அவருக்குத் தேவையாயிருந்தான். அம்மனிதனை அவர் மோசேயில் கண்டார்.

உலக சரித்திரத்திலேயே அற்புதங்களைச் செய்ய தேவனிடத்திலிருந்து வரம் பெற்றுக்கொண்ட முதல் தலைவன் இந்த மோசேயே. ஒரு மனுஷன் தன் சிநேகிதனோடு பேசுவது போல, யேகோவா முகமுகமாய்ப் பேசின முதல் தீர்க்கதரிசி அவனே. ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கி, தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தமக்கேற்ற கருவியாகக் கர்த்தர் மோசேயைத் தெரிந்துகொண்டார். அவன் கர்த்தருடைய சித்தம் செய்யத் தன்னை ஒப்புக்கொடுத்திருந்தபடியால், அவருடைய கையில் விசேஷித்த ஒரு ஆயுதமாயிருந்தான். அவன் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காகப் பல

அற்புதங்களைச் செய்ததும், கர்த்தர் அவர்கள் மத்தியில் வாசம் பண்ண பரிசுத்த ஸ்தலமான ஒரு கூடாரத்தை உண்டாக்க, அதற்குரிய கட்டளையையும் மாதிரியையும் பெற்றுக்கொள்வ தற்காகச் சீனாய் மலையின் மேல் இரவும் பகலும் நாற்பது நாட்கள் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் தேவ சமுகத்தில் தரித்திருந்ததும் போன்ற பல விவரங்களை நாம் வேதாகமத்தில் காண்கிறோம். இவை யாவும் பழைய ஏற்பாட்டின் காலத்தில் நிழலாட்டமாய்ச் சம்பவித்தவைகளே.

பூமிக்குரிய இஸ்ரவேலர் பூமிக்குரிய கானானைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அவர்களை மீட்பதற்கும், பூமிக்குரிய ஒரு கூடாரத்தை உண்டுபண்ணுவதற்கும் மோசேயைப் போன்ற ஒரு மனிதன் தேவனுக்குத் தேவையாயிருந்தான். அப்படியானால் பரம கானானுக்குத் தேவஜனங்களை வழிநடத்தும் மனுஷர் எவ்வளவு விசேஷித்தவர்களாக இருக்க வேண்டும்! தேவனுடைய இருதயத்தில் மறைந்திருந்த இரகசியங்களை நிழலாட்டமான வெளிப்படுத்தலாய்ப் பெற்றுக்கொள்ளும்படி இப்படிப்பட்ட ஒரு மனுஷன் அவருக்குத் தேவைப்பட்டான். அப்படியாயின், தேவ னுடைய இருதயத்தில் மறைந்திருக்கும் இரகசியங்களின் சத்தி யத்தை உலகத்துக்கு வெளிப்படுத்தும்படி அவரால் தெரிந்து கொள்ளப்படும் மனுஷர் எவ்வளவு விசேஷித்தவர்களாயிருக்க வேண்டும்! அவர்கள் புதிய ஏற்பாட்டின் இரகசியங்களை அறிந்து கொள்ளும்படியாகவும் தேவசித்தம் செய்யும்படியாகவும், தங்க ளுக்குண்டான பூமிக்குரிய எல்லாவற்றையும் விட்டுவிட்டவர் களாகவும் மாம்ச சம்பந்தமானவர்களை வெறுத்தவர்களா கவும் இருக்க வேண்டும். "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" ; "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவி யையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க

மாட்டான்" (லூக்கா 14 : 33, 26) என்று கர்த்தராகிய இயேசு கூறியிருப்பதை நாம் அறிவோம். கர்த்தர் தம்முடைய இரகசியங்களை இப்படிப்பட்ட சீஷர்கள் மூலமாக மட்டுமே உலகிற்கு வெளிப்படுத்துகிறார். அப். பவுல், "இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை" (எபே. 3 : 6) என்று கூறுகிறார். கர்த்தராகிய இயேசு, "பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று அப். பேதுருவிடத்திலும் (மத். 16 : 19), அவரைப் போலவே எல்லாவற்றையும் விட்டுவிட்ட தம்முடைய சீஷர்களான மற்றவர்களிடத்திலும் கூறி (மத். 18 : 18), பரலோகராஜ்யத்தின் வெளிப்படுத்தல்களால் மாத்திரமே பரலோக வாசஸ்தலம் உண்டாக்கப்படக் கூடுமென்று தெரிவிக்கிறார்.

யாத்திராகமம் 26, 36 - ஆம் அதிகாரங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆசரிப்புக் கூடாரத்தின் திட்ப நுட்பங்களை வாசித்தால், கூடாரத்தைச் செய்து முடித்து கண்கூடாகக் கண்ட ஒருவனே அவைகளை எழுதியிருக்க வேண்டுமென்று தயக்கமின்றி சொல்லிவிடலாம் என்று ஃபர்குசன் என்ற அறிஞர் எழுதியிருக்கிறார். நிகழ்ச்சிகள் யாவும் உடனுக்குடன் எழுதப்பட்டிருக்கின்றன என்பதை யாத்திராகமம் 24 : 4 - 7 ; எண்ணாகமம் 33 : 2 ஆகிய வசனங்களின் மூலமாக நாம் விளங்கிக்கொள்ளலாம். ஆதலால் ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றிய விவரங்கள் யாவையும் எழுதினவன் இந்த மோசேயே என்னும் உண்மை இதனால் உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆசரிப்புக் கூடாரத்திலிருந்த மூன்று இடங்களும் (வெளிப் பிராகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம்) நித்தியத்தில் காணப்படும் மூன்று இடங்களைக் (புதிய பூமி, புதிய வானம்,

புதிய எருசலேம்) குறிக்கின்றன. இம்மூன்று இடங்களில் மகா பரிசுத்த ஸ்தலம், நித்தியத்திலுள்ள புதிய எருசலேமையும் சீயோனையும் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில், கல்வாரிக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்தக் கூடாரத்தின் மாதிரி மோசேக்குக் கொடுக்கப்பட்டது. எனினும் அதன் உண்மைப் பொருளை அக்காலத்தில் ஒருவரும் அறிந்திருக்கவில்லை. அது ஒரு இரகசியமாயிருந்தது. ஆனால் இந்தக் கடைசிக் காலங்களில் அது பரிசுத்த ஆவியானவரால் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்கள் மூலமாகச் சுவிசேஷமாய்ப் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது. இதைக் குறித்தே, "இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (I பேதுரு 1 : 12) என அப். பேதுரு கூறுகிறார்.

**'ஆசரிப்புக் கூடாரம்'** என்னும் இந்நூல், பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்த ஆசரிப்புக் கூடாரத்தில் நிழலாட்டமாய் மறைந்திருந்த புதிய ஏற்பாட்டு இரகசியங்களை விளக்குகிறது.

# பொருளடக்கம்


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | வனாந்தரம் | 1 |
| 2 | வனாந்தரத்தில் கூடாரம் | 6 |
| 3 | கூடாரம் எவற்றை வெளிப்படுத்துகிறது ? | 11 |
| 4 | மகா பரிசுத்த ஸ்தலமும் அதின் பணிமுட்டுகளும் | 24 |
| 5 | பரிசுத்த ஸ்தலமும் அதின் பணிமுட்டுகளும் | 49 |
| 6 | பிராகாரமும் அதின் பணிமுட்டுகளும் | 72 |
| 7 | வாசல்கள் | 90 |
| 8 | பலகைகளும் தாழ்ப்பாள்களும் | 95 |
| 9 | மூடுதிரைகள் | 99 |
| 10 | ஆசாரிய ஊழியமும் ஆசாரிய ராஜ்யமும் | 112 |
| 11 | லேவியரும் அவர்களது ஊழியமும் | 124 |
| 12 | ஆசாரியப் பிரதிஷ்டை | 131 |
| 13 | பலிகள் | 161 |

## அதிகாரம் 1

---

# வனாந்தரம்

தேவனாகிய கர்த்தர்தாமே வனாந்தரத்தில் தம்முடைய ஜனங்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கும்படியாக அவர்களோடு வாசம்பண்ண விரும்பினார். அதனால், "அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக" (யாத். 25 : 8) என்று அவர் கூறினார். இந்தப் பரிசுத்த ஸ்தலமே தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்திற்குக் கொண்டுவந்த பின்பு அவர்கள் மத்தியில் வாசம் செய்த ஆசரிப்புக் கூடாரமாகும். இந்தக் கூடாரத்தில் அவர் தம்முடைய மகிமையுடன் வந்து வாசம்பண்ணினார் (யாத். 40 : 34). சாட்சிப் பலகைகளைக் கொண்ட சாட்சிப் பெட்டி இதில் வைக்கப்பட்டிருந்தபடியால், இது 'சாட்சியின் கூடாரம்' என்றும் அழைக்கப்பட்டது (அப். 7 : 44).

யாக்கோபும் அவனுடைய குமாரரும் கானான் தேசத்தை விட்டு எகிப்திற்குப் போனதைக் குறித்தும், அங்கே அவர்கள் பலுகிப் பெருகி, தேசத்தை நிரப்பினதைக் குறித்தும் நாம் அறிவோம். அவ்விடத்தில் யோசேப்பை அறியாத பார்வோன் மூலமாய் அவர்கள் எவ்வாறு அடிமைத்தனத்திற்குட்பட்டனர்

என்பதை வேதவாக்கியங்கள் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன (யாத். 1 : 7 – 11). அதனால் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூக்குரலிட்டபோது, அவர்களுடைய பெருமூச்சை அவர் கேட்டு, அவர்களை மீட்கும்படி மோசேயை அனுப்பினார் (யாத். 2 : 24 ; 3 : 9, 10). அவர்கள் எகிப்திலிருந்து வெளியேறி, சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வனாந்தரத்திற்கு வந்தபோது, தேவனாகிய கர்த்தர் தாம் வாசம்பண்ணும்படி தமக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை (sanctuary) உண்டாக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார் (யாத். 25 : 8).

கர்த்தர் வாசம்பண்ண விரும்பிய பரிசுத்த வாசஸ்தலமானது, மோசே நினைத்தபடியோ, அல்லது வேறு எந்த மனிதனும் நினைத்தபடியோ இருக்கவில்லை. இந்த வாசஸ்தலத்தை உண்டாக்குவதற்கு முன்பு கர்த்தர் மோசேயைச் சீனாய் மலையின் மேல் வரும்படி அழைத்தார். அங்கே அவன் நாற்பது நாட்கள் இரவும் பகலும் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் தேவசமுகத்தில் காத்திருந்தான் (யாத். 24 : 18). அங்கே அவர் அவனுக்கு இந்த வாசஸ்தலத்தின் மாதிரியையும், அதன் தட்டு முட்டுகளின் மாதிரியையும் காண்பித்து, "நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக" (யாத். 25 : 9) என்று கட்டளையிட்டார். அப்படியே இஸ்ரவேலர் வனாந்தரத்தில் தங்கியிருந்து இந்தக் கூடாரத்தை உண்டாக்கி முடித்தார்கள் (யாத். 39 : 32). இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட "இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம் பண்ணப்பட்டது" ; "அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று" (யாத். 40 : 17, 34).

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட இஸ்ரவேலர், மோசேயின்

தலைமையில் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தார்கள் (யாத். 13 : 18 ; I கொரி. 10 : 2). அவர்களைப் பின்தொடர்ந்து வந்த எகிப்தியர் சிவந்த சமுத்திரத்தில் மாண்டு போனார்கள். இவ்விதமாய் விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலர் வனாந்தரத்தில் பிரவேசித்துப் பிரயாணம் பண்ணினார்கள்.

வனாந்தரமானது எப்பக்கம் நோக்கினும் மைல் கணக்காய் மணல் நிறைந்ததும் தண்ணீரற்றதும் புசிப்பதற்கு ஏதுமில்லாதது மான ஓர் இடமாயிருந்தது. அது அவர்கள் எகிப்தில் புசித்துவந்த மச்சங்கள், வெள்ளரிக்காய்கள், கொம்மட்டிக்காய்கள் போன்றவை இல்லாததும் பூமிக்குரிய நம்பிக்கையற்றதுமான ஒரு இடமாயும் இருந்தது (எண். 11 : 5). அவர்கள் முன்செல்லுவதற்கு ஏற்ற பாதைகள் வனாந்தரத்தில் காணப்படவில்லை. கர்த்தருடைய வார்த்தையை நம்பிப் புறப்பட்ட இஸ்ரவேலரை அவர் இந்த மனித சஞ்சாரமற்ற வனாந்தரத்திற்குக் கொண்டுவந்தார். இது, பூமிக்குரிய நம்பிக்கை எதுவும் இல்லாதவர்களான தம்முடைய ஜனங்களுக்குத் தாமே ஆறுதலாயிருக்கும்படி, அவர்கள் மத்தியில் அவர் தாமே வந்து வாசம்பண்ண நினைத்த அவருடைய அன்பை நமக்கு வெளிப் படுத்துகிறது.

புதிய ஏற்பாட்டில், கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் இரத்தத்தி னால் மீட்கப்பட்ட ஜனங்கள் (எபே. 2 : 8 ; I கொரி. 5 : 7), தங்களுக்கு முன்னே வைக்கப்பட்டிருக்கும் பரம கானானை நோக்கி ஓடுவதை இஸ்ரவேலரின் பிரயாணம் நமக்கு வெளிப் படுத்துகிறது. இந்தப் பிரயாணத்தில் முதலாவதாகப் பாவ மன்னிப்பாகிய மீட்பைப் பெற்று மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிற ஒரு தேவபிள்ளை, பின்பு கிருபையின் இரண்டாம் படிக்குள் - அதாவது தேவசித்தம் செய்யும்படி தன்னை ஒப்புக்கொடுக்கும் தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறான். தேவசித்தம் செய்யும்படி தன்னை ஒப்புக்கொடுத்த ஒருவன், அதுமுதல்

வனாந்தரத்தில் ஜீவிப்பதைப் போன்ற ஒரு ஜீவியம் செய்து, தன்னுடைய ஓட்டத்தை முடித்து, நித்திய கானானுக்குள் பிரவேசிக்க வேண்டுமென்பது தேவனுடைய ஒழுங்காயிருக்கிறது. அதனாலேயே, தேவனாகிய கர்த்தர் நமக்குள் தாம் வாசம் பண்ணும்படி நாம் அவருக்கென்று ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

இஸ்ரவேலரைப் பொறுத்த வரை அவர்கள் பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்த எகிப்து தேசமும், அவர்கள் மீட்கப்பட்ட பின் வழிநடத்தப்பட்ட வனாந்தரமும் வெவ்வேறு இடங்களாய் இருந்தன. அவர்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டு, சிவந்த சமுத்திரத்தைக் கடந்து, வனாந்தரத்திற்கு வந்தார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டுப் பரலோகப் பிரயாணிகளாகிய நாமோ நம் ஓட்டத்தை முடிக்கும் வரையும் இந்த உலகத்திலேயே ஜீவிக்க வேண்டிய தாயிருக்கிறது. இஸ்ரவேலரைப் போல் நாம் எழுத்தின்படி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குப் போவதல்ல; ஆனால், இவ்வுலகத்தை வனாந்தரமாக எண்ணிக்கொள்ளத்தக்கதாக நம் மனப்பான்மையே மாற்றப்பட வேண்டும். நாம் இரட்சிக்கப்பட்டு, தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்பு, ஒரு காலத்தில் நம் கவனத்தை ஈர்த்த உலகப் பொருட்கள் இப்போது கவர்ச்சி யற்றவையாகவும், வெறும் மண்ணாகவும், மாயையாகவும் நமக்குக் காணப்படும் நிலைவரமே வனாந்தர ஜீவியமாகும். இவ்விதம் இவ்வுலகத்தை வனாந்தரமாகக் காண்கிறவர்கள் பாக்கியவான்கள்!

எகிப்தில் எல்லா விதமான பொருட்களும் இருந்த போதிலும் தேவன் அந்த இடத்தைத் தாம் வாசம்பண்ணும்படி யாகத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால், வனாந்தரமோ பாழா னதும் வெறுமையானதுமாயிருந்தும், தேவன் அங்கே தம் ஜனங் களின் மத்தியில் வாசம்பண்ணினார். ஆவிக்குரிய வனாந்தரத்தில் பிரவேசித்திருக்கும் நாம், கர்த்தரை மாத்திரம் பற்றிக்கொண்டு, பூமியிலுள்ள யாதொன்றின் மேலும் நம் மனதைச் செலுத்தாது,

அவை யாவற்றையும் வெறும் மண் என்று கருதி ஜீவிக்க வேண்டும். இது உலகத்தில் ஏற்படும் மாறுதல் அல்ல; ஆனால், ஒரு தேவபிள்ளையின் ஜீவியத்தில் ஏற்படும் மாறுதலே ஆகும். நாம் நம் ஜீவிய ஓட்டத்தை முடிக்கும் வரையும் இந்த அனுபவம் நம்மில் தொடர்ந்து காணப்பட வேண்டும்.

வனாந்தரத்தில் முன்னேறிச் செல்வதற்குப் பாதைகள் இல்லாவிடினும், இஸ்ரவேல் ஜனங்களைப் பகலில் மேகஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கினிஸ்தம்பத்தினாலும் தேவன் வழி நடத்தினது போல (யாத். 13 : 21, 22), நம் ஆவிக்குரிய வனாந்தர ஜீவியத்திலும் தேவன்தாமே நமக்கு ஆறுதலும் வெளிச்சமுமாய் இருக்கிறார். இவ்வனாந்தரத்தில் நதிகள் இல்லாவிட்டாலும், கர்த்தர்தாமே தாகம் தீர்க்கும் ஞானக் கன்மலையாய் நம்மைப் பின்தொடர்ந்து வருகிறார் (I கொரி. 10 : 4 - Eng.).

## அதிகாரம் 2

# வனாந்தரத்தில் கூடாரம்

மலையிலே காண்பிக்கப்பட்ட மாதிரியின்படி கூடாரமும் அதின் பணிமுட்டுகளும் உண்டாக்கப்பட்டன என்று நாம் முன்பு கண்டோம். கூடாரமானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவையாவன: ***பிராகாரம்,*** பிராகாரத்துக்குள்ளே இருந்த வாசஸ்தலத்தில் – ***பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம்.***

பிராகாரமானது 100 முழ நீளமும் 50 முழ அகலமும் உள்ளதாய், தொங்குதிரைகளால் அடைக்கப்பட்ட ஒரு இடமா யிருந்தது (யாத். 27 : 9 - 15). இந்தத் தொங்குதிரைகள் ஐந்து முழ உயரமுள்ளவையாயிருந்தன. இவை அறுபது தூண்களில் நிலை நிறுத்தப்பட்டிருந்தன. இந்த இடமே ***'பிராகாரம்'*** எனப்பட்டது (வச. 18). இதன் முன்புறத்தில் 20 முழ அகலமுள்ள ஒரு வாசல் (gate) இருந்தது (வச. 16). அதனுள்ளே அதன் வாசலருகில் முதலாவதாக ஒரு பலிபீடம் காணப்பட்டது. அதனையடுத்து, ஆசாரியர் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவிக்கொள்ளும்படி வெண்கலத் தொட்டி ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பிராகாரத்துக்குள்ளே 30 முழ நீளமும் 10 முழ அகலமும் 10 முழ உயரமும் உள்ள ஒரு வாசஸ்தலம் இருந்தது.

அது 1½ முழ அகலமும் 10 முழ உயரமுமுள்ள நாற்பத்தெட்டு பலகைகளினால் சுற்றிலும் அடைக்கப்பட்டிருந்தது. இதன் வாசல் (door) தொங்குதிரையால் மறைக்கப்பட்டிருந்தது (யாத். 26 : 36). இந்த வாசஸ்தலம் ஒரு திரைச்சீலையால் (veil) இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது (வச. 33). இதனுடைய முந்தின பாகம் 20 முழ நீளமும் 10 முழ அகலமும் 10 முழ உயரமும் உள்ளதாக இருந்தது. இதற்குப் ***'பரிசுத்த ஸ்தலம்'*** என்றும், 'முதலாங்கூடாரம்' என்றும் பெயர் (எபி. 9 : 2, 6). இந்தப் பாகத்திலே குத்துவிளக்கும் சமுகத்தப்பங்கள் வைக்கும் மேஜையும் தூபபீடமும் வைக்கப் பட்டிருந்தன. இதனையடுத்த இரண்டாம் பாகம் 10 முழ நீளமும் 10 முழ அகலமும் 10 முழ உயரமும் உள்ளதாய் இருந்தது. இது ***'மகா பரிசுத்த ஸ்தலம்'*** என்றும், 'இரண்டாங்கூடாரம்' என்றும் அழைக்கப்பட்டது (வச. 3, 7). இதற்குள்ளே உடன்படிக்கைப் பெட்டியும், அதனுடைய மூடியாகிய கிருபாசனமும், கிருபாசனத் தின் மேல் பொன்னால் செய்யப்பட்ட இரண்டு கேருபீன்களும் காணப்பட்டன. இந்தக் கேருபீன்களின் மத்தியில் தேவன் மகிமையாய் வாசம்பண்ணினார். அங்கேயிருந்தே தேவன் மோசேயோடு பேசினார் (யாத். 25 : 22 ; எண். 7 : 89).


கூடாரத்தில் 30 முழ நீளமும் 10 முழ அகலமுமுள்ள இந்த வாசஸ்தலம் நூல்களினால் செய்யப்பட்ட மூடுதிரையால் மூடப் பட்டிருந்தது - இம்மூடுதிரையில், ஒவ்வொன்று 28 முழ நீளமும் 4 முழ அகலமுமுள்ள பத்து மூடுதிரைகள் சேர்ந்திருந்தன. வாச ஸ்தலத்தின் மேல் போடப்பட்டிருந்த இம்மூடுதிரையும் 'வாச ஸ்தலம்' என்றே அழைக்கப்பட்டது (யாத். 26 : 1, 6). இம்மூடுதிரை யின்மேல் வெள்ளாட்டு ரோமத்தினால் செய்யப்பட்ட ஒரு மூடியும், அதற்கு மேல் சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலினால் உண்டாக்கப்பட்ட வேறொரு மூடியும், அதற்கு மேல் தகசுத்தோலி னால் செய்யப்பட்ட மற்றொரு மூடியும் இடப்பட்டிருந்தன.

இஸ்ரவேல் ஜனங்களில் விருத்தசேதனம் பெற்றவர்கள் யாவரும் இந்தக் கூடாரத்தின் பிராகாரத்தில் பிரவேசிக்க உரிமை

பெற்றிருந்தார்கள். லேவியர் தங்கள் பணிவிடைகளைச் செய்யும்படி பிராகாரத்திற்குள் பிரவேசித்தார்கள். ஆசாரியர்களான ஆரோனும் அவனுடைய குமாரரும் வாசஸ்தலத்தின் முந்தின பாகமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் (20 முழ நீளமுள்ள இடத்தில்) வருஷத்தின் எல்லா நாட்களும் ஊழியம் செய்தார்கள் (எபி. 9 : 6). ஆனால் வாசஸ்தலத்தின் இரண்டாம் பாகமாகிய 10 முழ நீளமும் 10 முழ அகலமும் 10 முழ உயரமுமுள்ள இடமான மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்தில் ஒரு நாள் முதலாவது தனக்காகவும், தன்னுடைய குடும்பத்துக்காகவும், பின்பு இஸ்ரவேலருக்காகவும் பிரவேசித்து, பிராயச்சித்தம் செய்தான் (லேவி. 16 : 11 - 14, 16, 17). இப்படியே இஸ்ரவேலருடைய வனாந்தரப் பிரயாணத்தில் கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டு, ஊழியம் செய்யப்பட்டது.

இந்தக் கூடாரத்தைச் சுற்றிலும் வடக்கிலும், மேற்கிலும், தெற்கிலும் லேவியர் தங்கள் கூடாரங்களைப் போட்டு, காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். மோசேயும், ஆரோனும் அவனுடைய குமாரரும் கூடாரத்தின் கிழக்கே தங்கள் கூடாரங்களைப் போட்டு, அங்கே தங்கியிருந்தார்கள். இவர்களைச் சுற்றிலும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் கூடாரங்களைப் போட்டு, தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின் விருதாகிய தங்கள் கொடிகளோடு தங்கியிருந்தார்கள்.

ஆசரிப்புக் கூடாரத்தின் மேலிருந்த மேகமானது கிளம்பும் வரை அவர்கள் தங்கள் தங்கள் கூடாரங்களில் தங்கியிருப்பார்கள். மேகம் கிளம்பும்போது அவர்கள் பிரயாணப்படுவார்கள். மேகம் எவ்வளவு காலம் அதின்மேல் தங்கியிருந்ததோ, அவ்வளவு காலமும் அந்த இடத்தில் அவர்கள் தங்கியிருந்தார்கள். மேகம் மேலே எழும்பி முன் சென்றபோது அவர்கள் வழிநடந்தார்கள். மேகம் எவ்வளவு காலம் அவர்களுக்கு முன் சென்றதோ, அவ்வளவு காலம் அவர்களும் பிரயாணம்பண்ணினார்கள் (எண். 9 : 17 - 22). மேகம் ஓரிடத்தில் தங்கும்போது அந்த இடத்தில்




இஸ்ரவேலரின் பாளயமும் தேவனுடைய வாசஸ்தலமும்

அவர்கள் தங்கள் கூடாரங்களைப் போட்டு, மேகம் எழும்பும் வரை அங்கே தங்கியிருப்பார்கள். தேவன் அவர்களோடே இருந்தபடியால், அவர்களும் அவர்களுடைய மிருக ஜீவன்களும் நடந்து கொண்டேயிருந்தபோதிலும் களைத்துப்போகவில்லை.

தேவன் அவர்களோடு வனாந்தரத்தில் வாசம்பண்ணின தினால் இந்த மகத்துவமான ஜீவியம் செய்வது அவர்களுக்குச் சாத்தியமாயிருந்தது. அவர்கள் இப்படி தங்கியிருந்த காட்சி, அவர் களைச் சபிக்கும்படி போன பேயோரின் குமாரனாகிய பிலேயா முக்குங்கூட அழகானதொரு காட்சியாக இருந்தது. அதினா லேயே அவன், "யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்!" (எண். 24 : 5) என்று அவர்களுடைய வாசஸ்தலங்களை வருணித்தான். இப்படி வனாந்தரத்தின் மத்தியிலே தேவ மகிமை தங்கும் ஒரு கூடாரமும், அதைச் சுற்றிலும் இஸ்ரவேலரின் மனோகரமான வாசஸ்தலங் களும் காணப்பட்டன.

## அதிகாரம் 3

# கூடாரம் எவற்றை வெளிப்படுத்துகிறது?

கர்த்தருடைய மகிமை வாசம்பண்ணின இந்தக் கூடாரமானது, பின் வருவனவற்றிற்கு நிழலாட்டமாய் இருக்கிறது: *1. கர்த்தராகிய இயேசு, 2. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒரு தேவபிள்ளை, 3. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற சபைகள், 4. பரலோகத்தில் கட்டப்படும் மெய்யான தேவாலயம், 5. நித்திய வாசஸ்தலங்கள்.*

### 1. கர்த்தராகிய இயேசு:

சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறானவராகிய தம்முடைய குமாரனைக் கொண்டு தேவன் உலகங்களை உண்டாக்கினார் (கொலோ. 1 : 15 ; எபி. 1 : 2). இந்தத் தேவகுமாரனாகிய கிறிஸ்து, மனுஷனானார். இதைக் குறித்தே அப். யோவான், "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1 : 14) என்று கூறியிருக்கிறார். இதில் "வாசம்பண்ணினார்" என்னும் பதத்திற்கு மூலபாஷையில், 'தமது வாசஸ்தலமாகிய கூடாரத்தை ஸ்தாபித்தார்' (tabernacled) என்ற பொருளுள்ள ஒரு பதம் உபயோகிக்கப் பட்டுள்ளது. மேலும், "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகை

வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்" (எபி. 1 : 1, 2) என்று அவரைக் குறித்தே எபிரெய நிருபக்காரன் கூறுகிறார். தேவனுடைய வார்த்தையாகிய அவரைக்கொண்டு உலகங்கள் உண்டாக்கப்பட்டிருக்க, அவர் கர்த்தராகிய இயேசு என்னும் நாமத்தில் கடைசிக் காலங்களில் மாம்சத்தில் வெளிப்பட்டபோது, தேவமகிமையினால் நிறைந்தவராய் மனுஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார். அவரைக் கண்டவர்கள், "அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1 : 14) என்று சொன்னார்கள். ஆசரிப்புக் கூடாரத்தில் வாசம்பண்ணின பிதாவாகிய தேவன்தாமே அவருக்குள் (கர்த்தராகிய இயேசு) வாசம்பண்ணினதினால் (யோவான் 14 : 20), அவர் தேவனுடைய மெய்யான வாசஸ்தலமாகக் காணப்பட்டார். அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார். "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்" (அப். 10 : 38).

**2. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒரு தேவபிள்ளை:**

கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, தண்ணீர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவின் மரணத்திற்குள் அடக்கம்பண்ணப்பட்டு, தேவனுடைய சித்தம் செய்யத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்த ஒரு தேவபிள்ளை, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வாசம்பண்ணும்படியாக வருகிறார். தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படியும் ஒருவன் அதைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளும் உயிர்த்தெழுதலின் அனுபவத்தைக் குறித்து

அப். பவுல், "பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்" (ரோமர் 6 : 4) என்று கூறுகிறார். இங்கே 'பிதாவின் மகிமை' என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது (ரோமர் 8 : 11 ; I பேதுரு 4 : 14). நாம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது பிதாவின் மகிமையாகிய பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வருகிறார். இதைக் குறித்தே அப். பேதுரு பெந்தெகொஸ்தே நாளில், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2 : 38) என்றார். இந்த அனுபவத்தைப் பெற்ற தேவ பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய இவ்வனாந்தரத்தில் தனித்தனியே மெய்யான கூடாரமாய்க் காணப்படுகிறார்கள் (I கொரி. 3 : 16 ; 6 : 19 ; II கொரி. 6 : 16).

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமாகிய இந்த அனுபவத்தைக் குறித்தே கர்த்தராகிய இயேசு, "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" ; "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" (யோவான் 14 : 16, 20) என்று கூறினார். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு பரிசுத்த ஆவியானவர் இப்பூமியில் இருந்தபோதிலும், அவர் ஒரு தேவபிள்ளைக்குள் வாசம்பண்ணும் அனுபவம் பெந்தெகொஸ்தே நாளிலேயே ஆரம்பமாயிற்று. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரித்துவ தேவன் நமக்குள் வாசம்பண்ண வருகிறார். ஆகையால், பரம

கானானை நோக்கிப் பிரயாணம் செய்யும் ஒவ்வொருவரும் கூடாரமாகும் இந்த அனுபவத்திற்குள் வரவேண்டியது அவசியம்.

### 3. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற சபைகள்:

இக்காலத்தில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற சபைகள் அநேகம் காணப்படுகின்றன. வனாந்தரத்திலிருந்த ஆசரிப்புக் கூடாரம், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஜனங்களைக் கொண்ட சபைகளுக்கு நிழலாட்டமாயிருக்கிறது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் தனித் தனியே ஆசரிப்புக் கூடாரமாயிருக்கிறார்கள் என நாம் முன்பு கண்டோம். இருப்பினும், இரட்சிக்கப்பட்டு, தண்ணீர் ஞானஸ் நானத்தின் மூலம் கிறிஸ்துவின் மரணத்திற்குப் பங்காளிகளாகி, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற யாவரும் இப்பூமியில் தேவனுடைய ஒரே வாசஸ்தலமாக ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட வேண்டும் என்பதே கர்த்தருடைய நோக்கமாயிருக்கிறது. இதற் கென்றே அவர் அப்போஸ்தலராகச் சிலரை அழைத்தார். "ஆகை யால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்த வான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமா யிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்தி பாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப் பட்டுவருகிறீர்கள்" (எபே. 2 : 19 - 22) என அப். பவுல் கூறுகிறார்.

இந்தப் பெரிய வேலையை மனதிற்கொண்டவராய்க் கர்த்தராகிய இயேசு, தாம் உயிர்த்தெழுந்த பின் தம் சீஷர்களை நோக்கி, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்

நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள் ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" (மத். 28 : 18 - 20) என்றார். அவருடைய வார்த்தையின்படியே அப்போஸ்தலர் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்து, உபதேசம் பண்ணி, பூமியில் சபையைக் கட்டினார்கள்.

கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களிடம் ஒருமுறை, "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்" என்று கேட்டபோது, அப். பேதுரு, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பதிலளித்தார். அப்போது அவர், "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். ... இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" (மத். 16 : 15 - 18) என்றார். இந்தக் கல் கிறிஸ்துவே. கர்த்தராகிய இயேசு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலின் மீது சபை யானது கட்டப்படுகிறது. இதைக் குறித்தே அப். பவுலும், "போடப் பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (I கொரி. 3 : 11) என்று சொல்லுகிறார். கிறிஸ்து இயேசுவைப் பற்றிய வெளிப்படுத்தலானது, அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவருக் குள்ளும் ஒரு கல்லைப் போல் உறுதியாயிருக்கிறது என்பது அப். பவுலின் கருத்து. இந்த அஸ்திபாரத்தின் மீது நமது ஆவிக்குரிய ஜீவியம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

தம்முடைய வாசஸ்தலமாகச் சபையைக் கட்டியெழுப்பும் படியாகக் கர்த்தராகிய இயேசு தம்முடைய ஊழியக்காரராயிருக்கும் பொருட்டு சிலரை அழைக்கிறார். பெந்தெகொஸ்தே நாள் முதல் இவ்விதம் அழைக்கப்பட்ட அநேகர் இருந்தனர். இக்காலத்திலும் அப்படிப்பட்ட அநேகர் இருக்கின்றனர். அவர்கள் பரிசுத்த

ஆவியின் ஞானஸ்நானம் பெற்று, அந்த அபிஷேகத்தின் மூலம் பெற்றுக்கொண்ட வெளிப்படுத்தலினால், கர்த்தராகிய இயேசு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற சத்திய மாகிய அஸ்திபாரத்தின் மீது சபையைக் கட்டுகிறார்கள்.

தேவனுடைய வாசஸ்தலமாகச் சபையைக் கட்டியெழுப்பும் வேலையைச் செய்யும் தேவ ஊழியர்கள் எப்படிப்பட்டவர்களா யிருக்க வேண்டும் என்பதைக் கர்த்தராகிய இயேசு வெளிப்படுத்தி யிருக்கிறார். அவர்கள், தங்கள் ஆண்டவரைப் போலவே ஜீவிக் கும்படி தங்களுக்குண்டான பூமிக்குரிய எல்லாவற்றையும் விட்டு, மாம்ச சம்பந்தமானவர்களையும் தங்கள் ஜீவனையும் வெறுக்கும்படி அழைக்கப்பட்டவர்கள் ஆவர் (லூக்கா 9 : 23 ; 14 : 26, 33). இவ் வாறு பிரதிஷ்டையின் உன்னதமான ஒரு நிலைவரத்தைக் குறித்து அவர் தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்தியிருப்பினும், தாங்கள் தேவ ஊழியர்கள் என்று உரிமைபாராட்டிக்கொள்ளுகிற பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம் பெற்ற சிலர், அல்லது தாங்கள் சபையைக் கட்டுவதாக இந்நாட்களில் கூறிக்கொள்ளும் சிலர், இந்தப் பிரதிஷ்டையுள்ளவர்களாயிருப்பதில்லை. எனவே அவர் களுடைய வெளிப்படுத்தல்கள் அவர்களுடைய பிரதிஷ்டைக் கேற்ப வித்தியாசப்படுகிறது. பரிசுத்த ஆவியைப் பெற்ற தேவ ஜனங்கள் பிரதிஷ்டையின் பல்வேறு நிலைவரங்களிலுள்ள தேவ ஊழியரால் நடத்தப்படுவார்களாயின், சபைகள், பொன் வெள்ளி விலையேறப்பெற்ற கல் இவைகளைப் போன்றவையாகவும், மரம் புல் வைக்கோல் இவைகளைப் போன்றவையாகவும் ஒன்றுக் கொன்று வித்தியாசமானவையாகக் காணப்படும் என்று அப். பவுல் கூறுகிறார். அஸ்திபாரம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தலாக இருந்தாலும், இப்பூமியில் பல வித்தியாசமான சபைகள் காணப்படுவதற்கு இதுவே காரணமாகும். எனவே அப். பவுல், "அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். ... அவனவனுடைய வேலைப் பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்" (I கொரி. 3 : 10 - 15) என்று நம்மை எச்சரிக்கிறார்.


'அக்கினி' என்பது, அக்கினி போன்ற பரிசோதனைகளைக் காட்டுகிறது (I பேதுரு 1 : 7 ; 4 : 12). பரிசுத்த ஆவியின் ஞான ஸ்நானம் பெற்ற அனைவரும் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படமாட்டார்கள். அதற்காக இப் பொழுதே அக்கினி போன்ற பரிசோதனைகளால் பரீட்சிக்கப் பட்டு, சபைகளின் நிலைவரம் தெளிவுபடுத்தப்படுகிறது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற சிலர், உலகத்தில் நிந்தைகள், பாடுகள், வியாதிகள் போன்ற பரீட்சைகளைச் சந்திக்கும்போது, தாங்கள் விட்டுவிட்டவைகளைத் திரும்ப எடுத்து, தங்கள் விசுவாசத்தை இழந்து, அழிந்துபோகிறார்கள். பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் இவைகளைப் போன்று அக்கினி சோதனைகளின் மத்தியில் எரிந்துபோகாமல் நிலைநிற்பவர்களே கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இதைக் குறித்தே, கர்த்தராகிய இயேசுவும் தமது மலைப் பிரசங் கத்தில் பேசியிருக்கிறார் (மத். 7 : 21 - 27). தேவனுடைய சித்தத் தின்படி செய்கிறவர்களே பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் இவைகளைப் போன்றவர்களாவர். தேவனுடைய சித்தம் செய்யாதவர்களால் கட்டப்படும் சபைகள் மரம், புல், வைக்கோல் இவற்றிற்கு ஒப்பாயிருக்கின்றன. அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்களாகவும், அந்நிய பாஷைகள் பேசுகிற வர்களாகவும், தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்களாகவும், அற்புதங் களைச் செய்கிறவர்களாகவும், பிசாசுகளைத் துரத்துகிறவர்களாகவும், "கர்த்தாவே! கர்த்தாவே!" என்று ஜெபம்பண்ணுகிறவர்களாகவு மிருந்தும், தேவசித்தம் செய்யாதபடியால் அவர்கள் கட்டும் வீடு அழிந்துபோகும்.

எனவே, வனாந்தரத்திலிருந்த ஆசரிப்புக் கூடாரம் இக் காலத்திலுள்ள பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற சபை களுக்கு நிழலாட்டமாயிருக்கிறது. இருப்பினும், புதிய ஏற்பாட்டின் காலத்தின் மெய்யான ஆசரிப்புக் கூடாரம் அப்போஸ்தலரால் கட்டியெழுப்பப்படும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற சபையாகும். தேவன் அதில் வாசமாயிருக்கிறார். 'சபை' என்று

அழைக்கப்படுகின்ற எல்லா அமைப்புகளும் மெய்யான ஆசரிப்புக் கூடாரமாயிருக்க முடியாது. பரிசுத்த ஆவியின் ஞான ஸ்நானம் பெற்ற சிலர், தங்கள் சபைகளைக் கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மீது கட்ட ஆரம்பிக்கிறார்கள். ஆனால், அப் போஸ்தல ஊழியத்திற்குத் தேவையான பிரதிஷ்டையில் அவர்கள் குறைவுபடுவதால், 'மரம், புல், வைக்கோல் முதலியவற்றால்' தங்கள் சபைகளைக் கட்டியெழுப்ப முற்படுகின்றனர். அக்கினி யால் சோதிக்கப்படும்போது அவர்கள் கட்டின கட்டடம் அழிந்து போகிறது. கிறிஸ்துவாகிய கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டு, முற்றிலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட அப்போஸ் தலரால் கட்டியெழுப்பப்படும் புதிய ஏற்பாட்டுச் சபையே மெய்யான கூடாரமாயிருக்க முடியும். அது, அக்கினி போன்ற சோதனைகளிலும் நிலைநிற்கிறது. இந்தச் சபையே கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும். இது வனாந்தரத் திலிருந்த கூடாரத்தின் உண்மைப் பொருள் ஆகும்.

## 4. பரலோகத்தில் கட்டப்படும் மெய்யான தேவாலயம்:

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக் கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" என்று எபிரெயர் 9 : 11, 12 - இல் நாம் காண்கிறோம். இந்த வாசஸ்தலத்தைப் பற்றியே கர்த்தராகிய இயேசு, "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; ... *ஒரு ஸ்தலத்தை* உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்" (யோவான் 14 : 2) என்று கூறினார். அந்த வேலை முடிந்த பின் அவர் வந்து தம்முடைய ஜனங்களைத் தம்மிடம் சேர்த்துக்கொள்வார் (வச. 3).



ஆசரிப்புக் கூடாரம்

தாம் ஆயத்தம்பண்ணப்போவதாகச் சொன்ன இந்த இடத்தைக் கிறிஸ்து இப்போது ஆயத்தமாக்கிக்கொண்டிருக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறின், மெய்யான கூடாரத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்து இப்போது தமக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார். இந்த ஆலயத்தைக் குறித்து எபேசியர் 2 : 19 - 22 - இல் நாம் வாசிக்கிறோம். இந்த நோக்கத்திற்காகவே கர்த்தராகிய இயேசு மரித்து உயிர்த்தெழுந்து, எல்லா வானங்களுக்கும் மேலாக மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள சீயோனில் மூலைக்கல்லாக வைக்கப்பட்டிருக்கிறார் (மத். 21 : 42). "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்தி பாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்" என்று ஏசாயாவின் தீர்க்கதரிசன புஸ்தகத்தில் உரைக்கப் பட்டிருப்பது இதைக் குறித்தேயாகும் (ஏசாயா 28 : 16 ; I பேதுரு 2 : 4 - 6). இம்மூலைக்கல்லின் மீது கட்டியெழுப்பப்படும் ஆவிக் குரிய கட்டடம் நித்தியத்தில் மெய்யான தேவாலயமாய் இருக்கும். கிறிஸ்துவின் கல்வாரி மரணத்திற்குப் பின்னரே இவ்வேலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஆலயத்திற்குச் சீயோனில் மூலைக்கல் போடப்பட் டிருப்பதால், அந்த மூலைக் கல்லின் மீது மற்ற அஸ்திபாரக் கற்களும் ஜீவனுள்ள கற்களும் சேர்த்துக் கட்டப்பட்டுவருகின்றன. இந்தக் கட்டடத்தின் ஒவ்வொரு கல்லும் சோதனை செய்யப்பட்ட பின்னரே அங்கே வைக்கப்படும். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் முதலான ஐந்து விதமான உத்தியோகஸ்தர்களின் மூலம் பரிசுத்த ஆவியானவர் இந்த ஆலயத்தைக் கட்டியெழுப்பிக்கொண்டி ருக்கிறார். "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறின வனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்" (கொலோ. 1 : 28) என்று

அப். பவுல் சொன்னபோது, அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் முதலியவர்களுடைய வேலையையே கருதினார். இவ்வாறு பரலோகத்தில் கட்டப்பட்டுவருகிற ஆலயத்திற்குக் கர்த்தராகிய இயேசுவே மூலைக்கல்லாயிருக்கிறார்; அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் அஸ்திபாரக் கற்களாய் இருக்கிறார்கள். இந்த அஸ்திபாரத்தின் மேல் இசைவாய் இணைக்கப்பட்டு கட்டியெழுப்பப்படும் ஜீவனுள்ள கற்கள் விசுவாசிகள் ஆவர். இந்தக் கட்டடம் ஐந்து விதமான பெயர்களால் அழைக்கப்படுகிறது. அவை: நகரம் (எபி. 12 : 22), வீடு (I தீமோ. 3 : 15), மாளிகை, ஆலயம், வாசஸ்தலம் (எபே. 2 : 21, 22) என்பன.

கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கும்படி மோசேக்குக் கட்டளையிட்டபோது, யூதா கோத்திரத்தில் பெசலெயேலையும், தாண் கோத்திரத்தில் அகோலியாபையும் ஞானத்தின் ஆவியினால் நிரப்பி, இந்த வேலைக்கு ஏற்படுத்தினார் (யாத். 31 : 2, 6). இவர்களுடன் சேர்ந்து நிற்கும்படி ஞான இருதயமுள்ள பலரைக் கர்த்தர் எழுப்பினார். இது கர்த்தருடைய ஊழியத்தில் வெவ்வேறான ஊழியங்களுக்கென்று அழைப்பு பெற்ற தேவ ஊழியர்கள் கலந்துகொள்வதைக் காண்பிக்கிறது. இதற்கென்று கர்த்தர் பலரை அபிஷேகம்பண்ணித் தெரிந்தெடுக்கிறார். ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கும்படி நியமிக்கப்பட்டவர்கள் கர்த்தர் மோசேக்குக் கொடுத்த வெளிப்படுத்தலின்படியே கிரியை செய்தார்கள். இவ்வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளும்படி மோசே தன் மாம்ச சம்பந்தமானவர்களை விட்டு வேறுபிரிந்து, தன் ஜீவனையும் வெறுத்து, இரவு பகல் நாற்பது நாட்கள் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் மலையிலே கர்த்தரோடு தங்கியிருந்தான். அவன் புதிய ஏற்பாட்டுச் சபையின் அப்போஸ்தலருக்கு அடையாளமாயிருக்கிறான். பெசலெயேலும், அகோலியாபும், ஞான இருதயமுள்ளவர்களான மற்ற பலரும், புதிய ஏற்பாட்டுச் சபையைக் கட்டும்படி அப்போஸ்தலருடன் சேர்ந்து நிற்கும் மற்ற தேவ

ஊழியர்களுக்கு அடையாளமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சபையானது நித்தியத்தின் மெய்யான தேவாலயமாய்க் கட்டப் பட்டு, கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப் பட்டு, நித்தியத்தில் வெளிப்படும் (வெளி. 21 : 2, 3).

கர்த்தராகிய இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பின்பு சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி உன்னதத்திற்கு எழுந் தருளினார் (எபே. 4 : 8). இது, 'ஆபிரகாமின் மடி' (லூக்கா 16 : 22) என்றழைக்கப்பட்ட பூமியின் தாழ்விடங்களிலிருந்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் (மனச்சாட்சியின் கால நியமம், நியாயப்பிரமாண கால நியமம், இடைக்கால நியமம் இவற்றைச் சேர்ந்த பரிசுத்தவான்கள்), கர்த்தராகிய இயேசுவின் மரணத்தி னாலும் உயிர்த்தெழுதலினாலும் விடுதலையாக்கப்பட்டு, உன்னத ஸ்தலத்தில் தங்களுக்குரிய இளைப்பாறும் இடமாகிய இரண்டாம் வானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்பதை வெளிப்படுத்து கிறது. அப். பவுல், தான் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கூறும்போது (II கொரி. 12 : 1, 2), அவர் முதலாம், இரண்டாம் வானங்களைக் கடந்து, அவற்றுக்கும் மேலான ஒரு இடத்தை அடைந்தார் என்பது விளங்குகிறது. முதலாம் வானம் இரட்சிக்கப்பட்டவர்களின் இளைப்பாறும் இடம் என்றும், இரண்டாம் வானம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான் களும் பொதுவான இரத்தசாட்சிகளும் உபத்திரவகால இரத்த சாட்சிகளும் இளைப்பாறும் இடம் என்றும், மூன்றாம் வானம், பூரணமாக்கப்பட்டு மரித்த புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் தாங்கள் உயிர்த்தெழும் வரை இளைப்பாறும் இடம் என்றும் நாம் அறிவோம். பூமிக்குரிய ஆசரிப்புக் கூடாரம் நிழலாட்டமாய்க் காண்பிக்கும் மெய்யான ஆலயம், நித்தியத்திலுள்ள மெய்யான கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலம் அதாவது புதிய எருசலேமும் சீயோனுமாகும்.

## 5. நித்திய வாசஸ்தலங்கள்:

வனாந்தரத்திலிருந்த ஆசரிப்புக் கூடாரம் நித்தியத்தில் காணப்படும் மெய்யான கூடாரத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது (எபி. 6 : 19, 20). கூடாரத்தில் மூன்று பிரிவுகள் இருந்தது போல நித்தியத்திலும் மூன்று இடங்கள் உண்டாயிருக்கும் (வெளி. 21 : 1 - 3). கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம், பிராகாரம் ஆகிய மூன்று இடங்களும் முறையே நித்தியத்தில் புதிய எருசலேம், புதிய வானம், புதிய பூமி ஆகிய மூன்று இடங்களைக் குறிக்கின்றன. தேவ ஊழியர்களும் விசுவாசிகளும் அடங்கிய புதிய ஏற்பாட்டுச் சபையின் பூரணமாகுதல் அல்லது புதிய எருசலேம் நகரத்தின் வேலை முற்றுப்பெறுதல் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் நிறைவேறும் (வெளி. 2 : 26 ; 3 : 21 ; 12 : 5 ; 19 : 7, 8 ; 21 : 9, 10). புதிய வானம் ஏழு வருட உபத்திரவ காலத்திற்குப் பின்பும், ஆயிர வருட அரசாட்சிக்கு முன்பும் நிறைவுபெறும் (வெளி. 20 : 4 - 6). இது பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கும், உபத்திரவ கால இரத்தசாட்சிகளுக்கும், பொதுவான இரத்தசாட்சிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள இடமாகும். இரட்சிக்கப்பட்டவர்களுக்குரிய இடமாகிய புதிய பூமியோ உலகத்தோற்றமுதல் ஆயத்தமாக்கப்பட்டிருந்தாலும் (மத். 25 : 34), ஆயிர வருட அரசாட்சியின் இறுதியில் நிறைவடைகிறது. இவ்விதம் இம்மூன்று இடங்களும் ஆயத்தமாக்கப்பட்டு முடிவுறும்போது, பிந்தின நித்தியம் ஸ்தாபிக்கப்படும். புதிய எருசலேமில் தேவன் வாசமாயிருப்பார் (வெளி. 21 : 2, 3). புதிய எருசலேமானது சீயோன், புதிய எருசலேம் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டதாகும். இவ்விரு இடங்களிலும் வாசமாயிருக்கிறவர்கள், தேவனோடுகூட நித்திய நித்தியமாய் அரசாளுவார்கள்.

அதிகாரம் 4


# மகா பரிசுத்த ஸ்தலமும் அதின் பணிமுட்டுகளும்

கிறிஸ்து மரித்தபடியால் மனிதன் பரலோகத்திற்குச் செல்லும் வழி திறக்கப்பட்டதென்று நாம் அறிவோம். தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்தது, திரைச்சீலைக்கப்பாலுள்ள மகா பரிசுத்த ஸ்தலம் நமக்காகத் திறக்கப்பட்டிருப்பதை வெளிப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலமானது 10 முழ நீளமும், 10 முழ அகலமும், 10 முழ உயரமும் உள்ளதாய் இருந்தது. பத்து என்பது நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் அது அன்பின் பிரமாணமாகும். ஆதலால், மகா பரிசுத்த ஸ்தலத்தின் அளவானது தேவ அன்பின் நீளமும் அகலமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து, அன்பில் பூரணப்படும் அனுபவத்தை வெளிப்படுத்துகிறது (எபே. 3 : 18, 19). ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தைப் போலவே, நித்தியத்தின் புதிய எருசலேமுங்கூட நீளமும் அகலமும் உயரமும் சம அளவு உள்ளதாய் உண்டாக்கப்படுகிறதென்பது இங்கே கவனிக்கப்படத்தக்கது (வெளி. 21 : 16).

பூமிக்குரிய கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டியும், கிருபாசனமும், பொன்னினால் செய்யப்

பட்ட கேருபீன்களும் வைக்கப்பட்டிருந்தன. அது தேவ மகிமையினால் நிரப்பப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இந்தக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் வருஷத்தில் ஒரு நாள் பிரவேசித்து, காளை, வெள்ளாட்டுக்கடா இவற்றின் இரத்தத்தினால் முதலாவது தனக்காகவும், தன்னுடைய வீட்டாருக்காகவும், பின்பு எல்லா இஸ்ரவேலருக்காகவும் பிராயச்சித்தம் பண்ணினான். அந்தப்படியே புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய கர்த்தராகிய இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தோடு பரலோகத்திலுள்ள கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தார் (எபி. 9 : 12). அவர் அங்கிருந்து பரிசுத்த ஆவியைப் பூமிக்கு அனுப்பினார் (அப். 2 : 33). அந்தப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அம்மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கும்படி முத்திரையிடப்பட்டிருக்கிறார்கள் (எபே. 1 : 13).

உடன்படிக்கைப் பெட்டியானது, கிறிஸ்துவாகிய மூலைக் கல்லின் மேலும், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேலும் சேர்த்துக் கட்டப்படும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற தேவசபையைக் காட்டுகிறது (எபே. 2 : 19 - 22). கிறிஸ்து தமது சரீரமாகிய சபைக்குத் தலையாயிருக்கிறார். இச்சபையானது தேவாலயம் என்றும் புதிய எருசலேம் என்றும் கிறிஸ்துவின் மணவாட்டி என்றும் அழைக்கப்படுகிறது. கிருபாசனம் - கிறிஸ்துவையும், கேருபீன்கள் - தங்களை வெறுமையாக்கின தேவ ஊழியரையும் குறிக்கின்றன. தேவ ஊழியர்கள் சீயோனாய்க் காணப்படுகிறார்கள் (சங். 80 : 1 ; 50 : 2). இவ்வாறு மகா பரிசுத்த ஸ்தலம் என்பது, கிறிஸ்துவாகிய மூலைக்கல்லின் மேல் கட்டப்பட்ட சீயோனும் புதிய எருசலேமுமாகும்; ஒரு சரீரத்தில், காணப்படுகிற பகுதியாகிய சரீரமும், காணப்படாத பகுதியாகிய ஜீவனும் இருப்பது போல, இந்த மணவாட்டியிலும், காணப்படுகிற பாகம் புதிய எருசலேமாகவும், காணப்படாத பாகம் சீயோனாகவும் விளங்கும். இவ்விடங்களை உண்டாக்குவதற்காகவே கிறிஸ்து மரித்தார் (எபே. 5 : 26, 27).



பரிசுத்த ஸ்தலமும் மகா பரிசுத்த ஸ்தலமும்

**கூடாரத்தில் உபயோகிக்கப்பட்ட மரம்:**

ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகளில் பெரும் பாலானவை சீத்திம் மரத்தினால் செய்யப்பட்டு (யாத். 25 : 10), பொன், வெள்ளி, வெண்கலம் ஆகிய உலோகங்களால் பொதியப் பட்டிருந்தன. இம்மரம் கலிலேயாக் கடலிலிருந்து உப்புக்கடல் வரையுள்ள யோர்தானின் பள்ளத்தாக்குகளில் வளருகிறது. இது சீனாய் வனாந்தரத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. சீத்திம் மரத்தில் பல இனங்கள் உள்ளன. அவற்றில் சில, உட்" 'க் கடலைச் சுற்றியுள்ள பள்ளத்தாக்குகளில் காணப்படுகின்றன. வேறு சில, சீனாய் வனாந்தரத்தின் தென்பகுதியிலும், எகிப்திலும், மற்றும் சில, பலஸ்தீனாவின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. அவற்றுள் சிறிய மரங்கள் முட்களுள்ளவையாக இருக்கும். எகிப்தியர் படகுகள் செய்ய இம்மரத்தைப் பயன்படுத்திவந்தனர். சரித்திர ஆசிரியரான ஜோஸஃபஸ் என்பவர் நீடித்து உழைக்கக்கூடிய இதன் தன்மையைக் குறித்தும் பெலத்தைக் குறித்தும் பேசியிருக் கிறார். பதினைந்து அல்லது இருபத்தைந்து அடி உயரம் வரை வளரும் இம்மரம், மிகவும் கடினமானது.

கூடாரத்தில் உபயோகிக்கப்பட்ட சீத்திம் மரம், மனுஷீக சுபாவத்தை வெளிப்படுத்துகிறது. காட்டு மரமாய் வனாந்தரத்தி லிருந்த இம்மரம் கூடார வேலைக்கு உபயோகிக்கப்பட்டது. அப்படியே காட்டு மரத்தைப் போன்ற முரட்டு சுபாவம் உள்ள மனிதரைக் கொண்டு நித்திய கூடாரத்தின் உபகரணங்கள் உண்டாக்கப்படுகின்றன. முட்களுள்ள இம்மரம், பலவிதமான பெலவீனங்களும் குறைவுகளும் உள்ள மனிதனைக் குறிக்கிறது. இவனைக் கர்த்தர் தேடி வருகிறார்; இம்மரத்தின் முட்களைப் போன்ற அவனுடைய பாவங்களை நீக்குகிறார். அது பூமியில் தழைத்து நின்ற இடத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்டு, தன் வேர்களிலிருந்து வேறுபிரிக்கப்பட்டு அழகான பலகைகளாக அறுக்கப்பட்டு இழைக்கப்படுவது போல, மனிதன் பூமியி லிருந்தாலும் அவனைக் கர்த்தர் பூமியிலிருந்து பிரித்தெடுத்து,

தம்முடைய இருதயத்திற்கேற்றவனாகும்படி அவனைப் பரிசுத்த மாக்குகிறார். அவர் அவனைத் தேவசமுகத்தில் இருக்கத்தக்கவனாய் மாற்றி, தம்முடைய ஆலயத்தில் சேர்த்துக்கொள்ளுகிறார். சீத்திம் மரம் கூடாரத்தில் பல இடங்களில் உபயோகிக்கப்பட்டிருந்தது போல, மனிதனும் தன்னுடைய அழைப்பின்படி புதிய ஏற்பாட்டுச் சபையில் இப்பொழுதும், பின்பு நித்தியத்திலும் பல நிலைகளில் வைக்கப்படுகிறான்.


மலையிலே மோசேக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே கூடாரமும் அதினுடைய ஒவ்வொரு பணிமுட்டும், இஸ்ரவேல் ஜனங்கள் கொடுத்த மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு உண்டாக்கப்பட்டன. நாம் கர்த்தருக்கென்று நம்மையும் நமக்குள்ள யாவற்றையும் மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் செலவிடுவதினால் மாத்திரமே பரலோக வாசஸ்தலமாக உரு வாக்கப்படக் கூடும்.

***மகா பரிசுத்த ஸ்தலத்தில், உடன்படிக்கைப் பெட்டியும் கிருபாசனமும் பொன்னினால் செய்யப்பட்ட கேருபீன்களும் காணப்பட்டன.***

## உடன்படிக்கைப் பெட்டி

(யாத். 25 : 10 - 16)

ஆசரிப்புக் கூடாரத்தில், வேறெந்தப் பொருளையும் செய்யும் முன்னதாக, முதன்முதலாக உண்டாக்கும்படி கர்த்தர் கட்டளையிட்ட பணிமுட்டு 'உடன்படிக்கைப் பெட்டி' ஆகும். இது 2½ முழ நீளமும், 1½ முழ அகலமும், 1½ முழ உயரமும் உள்ளதாயிருந்தது. இந்தப் பெட்டி, பின்வரும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது: (i) *சாட்சிப் பெட்டி*, (ii) *உடன்படிக்கைப் பெட்டி*, (iii) *தேவனுடைய பெட்டி*, (iv) *வல்லமை விளங்கும் பெட்டி*, (v) *கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டி*, (vi) *சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய பெட்டி*.



உடன்படிக்கைப் பெட்டி

(i) **சாட்சிப் பெட்டி** (யாத். 25 : 22):

உடன்படிக்கைப் பெட்டியில் சாட்சிப் பிரமாணம் வைக்கப் பட்டிருந்தது (யாத். 25 : 16). இது, தேவன் இஸ்ரவேலரின் மத்தி யிலே, அவர்களோடுகூட இருக்கிறார் என்பதற்குத் தேவனால் கொடுக்கப்பட்ட சாட்சியாயிருந்தது. பரிசுத்த ஆவியின் ஞான ஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் சாட்சியின் பெட்டியாகக் காணப்பட வேண்டும். இந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் படியாக, ஒருவன் மனந்திரும்பி, தண்ணீர் ஞானஸ்நான சத்தியத் திற்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழு வதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப். 1 : 8) என்று கூறப்பட்டுள்ளபடி, பரிசுத்த ஆவியானவரே நம்மைச் சாட்சிகளாய் மாற்றுகிறார்.

(ii) **உடன்படிக்கைப் பெட்டி** (எண். 10 : 33):

தேவன் தம்முடைய ஜனங்களோடு உடன்படிக்கை செய்ததின் நிமித்தம் இப்பெட்டி உடன்படிக்கைப் பெட்டி என அழைக்கப்பட்டது. ஒரு உடன்படிக்கை செய்வதற்கு இரண்டு பேராவது அவசியம். அப்படியே தேவனும் மனுஷனும் ஒரு உடன்படிக்கைக்கு உட்படுகிறார்கள். இந்த உடன்படிக்கைக்காகத் தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் ஒரு புஸ்தகத்தில் எழுதிக் கொடுத்தார். அவர்கள் தங்கள் அங்கீகரிப்பின் அடையாளமாக, "சர்வாங்க தகனபலி களைச் செலுத்தி, கர்த்தருக்குச் சமாதானபலிகளாகக் காளை களைப் பலியிட்டார்கள். அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலி பீடத்தின்மேல் தெளித்து, உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காதுகேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்ன படியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்.

அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்" (யாத். 24 : 5 - 8). இவ்விதம் கர்த்தரும் அவருடைய ஜனங்களும் உடன்படிக்கையினால் ஐக்கியப்பட்டார்கள்.

இப்பெட்டி, உடன்படிக்கைப் பெட்டி என்று அழைக்கப் பட்டது மாத்திரமல்ல, அதற்குள் வைக்கப்பட்ட இரண்டு கற்பலகைகளும் உடன்படிக்கையின் கற்பலகைகள் என்று அழைக்கப்பட்டன (எபி. 9 : 4). இப்படியே புதிய ஏற்பாட்டின் காலத்திலும் கர்த்தர் தம்முடைய இரத்தத்தினால் தம்முடைய ஜனங்களோடு உடன்படிக்கை பண்ணி தம்முடைய பிரமாணங் களை அவர்களுடைய இருதயங்களில் வைக்கிறார் (எபி. 10 : 16). அவைகள் கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலே எழுதப்படுகின்றன (II கொரி. 3 : 3). பரிசுத்த ஆவி யின் ஞானஸ்நானம் பெற்ற தேவஜனங்கள் இவ்வனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

மோசேக்குக் கட்டளையிடப்பட்டபடி கர்த்தருடைய நியாயப்பிரமாணங்களையும் கட்டளைகளையும் அவன் ஒரு புஸ்தகத்தில் எழுதி வாசித்தபோது, "கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம்" என்று இஸ்ரவேலர் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணினார்கள். பன்னிரண்டு கோத்திரங்களும் கர்த்தரோடு உடன்படிக்கை செய்ததற்கு அத்தாட்சியாக பன்னிரண்டு தூண்கள் நிறுத்தப்பட்டன (யாத். 24 : 4). அங்கே ஒரு பலிபீடம் உண்டாக்கப்பட்டு, அதின்மேல் காளைகள் பலியிடப் பட்டன. நமக்காகத் தமது கடைசித் துளி இரத்தத்தையும் சிந்திய கர்த்தராகிய இயேசுவுக்காக, நம்முடைய கடைசித் துளி இரத் தத்தையும் கொடுக்கும்படி நாம் தீர்மானித்து அவருடன் உடன்படிக்கை பண்ண வேண்டும். "கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம்" என்று இஸ்ரவேல் ஜனங்கள்

சொன்னதின் கருத்து இதுவேயாகும். இப்படி உடன்படிக்கை செய்யும் ஒவ்வொருவருடைய இருதயமாகிய சதையான பலகையிலும் கர்த்தர் ஆவியினால் தமது பிரமாணங்களை எழுதுகிறார். இதனால் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் உடன்படிக்கைப் பெட்டி என்று அழைக்கப் படலாம்.

இந்தப் பெட்டியின் நீளம் 2½ முழமும், அகலம் 1½ முழமுமாகும். இரண்டு நீளங்களும் சேர்த்து 5 முழமும், இரண்டு அகலங்களும் சேர்த்து 3 முழமும் ஆகின்றன. 5 என்பது ஐம்புலன்களையுடைய மனிதனையும், 3 என்பது திரித்துவ தேவனையும் குறிக்கும் இலக்கங்களாகும். மனுஷனும் தேவனும் உடன்படிக்கைபண்ணுவதை இது நிழலாட்டமாய்க் குறிக்கிறது.

**(iii) தேவனுடைய பெட்டி** (I சாமு. 3 : 3):

உடன்படிக்கைப் பெட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள மற்றொரு பெயர் 'தேவனுடைய பெட்டி' என்பதாகும். நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் (I கொரி. 3 : 16 ; 6 : 19 ; எபே. 1 : 14). தம்முடைய விலையேறப்பெற்ற பொருட்களை வைக்கும்படியாகத் தேவனுக்கு ஒரு பெட்டி தேவையாயிருந்தது. இந்தப் பெட்டிக்குள் அவரால் கொடுக்கப்பட்ட கற்பனைகள் எழுதப்பட்டிருந்த *இரு கற் பலகைகள்* வைக்கப்பட்டன. இது நாம் தேவனிலும் மனுஷரிலும் அன்புகூருவதைக் காட்டுகிறது (மத். 22 : 37 - 40). புதிய ஏற் பாட்டில் தேவனுடைய அன்பாகிய பொக்கிஷம், பரிசுத்த ஆவி யின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவருக்குள்ளும் வைக்கப் படுகிறது (ரோமர் 5 : 5). இப்பெட்டிக்குள் *மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும்* இருந்தது. இது தேவனிடத்திலிருந்து ஒருவர் பெற்றுக்கொள்ளும் வெளிப்படுத்தல்களைக் காண்பிக்கிறது. இந்த வெளிப்படுத்தலில் விசுவாசத்தின் ஐசுவரியம், கிருபையின் ஐசு வரியம் முதலியவை அடங்கியுள்ளன. புதிய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவருக்குள்ளும்

இவை வைக்கப்படுகின்றன. அப்படியே *ஆரோனுடைய தளிர்த்த கோலும்* இந்தப் பெட்டிக்குள் இருந்தது. இது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஒரு தேவபிள்ளையில் கிரியை செய்யும் உயிர்த்தெழுதலின் வல்லமையைக் காண்பிக்கிறது. இந்தப் பெட்டி, தேவனுடைய பெட்டி என்று அழைக்கப்படுவதினால் இது, மேற் கூறப்பட்டுள்ள அவருடைய சகல ஐசுவரியங்களும் வைக்கப் படும்படி அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட விலையேறப்பெற்ற பரிசுத்தவான்களைக் குறிக்கிறது.

**(iv) வல்லமை விளங்கும் பெட்டி** (சங். 132 : 8):

தேவன் எங்கே இருக்கிறாரோ, அங்கே அவருடைய வல்லமையும் உண்டு. இஸ்ரவேலர் இப்பெட்டியுடன் முன்னேறிச் சென்றபோது அவர்களுடைய சத்துருக்கள் சிதறடிக்கப்பட்டார்கள் (எண். 10 : 35). எனவே இது 'வல்லமை விளங்கும் பெட்டி' என்று அழைக்கப்பட்டது. "தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது" (I கொரி. 4 : 20). பரிசுத்த ஆவி யின் அபிஷேகத்தின் மூலமாய் இந்தத் தேவனுடைய ராஜ்யம் பெலத்தோடு நமக்குள் வருகிறது (மாற்கு 9 : 1). பரிசுத்த ஆவியின் பெலத்தினால் செய்யப்படும் அற்புதங்களினாலும் அடையாளங் களினாலும் எவ்விதம் புறஜாதியார் கீழ்ப்படுத்தப்படுகிறார்கள் என அப். பவுல் கூறுகிறார் (ரோமர் 15 : 18). இந்தக் கிரியை பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவர் மூலமாகவும் நடைபெறுகிறது. அற்புத அடையாளங்கள் செய்யப்படுவது மட்டுமல்ல, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொரு வரும் பூரணத்திற்குப் போகும் பாதையில் தேவனுடைய பலத்தினாலே காக்கப்படுகிறார்கள் என்பதையும் நாம் இங்கே நினைவிற்கொள்ள வேண்டும் (I பேதுரு 1 : 5). ஆனபடியால், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற தேவபிள்ளைகள் ஒவ்வொருவரும் வல்லமை விளங்கும் பெட்டியாகக் காணப் படுகிறார்கள்.

(v) **கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டி** (I இராஜா. 2 : 26):

உடன்படிக்கைப் பெட்டி, 'கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டி' எனவும் அழைக்கப்பட்டது. 'ஏலோஹிம்' என்பது கர்த்தருக்கு உபயோகிக்கப்பட்டுள்ள பன்மைப் பெயராகும். இது தேவன் திரித்துவர் என்பதை வெளிப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவருக்குள்ளும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவராகிய திரித்துவ தேவன் வாசம் பண்ணுகிறார் (யோவான் 14 : 16, 20). எனவே அவர்கள் தங்களோடு தொடர்புகொள்ளும் ஒவ்வொருவருக்கும் பிதாக்களைப் போல் இருந்து, தங்களுடைய ஆவிக்குரியதும் சரீரத்திற்குரியதுமான ஆசீர்வாதங்களை அவர்களுக்கும் பகிர்ந்தளித்து, ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு இரங்குகிறது போல இரக்கமுள்ளவர்களாயிருந்து உதவி செய்ய வேண்டும்; குமாரனைப் போல அவர்கள் தங்களோடு தொடர்புகொள்ளும் ஒவ்வொருவருக்காகவும் பாடுபட்டு, கடைசித் துளி இரத்தத்தையும் சிந்த ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும்; பரிசுத்த ஆவியானவரைப் போல அவர்கள் தங்களோடு தொடர்புகொள்ளும் ஒவ்வொருவருக்காகவும் தேவனிடத்தில் பரிந்துபேசி, வேண்டுதல் செய்து, அவர்கள் பரிசுத்தத்தின் பாதையில் நடக்கும்படி அவர்களுக்கு உதவி செய்கிறவர்களாயிருக்க வேண்டும். இப்படி திரித்துவ தேவனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவருக்குள்ளும் வாசம் பண்ணுவதால், அவர்கள் கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டி என்று அழைக்கப்படலாம்.

(vi) **சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய பெட்டி** (யோசுவா 3 : 11):

தேவன் இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கையின் மூலம் அவர்களுடைய ஆண்டவராயிருந்து அவர்களை ஆசீர்வதித்தார். அது மட்டுமன்றி, முழு உலகத்திற்கும் அவர்கள் மூலமாய் இரட்சிப்பு உண்டாகிறது. அதனாலேயே, "இரட்.சிப்பு யூதாகள்

வழியாய் வருகிறது" என்று கர்த்தராகிய இயேசு சொன்னார் (யோவான் 4 : 22). இவ்வாறு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் சர்வ பூமிக்கும் ஆசீர்வாதமாக இருப்பதால், சகல சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கும் பணி அவர் களிடம் ஒப்புவிக்கப்படுகிறது (கொலோ. 1 : 23). எனவே, அவர்கள் சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய பெட்டி என அழைக்கப்படுகிறார்கள்.

இப்படியே, பல்வேறு பெயர்களைக் கொண்ட இந்த உடன் படிக்கைப் பெட்டி, தனிப்பட்ட ஒவ்வொரு விசுவாசிக்கும், தேவ னுடைய சபைக்கும் அடையாளமாயிருக்கிறது. அவர்கள் கர்த்த ருடைய ஆசீர்வாதங்களை மனுஷருக்குக் கொண்டுவரும் ஏதுக் களாக இருக்கிறார்கள்.

உடன்படிக்கைப் பெட்டியைக் குறித்தும், அதற்குள் வைக்கப்பட்டிருந்த பொருட்களைக் குறித்தும் சற்று விவரமாய் நாம் காண்போம்.

**பசும்பொன்னால் பொதியப்பட்டது:**

பசும்பொன் மகா பரிசுத்தமான விசுவாசத்தைக் காண் பிக்கிறது. நாம் தேவனுடைய அதே நீதியாலும் மகிமையாலும் தரிப்பிக்கப்படும் வரை அப்போஸ்தல உபதேசத்தினால் கட்டி எழுப்பப்படுவதின் மூலம் விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்குக் கடந்து சென்று, விசுவாசத்தில் பூரணராக்கப்படுகிறோம் (ரோமர் 1 : 17 ; யூதா 20). மனிதன் பாவம் செய்தபோது, அவன் தனக்கு வஸ்திரமாகக் கொடுக்கப்பட்டிருந்த தேவமகிமையை இழந்தான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாகவும் உயிர்த்தெழுதலின் மூலமாகவும் தேவன் விழுந்துபோன மனித னோடு மறுபடியும் ஒரு உடன்படிக்கைக்குள் பிரவேசித்து, அவ னுக்குத் தம்முடைய நீதியைத் தரிப்பித்து, அவனைத் தம் மகிமைக்குள் கொண்டுவருகிறார் (II கொரி. 5 : 18 ; II தெச. 2 : 14). கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்

பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள், பூரணமான தேவ நீதியையும் தேவ மகிமையையும் தரித்தவர்களாய் (வெளி. 19 : 8), 'மெய்யான கூடாரத்தின்' மகா பரிசுத்த ஸ்தலத்தில் காணப்படுவார்கள் (எபி. 8 : 2). அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து அப். பேதுரு, "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (I பேதுரு 1 : 7) என்று கூறுகிறார்.

**சுற்றிலுமிருந்த திரணை:**

உடன்படிக்கைப் பெட்டியில் செய்யப்பட வேண்டிய வேலைகளெல்லாம் முடிவுற்றன என்பதையே இத்திரணை காண்பிக்கிறது. கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் பரிசுத்தவான்கள் பூரணமான தேவநீதியைத் தரித்துக்கொண்டவர்களாயிருப்பது மாத்திரமல்ல, அவர்கள் நீதியினால் முடிசூட்டப்படுகிறார்கள் என்பதை இத்திரணை வெளிப்படுத்துகிறது. அப். பவுலும் இதற்குச் சாட்சியாக, "ஓட்டத்தை முடித்தேன், ... இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (II தீமோ. 4 : 7, 8) என்று கூறுகிறார்.

**உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த பொருட்கள்**

**1. இரண்டு கற்பலகைகள்:**

உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த இரண்டு கற்பலகைகளில், பத்து கற்பனைகள் எழுதப்பட்டிருந்தன. முதல் நான்கும் - தேவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள சம்பந்தத்தையும், மீதியான ஆறும் - மனுஷனுக்கும் மனுஷனுக்கும்

இடையே உள்ள சம்பந்தத்தையும் வெளிப்படுத்துகின்றன. முதலாம் உடன்படிக்கையின் கீழ் கொடுக்கப்பட்டு, இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்த பிரமாணமானது எழுத்திற் குரியதாயிருந்தது. இருப்பினும் புதிய உடன்படிக்கையில் கொடுக் கப்பட்டுள்ள தேவனுடைய பிரமாணமானது எழுத்திற்குரியதா யிராமல் ஆவிக்குரியதாயிருந்து, ஜீவனுள்ள தேவனுடைய ஆவி யினால் இருதயங்களாகிய சதையான பலகைகளில் எழுதப் படுகிறது (II கொரி. 3 : 3). இந்த ஆவிக்குரிய பிரமாணம் அன்பின் பிரமாணமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு இப்பத்து கற்பனை களையும் புதிய ஏற்பாட்டில் அன்பின் பிரமாணமாக, இரு கற்பனைகளுக்குள் கொண்டுவருகிறார் (மத். 22 : 37 - 40). அவை, (i) "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக"; (ii) "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்பவையே.

இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமை யும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கின்றன என்பதை வெளிப் படுத்தும்பொருட்டு, இரண்டு கற்பலகைகள் உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தன.

பழைய உடன்படிக்கையில் அறியப்படாத இரண்டு புதிய அனுபவங்களை நாம் புதிய உடன்படிக்கையின் கீழ் பெற்றுக் கொள்ளுகிறோம்.

(a) ***தன்னில் பாவங்களுண்டென்ற குற்ற மனச்சாட்சி இல்லாத ஒரு பூரணத்துவம்:***

முதலாம் உடன்படிக்கையின்படி தேவனோடு ஐக்கியங் கொள்ளுவதற்காக ஒருவன் எல்லாவிதமான பலிகளையும் செலுத்தினாலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாதாகையால், அவை அவ னுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவையாயிருந்தன.

பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருந்தது (எபி. 10 : 2, 3). ஆனால் புதிய உடன்படிக்கையில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனச் சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கிறது (எபி. 9 : 14). அன்றியும் தேவன், "நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபை யாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" (எபி. 8 : 12) என்கிறார். எனவே, மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது (எபி. 10 : 19, 20).

(b) ***தேவனைக் குறித்த பூரண அறிவு:***

பழைய ஏற்பாடு வாசிக்கப்படும்போது இஸ்ரவேல் புத்திர ருடைய முகத்தை மூடிய, அதாவது அவர்கள் மனதைக் குருடாக்கிய ஒரு முக்காடு இருந்தபடியால் அவர்கள் நியாயப் பிரமாணத்தின் முடிவான அர்த்தத்தை நோக்கிப்பார்க்க முடிய வில்லை (II கொரி. 3 : 13, 14). ஆகவே அவர்கள் அதை எழுத்தின்படியே விளங்கிக்கொண்டனர். புதிய உடன்படிக்கையின் கீழ் அந்த முக்காடு நீக்கப்பட்டு, பிரமாணமானது நம்முடைய இருதயங்களில் வைக்கப்பட்டு, நம்முடைய மனதில் எழுதப் படுகிறது (எபி. 10 : 16). "அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகை யால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலா னுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டு வதில்லை" (எபி. 8 : 11) என்பது வாக்குத்தத்தம். மனந்திரும்பு தலின் அனுபவத்தின் மூலமாகவும், புதிய உடன்படிக்கையின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுவதின் மூலமாகவும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதலின் ஒரு கிரியை நம் இருதயங்களில் நடைபெறுகிறது. அதன் மூலமாக நம்முடைய கல்லான இருதயம் நம்மிலிருந்து நீக்கப்பட்டு, ஒரு சதையான இருதயத்தை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம் (எசே. 36 : 26). அதற்குப் பின்பு, பரிசுத்த

ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக தேவ அன்பு நம் இருதயங்களில் ஊற்றப்படுகிறது (ரோமர் 5 : 5). ஒரு முத்திரையானது உருக்கப்பட்ட மெழுகின் மேல் அழுத்தப்படும்போது எவ்விதமாக அதிலுள்ள எழுத்துக்கள் அந்த மெழுகில் பதிந்துவிடுகின்றனவோ, அவ்விதமாகவே, அதே ஆவியினாலே தேவனுடைய வார்த்தை அன்பின் வார்த்தையாக நம்முடைய இருதயங்களில் பதிக்கப்படுகிறது. நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்ட தேவ அன்பானது, நாம் தேவனையும், பின்பு மற்றவர்களையும் நேசிக்கத்தக்கதாக நம்முடைய இருதயங்களை விசாலமாக்குகிறது.

தேவ அன்பினால் நம்முடைய இருதயம் நிறைந்து வழிந்துகொண்டிருந்தாலும், நம்முடைய மனது உடனடியாகப் பூரணமாகப் பரிசுத்தமாக்கப்படுவதில்லை. நம் மனது', தேவ அன்பினால் நிறைந்து வழிந்துகொண்டிருக்கும் இருதயத்தினால் நடத்தப்படும்போது, ஒவ்வொரு நாளும் அது புதிதாக்கப்படுகிறது. அப்போது அன்பின் வெளிப்படுத்தல் அன்பின் வார்த்தைகளாக மாற்றப்பட்டு, ஒவ்வொன்றாக நம் மனதில் எழுதப்படுகிறது. எவ்வளவதிகமாய் நம்முடைய மனது பரிசுத்தமாக்கப்படுகிறதோ, அவ்வளவதிகமாய் நாம் நம்முடைய சரீரங்களைத் தேவசித்தம் செய்ய ஒப்புக்கொடுக்கக் கூடியவர்களாகிறோம். அதன் மூலம் நம்முடைய சரீரம் பரிசுத்தமாக்கப்பட்டு, நாம் கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ந்து, அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும்படி படிப்படியாக ஆயத்தமாக்கப்படுகிறோம்.

## 2. மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம்:

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் வந்தபோது அவர்கள் ஒவ்வொரு நாளும் மன்னாவைப் பொறுக்கிப் புசித்துவந்தார்கள். அவர்கள் வனாந்தரத்தில் ஜீவித்த காலம் முழுவதும் அதைப் புசித்தார்கள். வானத்திலிருந்திறங்கிய இந்த மன்னா, பரலோகத்திலிருந்திறங்கின ஜீவ அப்பமாகிய கர்த்தராகிய இயேசுவுக்கு

நிழலாட்டமாயிருக்கிறது. "அப்பொழுது மோசே: கர்த்தர் கட்டளை யிட்ட காரியம் என்னவென்றால், நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, வனாந்தரத்தில் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பத்தை உங்கள் சந்ததியார் பார்க்கும்படிக்கு, அவர்களுக்காக அதைக் காப்பதற்கு, அதிலே ஒரு ஓமர் நிறைய எடுத்து வைக்கவேண்டும் என்றான். மேலும், மோசே ஆரோனை நோக்கி: நீ ஒரு கலசத்தை எடுத்து, அதிலே ஒரு ஓமர் அளவு மன்னாவைப் போட்டு, அதை உங்கள் சந்ததியாருக்காகக் காப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியிலே வை என்றான்" (யாத். 16 : 32, 33). கர்த்தர் மோசேக்குக் கட்டளை யிட்டபடியே ஆரோன் ஒரு பொற்கலசத்தை எடுத்து, ஒரு ஓமர் அளவு மன்னாவை அதிலே போட்டு, இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாருக்காகக் காக்கப்படும்படியாக அதைக் கர்த்தருடைய சந்நிதியில் வைத்தான் (வச. 34).

உடன்படிக்கைப் பெட்டிக்குள் பொற்கலசத்தில் வைக்கப் பட்டிருந்த மன்னா, கிறிஸ்துவை அறிகிற அறிவைக் குறிக்கிறது. இந்த அறிவை நாம் அவரைப் பற்றிய வெளிப்படுத்தலின் மூலமாகப் பெற்றுக்கொள்கிறோம். இவ்வெளிப்படுத்தல் பூமிக் குரிய சிந்தையுள்ள மனுஷனுடைய மனதைப் புதுப்பித்து, அதை ஒரு பொற்கலசம் போல் மாற்றுகிறது: "நீங்கள் இந்தப் பிரபஞ்சத் திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரிய மும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12 : 2). தம்முடைய பிரமாணங்களை மனுஷனுடைய மனதில் எழுதுவதாகக் கர்த்தர் வாக்குப்பண்ணினது இதுவேயாகும் (எபி. 10 : 16).

ஒவ்வொரு நாளும் நம் மனதில் எழுதப்படுகிற கர்த்த ருடைய பிரமாணங்கள், பொற்கலசத்தில் வைக்கப்பட்டிருந்த மன்னாவைப் போல் ஒரு ஓமர் அளவுள்ளதாயும், தனித்தனி வஸ்துக்களாயும் இருக்கின்றன. ஒரு ஓமர் என்பது பூரண

பரிசுத்தமாகுதலைக் குறிக்கிறது. மேலும் மணவாட்டியின் கன்னங்கள் வெடித்த மாதளம்பழம் போல் இருக்கிறதென்று நாம் வாசிக்கிறோம்: "உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் (Eng. நெற்றி - மனது) வெடித்த மாதளம்பழம்போலிருக்கிறது" (உன். 4 : 3). மன்னா தனித்தனி வஸ்துக்களாகக் காணப்பட்டது போலவே, ஒரு மாதளம்பழத்தின் ஒவ்வொரு முத்தும் தனித் தனியாகக் காணப்படுகிறது. நம்முடைய மனது தேவ வசனத்தி னாலுண்டாகும் வெளிப்படுத்தலினால் எவ்விதம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்க வேண்டுமென்பதையும், அவ்வெளிப்படுத்தல் மனதின் பூரண பரிசுத்தமாகுதலுக்கு எவ்வளவு இன்றியமையாததா யிருக்கிறதென்பதையும் இதிலே நாம் காணலாம்.

இஸ்ரவேலர் தங்கள் பிரயாணத்தின் ஆரம்பத்தில் வனாந் தரத்தில் கண்ட மன்னாவும், அவர்கள் தங்கள் யாத்திரையை முடிக்கும்போது பெய்த மன்னாவும் ஒரே விதமாய் இருந்தன. ஒரு தேவபிள்ளை தேவனோடு ஒரு புதிய உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கும்போது பெற்றுக்கொண்ட வெளிப்படுத்தலை, அவன் தன்னுடைய ஓட்டத்தை முடிக்கும் வரையிலும் மாற்றக் கூடாது என்பதே இதன் கருத்தாகும். ஆதி அப்போஸ்தலர் தாங்கள் ஆரம்பத்தில் பெற்றுக்கொண்ட வெளிப்படுத்தலுக்கு முடிவுபரி யந்தமும் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள். அப். பவுல், "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலா. 1 : 8) என்று கூறுகிறார்.

இன்றைக்கு நாம் காணும் சிலர், பரிசுத்த ஆவியைப் பெற்று புதிய உடன்படிக்கைக்குள் பிரவேசித்து சில காலம் கழிந்த பின்பு, தங்கள் வெளிப்படுத்தல்களை மாற்றி, தங்கள் ஆதி நிலைமையிலிருந்து விழுந்துபோகிறார்கள். அவர்கள் ஒளியி லுள்ள பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை விட்டுப் பிரிந்து துர்ப்போதனைக்காரராய் மாறிப்போகிறார்கள். எனவே நாம்

ஆரம்பத்தில் பெற்றுக்கொண்ட வெளிப்படுத்தலுக்குக் கடைசி பரியந்தம் உண்மையாயிருக்க வேண்டும். அப். பவுல், "ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" (அப். 20 : 24) என்று கூறுகிறார்.

### 3. ஆரோனுடைய தளிர்த்த கோல்:

உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளிருந்த ஆரோனுடைய தளிர்த்த கோல் நமக்கு எதை வெளிப்படுத்துகிறது? இஸ்ரவேல் புத்திரரினிடையே ஆசாரியத்துவத்தைக் குறித்துத் தர்க்கம் உண்டானபோது, கர்த்தர் லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஆரோனின் ஆசாரிய ஊழியத்தை உறுதிப்படுத்தும்படி கிரியை செய்தார் (எண். அதி. 17). அவர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுவினிடத்தில், ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோலை வாங்கி, அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதுவாயாக. லேவியினுடைய கோலின்மேல் ஆரோனின் பேரை எழுதக்கடவாய்" (வச. 2 , 3) என்றார். அவ்வாறே பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்தும் பன்னிரண்டு கோல்கள் கொண்டுவரப்பட்டன. லேவி கோத்திரத்தாருக்குரிய கோலின் மேல் ஆரோனுடைய பெயர் எழுதப்பட்டது. இவை மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் கர்த்தருடைய சமுகத்தில் ஒரு இரவு முழுவதும் வைக்கப்பட்டிருந்தன. மறுநாள் மோசே கூடாரத்தினுள் சென்று பார்த்தபோது, ஆரோனுடைய பெயர் எழுதப்பட்டிருந்த லேவியின் கோலானது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்திருந்தது என நாம் காண்கிறோம். இங்கு, இரவு என்பது கிருபையின் கால நியமத்தையும், மறுநாள் என்பது கர்த்தருடைய இரகசிய வருகையையும் குறிக்கிறது. பன்னிரண்டு

கோத்திரங்களுக்குமுரிய கோல்களும் தேவசமுகத்தில் வைக்கப் பட்டிருந்தபோதிலும், லேவி கோத்திரத்தின் கோல் மாத்திரம் துளிர்த்திருந்தது போல, கர்த்தருடைய இரகசிய வருகையில் ஒரு கூட்டத்தார் மட்டுமே உயிர்த்தெழுவார்கள். அவர்கள் யார்?

இஸ்ரவேலரின் முதற்பேறானவர்களுக்குப் பதிலாக லேவியர் தெரிந்துகொள்ளப்பட்டபடியினால் 'லேவி' என்பது முதற்பேறானவர்களைக் குறிக்கிறது. அந்தக் கோத்திரத்தார் முதற் பேறானவர்களாய் எண்ணப்பட்டபடியினால் தங்கள் சகோதரரோடு அவர்களுக்குப் பங்கும் சுதந்தரமும் இருக்கவில்லை. கர்த்தரே அவர்களுக்குச் சுதந்தரமாயிருந்தார். "இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக, நான் லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து எடுத்துக்கொண்டேன்; அவர்கள் என்னுடையவர்களாயிருக்கிறார்கள்" (எண். 3 : 12).

உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட கோலில் ஆரோனுடைய பெயர் எழுதப்பட்டிருந்ததினால், லேவியர், லேவி கோத்திரத்துக்குச் சொந்தமானவர்கள் என்று எண்ணப்படாமல், ஆரோனுக்குச் சொந்தமானவர்களாய் எண்ணப்படுகிறார்கள். இது, கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படு கிறவர்கள் ஆவியின் முதற்பலன்களைப் பெற்றவர்களாய் (ரோமர் 8 : 23), பூமிக்குரிய பற்றற்றவர்களாய் (பிலி. 3 : 20), கர்த்தருக்குச் சொந்தமானவர்களாய், பரலோகத்தில் தங்களுக்குப் பங்கும் சுதந்தரமும் உள்ளவர்களாய் (எபி. 10 : 34), முதற்பேறானவர்களாய் இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர்கள் சுயாதீன ஆவியில்லாதவர்கள்; கர்த்தருக்கு மாத்திரமல்ல, அப்போஸ்த லருக்கும் அவர்களுடைய உபதேசங்களுக்கும் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிகிறவர்கள். அப்படிப்பட்டவர்களுடைய சரீரங்கள் கர்த்த ருடைய இரகசிய வருகையில் அழிவற்றதாய் எழுந்திருக்கும் அல்லது மறுரூபமடையும். மற்றவர்கள், இதர பதினொரு கோல்கள் ஜீவனற்றவையாக இருந்தது போல, தங்கள் கல்லறை களில் சலனமற்றிருப்பார்கள்.

அன்றியும், தளிர்த்த கோல் ஆரோனுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திற்று. ஆசாரியத்துவத்தினால் இந்த அழைப்பின் மேன்மையை நாம் விளங்கிக் கொள்ளலாம். ஊழியத்தின் மேன்மை, ஒருவன் தனக்குண்டான எல்லாவற்றையும் விட்டு விடுவதில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. அபிஷேகத்தினாலும் அழைப்பினாலும் ஊழியம் மேன்மையுள்ளதாகிறது. "உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை" (II பேதுரு 1 : 10) என அப். பேதுரு அறிவுறுத்துகிறார்.

இரண்டு கற்பலகைகளும், மன்னா வைக்கப்பட்ட பொற் பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும் உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு, அப்பெட்டி கிருபாசனத்தால் மூடப்பட்டிருந்தது.

## கிருபாசனம்

(யாத். 25 : 17)

உடன்படிக்கைப் பெட்டியானது விலையேறப்பெற்ற பொருட்களைத் தன்னகத்தே கொண்டதாய் இருந்தபோதிலும், அதற்கென்று பிரத்தியேகமாக ஒரு மூடி இருக்கவில்லை. கிருபாசனமே அதன் மூடியாயிருந்து, அதற்குள் வைக்கப்பட்டிருந்தவைகளைப் பாதுகாத்தது.

'கிருபாசனம்' என்ற பதத்திற்கு எபிரெய மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதத்தின் பொருள், 'கிருபாதார பலி' என்பதாகும். "கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப்பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து" இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பிக்க வேண்டியவற்றைத் தேவன் மோசேயிடம் பேசினார் (யாத். 25 : 22). எனவே இந்தக் கிருபாசனமானது நம்முடைய கிருபாதார பலியும் (ரோமர் 3 : 26), புது உடன் படிக்கையின் மத்தியஸ்தருமான (எபி. 12 : 24) கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது.

உடன்படிக்கைப் பெட்டியைப் போன்றே கிருபாசனமும் 2½ முழ நீளமும் 1½ முழ அகலமுமுள்ளதாயிருந்தது (5 : 3). இது, கிறிஸ்து, 'தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயி ருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானதைக்' குறிக்கிறது (பிலி. 2 : 6, 7).

கிருபாசனம் பசும்பொன்னினால் செய்யப்பட்டிருந்தது. இங்கு பசும்பொன், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற சுபாவங் களையும் அவருடைய விலையேறப்பெற்ற விசுவாசத்தையும் காண்பிக்கிறது. கர்த்தராகிய இயேசுவைக் குறித்து அப். யோவான், அவர், "கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1 : 14) என்று கூறுகிறார். அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றுக்கொள்ளும்படி (வச. 16), அவர் தம்மை ஒப்புக்கொடுத்ததினால் அவருடைய விசுவாசத்தின் விலையேறப்பெற்ற தன்மையை நாம் விளங்கிக்கொள்ளலாம். நம்மில் அன்புகூர்ந்து நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவகுமாரனுடைய விசுவாசம் (கலா. 2 : 20 - Eng.), பசும் பொன்னைப் போலப் பிரகாசிக்கிறது.

## கேருபீன்கள்

(யாத். 25 : 18 - 20)

கேருபீன்கள், கிருபாசனத்தோடு ஏகவேலையாய் இருக் கும்படி செய்யப்பட்டிருந்தன. அவ்விதம் கிருபாசனத்தோடு ஏக வேலையாய் இருக்கும்படி செய்யப்பட்டிருந்த கேருபீன்கள், கிறிஸ்துவோடுகூட உடன் வேலைக்காரராய் இருக்கும் புதிய ஏற்பாட்டுத் தேவ ஊழியரைக் காண்பிக்கின்றன. இவர்கள் கிறிஸ்து

வுக்கு உடன் வேலையாட்களாகவும் அவருடைய ஸ்தானாபதி களாகவும் இருக்கிறார்கள் (II கொரி. 6 : 1 ; 5 : 20). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நியாயப்பிரமாணமானது தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது (கலா. 3 : 19). அதைப் போலவே புதிய ஏற்பாட்டில், மத்தியஸ்தராகிய கிறிஸ்து தம்முடைய பிதாவிடமிருந்து அளவற்ற ஐசுவரியங் களைப் பெற்று, அவற்றைச் சபைகளின் தூதர்கள் அல்லது தூதுவர்கள் என்று அழைக்கப்படும் தம்முடைய மெய்யான அப்போஸ்தலரிடம் ஒப்புவிக்கிறார். வெளிப்படுத்தின விசேஷம் 2 : 1 – இல் 'தூதன்' என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள 'AGGELOS' என்னும் பதம் தூதுவன் (messenger) என்று பொருள்படும். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்படாமல் மறைக் கப்பட்டிருந்த கிருபையும் தேவ இரகசியங்களும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே, இக்கிருபையின் காலத்தில் சுவிசேஷத்தின் மூலமாக வெளியரங்கமாக்கப்பட்டன (II தீமோ. 1 : 9, 10).

கிருபாசனத்தின் மீது நிற்கும் இரண்டு கேருபீன்களின் மத்தியிலிருந்து தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தாம் கற்பிக்க வேண்டியவைகளைப் பேசினார் (யாத். 25 : 22). அதுபோலவே, புதிய ஏற்பாட்டின் சபையானது புதிய உடன்படிக்கையின்கீழ் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்ளும்படியாக, தேவ இரகசியங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள தேவ ஊழி யர்கள் மூலமாக இப்போது சபைக்கு வெளிப்படுத்தப்படுகின்றன (எபி. 9 : 15 ; II தீமோ. 1 : 9, 10 ; எபே. 3 : 3, 6). ஆகவேதான் கேருபீன்கள் நிழலாட்டமாய்க் குறிக்கும் கிறிஸ்துவின் மெய்யான ஊழியர்கள், 'தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரர்' (I கொரி. 4 : 1) என்றும் அழைக்கப்படுகிறார்கள். அப். பவுல், 'தேவ னானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருக்கிறோம்' (II கொரி. 5 : 20)

என்று எழுதுகிறார். அப்போஸ்தலரால் அறிவிக்கப்படும் இந்தக் கிருபையின் சுவிசேஷம், கிறிஸ்துவின் இரகசிய வருகைக் காகச் சபையைப் பூரணப்படுத்த வல்லமையுள்ளதாய் இருக்கிறது.

***கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவை களும், ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளுமாய் இருந்தன*** (யாத். 25 : 20) – கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்கு கிறவைகளாயிருந்தன என்பது, தேவ ஊழியர் தங்கள் விசுவாசத் தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவையே நோக்கிப் பார்ப்பதைக் குறிக்கிறது (எபி. 12 : 1). முகங்கள் ஒன்றுக் கொன்று எதிர்முகமாயிருப்பது, பயனுள்ளதொரு ஊழியத்திற்கு இன்றியமையாததான ஒருமனதையும், சகல பரிசுத்தவான்கள் மேலும் உள்ள அன்பையும், ஆவியின் ஒருமைப்பாட்டையும் குறிக்கிறது (எபே. 1 : 15 ; 4 : 3 ; பிலி. 4 : 14).

***கேருபீன்கள் பொன்னினால் அடிப்பு வேலையாய்ச் செய்யப்பட்டன. அவற்றுக்குள் மரம் இல்லை*** - கேருபீன்கள் பொன்னினால் அடிப்பு வேலையாய்ச் செய்யப்படுதல், தேவ ஊழியர் சுவிசேஷத்தினிமித்தம் உண்டாகிற உபத்திரவங்களுக்குப் பங்குள்ளவர்களாக, கிறிஸ்துவின் பாடுகளில் ஐக்கியமுள்ளவர்களா வதைக் குறிக்கிறது (பிலி. 3 : 10). அதினிமித்தம் அவர்கள் விசுவாசத்திற்குச் சாட்சிகளாய் மாறுகிறார்கள் (II தீமோ. 1 : 8). கேருபீன்களுக்குள்ளே மரம் இல்லை என்பது, ஒருவரையும் மாம்சத்தின்படி அறியாதவர்களான தேவ ஊழியரின் பிரதிஷ்டை யுள்ள ஜீவியத்தைக் குறிக்கிறது.

***கிருபாசனம் உடன்படிக்கைப் பெட்டியை மூடினது. கேரு பீன்கள் தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை நிழலிட்டன*** - கிறிஸ்து, அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியர் - இவர்களது ஊழியத்தால் சபை பாதுகாக்கப்படுகிறது என்பதையும், அதே சமயத்தில் தேவ ஊழியர் கிறிஸ்துவோடு உன்னதங்களில் உட்கார்ந்திருப்பதால் தங்களில் ஒரு உன்னதமான ஜீவியத்தைப் பாதுகாத்துக்கொள்ளுகிறார்கள் என்பதையும் இது குறிக்கிறது.

**தண்டுகள்:**

உடன்படிக்கைப் பெட்டியின் தண்டுகள் சீத்திம் மரத்தினால் செய்யப்பட்டு, பொன்னால் பொதியப்பட்டிருந்தன. பெட்டியின் நான்கு மூலைகளிலும் ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும் மறுபக்கத்தில் இரண்டு வளையங்களுமாக நான்கு வளையங்கள் உண்டாக்கப்பட்டு, அவற்றில் தண்டுகள் பாய்ச்சப்பட்டு, பெட்டியிலிருந்து அவை கழற்றப்படாமல் இருந்தன (யாத். 25 : 13 - 15). இத்தண்டுகளைக் கொண்டே கோகாத்தின் புத்திரர் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்தார்கள். ஆகவே, இந்தத் தண்டுகள் சபையின் பாரத்தைச் சுமக்கிற பரிசுத்தவான்களான தேவ ஊழியர்களைக் குறிக்கின்றன. தண்டுகள் பெட்டியின் பக்கங்களினின்று கழற்றப்படாமல் எப்போதும் வளையங்களில் பாய்ச்சப்பட்டிருந்தது, சபையின் பாரத்தைச் சுமந்து, அதைப் பராமரிப்பதற்காக, தேவ ஊழியர்கள் தங்களையே தத்தம் செய்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. "இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது" (II கொரி. 11 : 28) என்று அப். பவுல் கூறுவது போல, அவர்கள் சபையின் பாரத்தைச் சுமக்க எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார்கள். தண்டுகள் மரத்தால் செய்யப்பட்டு, பொன்னினால் மூடப்பட்டிருப்பது, இந்தத் தேவ ஊழியர்கள் மற்றவர்களைப் போல பாடுள்ள மனுஷராயிருந்தாலும், சபையின் பாரத்தைச் சுமக்கிற விஷயத்தில் சோர்ந்து போகாமல் ஊக்கமாய் ஜெபம்பண்ணக்கூடிய விசுவாசத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது (லூக்கா 18 : 1, 7, 8 ; யாக். 5 : 16, 17).

பெட்டியின் பக்கங்களில் இருந்த இரண்டிரண்டு வளையங்கள், அன்பையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்துகின்றன. அன்பும் விசுவாசமும் இல்லாமல் ஒருவன் பாரஞ்சுமக்க முடியாது (I தீமோ. 1 : 14).

## அதிகாரம் 5

# பரிசுத்த ஸ்தலமும் அதின் பணிமுட்டுகளும்

மகா பரிசுத்த ஸ்தலத்தின் முன்பக்கத்தில் காணப்பட்ட பரிசுத்த ஸ்தலமானது 'முதலாங்கூடாரம்' என்று அழைக்கப் பட்டது (எபி. 9 : 6). இங்கே பிரதான ஆசாரியனும் அவனுடைய குமாரரும் வருடத்தின் முந்நூற்று அறுபத்து நான்கு நாட்களும் ஊழியம் செய்வர். இந்த முதலாங்கூடாரம் 'இக்காலத்திற்கு' உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது (எபி. 9 : 9, 11 ; 10 : 1) – அதாவது இது சபையின் காலத்தில் நிறைவேற்றப்படும் ஊழியத்தைக் குறிக்கிறது. பரிசுத்த ஸ்தலத்தின் நீளம் 20 முழமும், அகலம் 10 முழமும், உயரம் 10 முழமுமாகும். 'பத்து' என்பது பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப் படுவதைக் குறிக்கிறது. முதலாம் கூடாரமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் செய்யப்பட்ட இந்த ஊழியம், மனிதனைப் பரலோகத்தின் மெய் யான கூடாரத்தினுடைய மகா பரிசுத்த ஸ்தலத்திற்குக் கொண்டு போவதற்காக இக்காலத்தில் செய்யப்படும் அன்பின் ஊழியத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது (எபி. 8 : 5). 'இக்காலம்' என்பது புதிய ஏற்பாட்டுச் சபையின் இரண்டு காலங்களைக் குறிக்கிறது:

(i) முன்மாரி காலம், (ii) பின்மாரி காலம்.

மகா பரிசுத்த ஸ்தலத்தின் நீளம் 10 முழமாயிருக்க, பரிசுத்த ஸ்தலத்தின் நீளமோ 20 முழமாயிருப்பது, மேற்கூறப்பட்டுள்ள இரண்டு காலங்களிலும் சபையில் ஒரேவிதமான அன்பின் ஊழியம் செய்யப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தி, இந்தக் காலத்தில் நாம் நம்முடைய ஊழியத்தை ஆதி அப்போஸ்தலர் காலத்தைப் போல் நிறைவாய்ச் செய்ய வேண்டும் என்று எச்சரித்துக்கொண்டிருக்கிறது.


***பரிசுத்த ஸ்தலத்தில் தூபபீடமும் குத்துவிளக்கும் சமுகத்தப்ப மேஜையும் வைக்கப்பட்டிருந்தன.***

## தூபபீடம்

(யாத். 30 : 1 - 7)

தூபபீடம், பரிசுத்த ஸ்தலத்தில் திரைச்சீலைக்கு அருகிலே வைக்கப்பட்டிருந்தது. அது சீத்திம் மரத்தால் செய்யப்பட்டுப் பொன்தகட்டால் மூடப்பட்டிருந்தது. அது ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமுமுள்ளதாயிருந்தது. அதன் சுற்றளவு நான்கு முழமாயிருந்தது. 'நான்கு' என்பது தேவனுடைய ராஜ்யத்தைக் குறிக்கும் எண்ணாகும். பூமியில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பொழிந்தருளப்பட்டபோது, தேவனுடைய ராஜ்யமானது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வந்ததென்பதை நாம் அறிவோம். "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கர்த்தராகிய இயேசு கூறியபோது இதையே கருதினார் (மாற்கு 9 : 1).

ஆதி நூற்றாண்டில் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வந்தபோது, அது தேவஜனங்களை ஆட்கொண்டு, அவர்கள் தங்கள் பிராணனையும் அருமையாக எண்ணாமல், ஜெபத்தில் தங்கள் ஜீவனை ஊற்றும்படி அவர்களைப் பெலப்படுத்திற்று. ஆகவே தூபபீடம் ஜெப ஊழியத்தில் தங்கள் ஜீவனை ஊற்றுகிற பரிசுத்தவான்களைக் குறிக்கிறது. "நானும் உங்களுக்காக



தூபபீடம்

விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக" (I சாமு. 12 : 23) என்று சாமுவேல் சொன்னது, பரிசுத்தவான்களின் ஜெபம் எவ்வளவு அவசியம் என்பதைக் காண்பிக்கிறது. இவ்விதமாகவே சாமுவேலைப் போன்ற தீர்க்கதரிசிகளும், தாவீதைப் போன்ற ராஜாக்களும், மற்றும் பல ஆசாரியர்களும் ஜனங்களுக்காகத் தேவசமுகத்தில் பரிந்து பேசி ஜெபித்திருக்கின்றனர்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காகவும் அவர்களுடைய வார்த்தையினால் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொண்டார் (யோவான் 17 : 20). கெத்செமனேயில் அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழும் அளவிற்கு அவர் ஊக்கமாக ஜெபம்பண்ணினார் என்று நாம் காண்கிறோம் (லூக்கா 22 : 44). புதிய ஏற்பாட்டில், ஆதிச் சபையாருங்கூட ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" ; "தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்" (அப். 2 : 42, 47). "அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்" (அப். 4 : 31). இவ்விதமாக, புதிய ஏற்பாடு முழுவதிலும் சபையின் ஜெப ஜீவியத்தை நாம் தெளிவாகக் காணலாம். அப். பவுல், "எனக்காகவும்", "சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" (எபே. 6 : 20 , 18) என்றும், 'நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராட வேண்டும்' (ரோமர் 15 : 32)

என்றும் கூறுவதின் மூலமாக ஜெபத்தின் இன்றியமையாமையைச் சபைக்கு வெளிப்படுத்துகிறார்.

தூபபீடம் ***பொன்னால் மூடப்பட்டிருந்தது.*** பொன் விசுவாசத்தைக் காண்பிக்கிறது என நாம் அறிவோம். ஜெப ஊழியத்தில் நமக்கு உண்டாகும் இடையூறுகளை நாம் விசுவாசத்தினால் மேற்கொண்டு, தைரியமாய் ஜெபத்தில் போராட வேண்டுமென்பதை இது நமக்கு வெளிப்படுத்துகிறது.

தூபபீடத்திற்கு ***நான்கு கொம்புகள்*** இருந்தன. கொம்புகள் வல்லமையைக் குறிக்கின்றன. ஜெபத்தில் போராடுகிற தேவனுடைய பரிசுத்தவான்களும் சபையும் நாலாபக்கங்களிலிருந்தும் எழுகிற சோதனைகளினின்று ஜெப ஜீவியத்தின் வல்லமையினால் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதை இது காட்டுகிறது. இதனாலேயே விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே நாம் காக்கப்படுகிறோம் என்று எழுதப்பட்டுள்ளது (I பேதுரு 1 : 5).

(1) *காலைதோறும்,* (2) *விளக்கேற்றும்போதும்,* (3) *விளக்குகளை விளக்கும்போதும்* தூபங்காட்ட வேண்டுமென்று தேவன் மோசேக்குக் கற்பித்தார்.

(1) ***காலைதோறும்*** தூபங்காட்டுதல், நம்முடைய ஜீவியத்தில் அந்தகாரம் நீக்கப்படுவதினால் உண்டாகும் ஜெப ஜீவியத்தைக் குறிக்கிறது.

(2) ***விளக்கேற்றும்போது*** தூபங்காட்டுதல், தேவவசனத்தின் வெளிப்படுத்தல் நமக்குள் வரும்போது உண்டாகும் ஜெப ஜீவியத்தை வெளிப்படுத்துகிறது.

(3) ***விளக்குகளை விளக்கும்போது*** தூபங்காட்டுதல், தேவனுடைய சபை சுத்திகரிக்கப்படும்போது ஜெப ஜீவியம் புதுப்பிக்கப்படுவதைக் குறிக்கிறது.

தூபபீடத்தின் மேல் செலுத்தப்பட்ட தூபவர்க்கம் நான்கு பொருட்களாலானது (யாத். 30 : 34). அவை வெள்ளைப்போளம், குங்கிலியம், அல்பான் பிசின், சாம்பிராணி என்பவையாகும்.

***வெள்ளைப்போளம்***, குங்கிலிய வகையைச் சேர்ந்த ஒரு தாவரத்திலிருந்து கிடைப்பதாகும். இவ்வழகிய புதர்ச்செடியானது, சில சமயங்களில் ஒரு சிறிய மரம் போல வளர்ந்து, வசந்த காலத்தில் அதில் வெண்மையான அல்லது மஞ்சள் நிறமான பூக்கள் நிறைந்து, பார்ப்பதற்குப் பனி பெய்திருப்பது போல் காட்சியளிக்கும். வெள்ளைப்போளம் என்பதற்கு உபயோகிக்கப் பட்டுள்ள எபிரெய பதத்தின் அர்த்தம் 'துளிகள்' என்பதாகும். அம்மரத்தின் பட்டை உரிக்கப்படும்போது அதிலிருந்து வெளி வரும் பிசின் போன்ற திரவம் துளித்துளியாக ஒன்று சேருவதை அது குறிக்கிறது. இந்தப் பிசின் உயர்ந்த விலைமதிப்புள்ள ஒரு வாசனைத் திரவியமாகும்.

***குங்கிலியம்*** என்பது, ஒருவகை கடற்பிராணி அல்லது சிவந்த சமுத்திரத்திலிருக்கும் ஒருவகை நத்தையின் தசையிலுள்ள ஒரு பகுதியை (closing valve muscle) நெருப்பில் சுட்டுப் பொடி யாக்குவதால் கிடைக்கும் பொருளாகும்.

***அல்பான் பிசின்,*** பல்லாண்டு உயிர்வாழும் தாவரமாகிய ஃபெருலா (Ferula) என்னும் காரட் வகையைச் சேர்ந்த உறுதியான வேருள்ள ஒரு செடியிலிருந்து கிடைப்பதாகும். இச்செடியின் ஒன்பது வகைகள் பலஸ்தீனாவில் காணப்படுகின்றன. அதன் தண்டு வெட்டப்படும்போது, பால் போன்ற சாறு வெளிவந்து உறையும். அது மஞ்சள் நிறமான பசையாக, காரநெடியுள்ளதாய் இருக்கும்.

***சாம்பிராணி*** என்பது, போஸ்வெல்லியா என்னும் தாவர இனத்தைச் சேர்ந்த காரநெடியுள்ள ஒரு வகை பிசினாகும். இத்தாவரத்தில் மூன்று வகைகள் உள்ளன. இது அரேபியாவில் மட்டுமே வளரும். இதன் பட்டையைச் சில அங்குலங்கள் உரிக்கும்போது, பிசின் போன்ற சாறு அதினின்று வெளிப்பட்டு, உருண்டைகளாக மாறிவிடும். இந்தப் பிசினுக்கு நறுமணமுண்டு. நீண்ட நேரம் நிலையாக எரியும் தன்மை இதற்கு உண்டு. இது தனிமையாகவோ, வேறுசில பொருட்களுடனோ சேர்த்து தூப

வர்க்கமாக உபயோகிக்கப்படுகிறது. வெள்ளைப்போளம், குங்கிலியம், அல்பான் பிசின், சாம்பிராணி ஆகிய நான்கும் சமநிறையாக எடுக்கப்பட்டு உண்டாக்கப்படும் தூபவர்க்கம் எரிக்கப்படுவதின் பலனாக, தூபபீடத்தினின்று உண்டாகும் புகை சுகந்த வாசனையுள்ளதாய் எழும்பும். அவைகளின் ஆவிக்குரிய கருத்தை வரிசைக் கிரமமாக I தீமோத்தேயு 2 : 1 - இல் நாம் காணலாம்:

வெள்ளைப்போளம் - விண்ணப்பம்

குங்கிலியம் - ஜெபம்

அல்பான் பிசின் - வேண்டுதல்

சாம்பிராணி - ஸ்தோத்திரம் பண்ணுதல்

***விண்ணப்பம்:*** ஜெபத்தின் இந்த அம்சத்தை நாம் அன்னாளின் விண்ணப்பத்தில் காணலாம். அவள் மிகுந்த துக்கத்தினாலும் பாரத்தினாலும் நிறைந்து, மனங்கசந்து விண்ணப்பம் பண்ணினாள் (I சாமு. 1 : 10, 16). தாவீது தான் நெருக்கப்பட்ட வேளைகளிலெல்லாம் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணி, கெஞ்சி மன்றாடினான் (சங். 17 : 1 , 6).

***ஜெபம்:*** இது பரிசுத்தவான்களின் ஊக்கமான ஜெபத்தைக் குறிக்கிறது. மோசே, யோசுவா ஆகியோரின் ஜெபங்களும் (யாத். 32 : 11 – 13 ; யோசுவா 7 : 6 – 9), புதிய ஏற்பாட்டில், அப். பேதுரு சிறைச்சாலையிலிருந்தபோது சபையார் அவருக்காகச் செய்த ஊக்கமான ஜெபங்களும் (அப். 12 : 5) ஜெபத்தின் இந்த அம்சத்திற்குச் சில எடுத்துக்காட்டுகளாகும்.

***வேண்டுதல்:*** ஜனங்கள் பாவத்தினின்றும் வியாதியினின்றும் விடுதலை பெறும்படி மோசேயும் ஆரோனும் அவர்களுக்காக வேண்டுதல் செய்தார்கள் (எண். 16 : 46 - 48). கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக இப்போதும் பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறார் (எபி. 7 : 25).

***ஸ்தோத்திரம் பண்ணுதல்:*** பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் சேர்ந்த பரிசுத்தவான்கள், தேவன் தங்களுக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் அவரை ஸ்தோத்திரித்து, துதித்து, மகிமைப்படுத்தினார்கள் (சங். 103 : 2 ; சங். 148 ; I தெச. 5 : 18).

**திரணை:**

தூபபீடம் செய்யப்பட்டபோது, அதில் கடைசியாக உண்டாக்கப்பட்டதே திரணையாகும். இது தூபபீடத்தின் வேலை முடிவுற்றது என்பதைக் காட்டுகிறது. ஜெப ஊழியத்தில் தங்கள் ஜீவனையே பலியாக்கிய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்படும் கிரீடத்தை இந்தத் திரணை வெளிப்படுத்துகிறது. அவர்கள் ஜீவனால் முடிசூட்டப்படுவார்கள். கீழ்க்காணும் வேதபகுதிகளில் ஜீவகிரீடத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம்:

"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின *ஜீவகிரீடத்தைப்* பெறுவான்" (யாக். 1 : 12).

"நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப் படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசான வன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத் திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது *ஜீவகிரீடத்தை* உனக்குத் தருவேன்" (வெளி. 2 : 10).

இது, பாடுகளின் மத்தியில் மரணபரியந்தமும் உண்மையா யிருக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படும் கிரீடமாகும்.

ஒரு தேவபிள்ளை சோதனைகளை ஜெயிக்க வேண்டு மானால், அவன் தன் ஜீவனையும் அருமையாக எண்ணாமல், தன்னைத் தானே தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, மரணபரியந்தம்

தன் ஜெப ஊழியத்தில் உண்மையாயிருந்து, தன் ஜீவனை நித்தமும் தத்தம் செய்ய வேண்டும்.

கர்த்தராகிய இயேசு கெத்செமனே தோட்டத்தில் தம் ஜீவனை ஊற்றி ஜெபம்பண்ணி, கல்வாரிச் சிலுவையில் மரிக்கத் தம்மை ஒப்புக்கொடுத்தபோது, அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. இதனால் அவர் சிங்கத்தைப் போல் தைரியமாயிருந்து ஜெயவீரராய் விளங்கினார். அவர் தம்முடைய சத்துருக்களிடம், "யாரைத் தேடுகிறீர்கள்" என்று தைரியமாய்க் கேட்டு, முழு உலகத்திற்காகவும் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். இவ்விதமாகத் தங்கள் ஜீவனைப் பலியாக்கும் பரிசுத்தவான்கள் ஜீவனால் முடிசூட்டப்படுவார்கள்.

## குத்துவிளக்கு

(யாத். 25 : 31 - 39)

குத்துவிளக்கு, இந்தப் பூமியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் புதிய ஏற்பாட்டுச் சபையைக் குறிக்கிறது: "என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" (வெளி. 1 : 20).

குத்துவிளக்கு ஒரு தாலந்து பசும்பொன்னினால் செய்யப்பட்டது. அது, ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டவர்கள் எவ்வாறு ஒரே சபையாகப் பூரணமாக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறது. குத்துவிளக்கிற்குப் பல பாகங்கள் உள்ளன.

### (i) பாதம்:

குத்துவிளக்கின் பாதம், சபையின் அஸ்திபாரமும் மூலைக் கல்லுமாயிருக்கிற கிறிஸ்துவைக் குறிக்கிறது (I கொரி. 3 : 10, 11 ; எபே. 2 : 20).



குத்துவிளக்கு

### (ii) ஏழு கிளைகள் (நடுத்தண்டும் ஆறு கிளைகளும்):

"தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்த லரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர் களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங் களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்" (I கொரி. 12 : 28) என்று எழுதப் பட்டிருக்கிறபடி, குத்துவிளக்கின் நடுத்தண்டும் ஆறு கிளைகளும், புதிய ஏற்பாட்டுச் சபையில் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பலவிதமான ஊழியங்களைக் குறிக்கின்றன. "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப் பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்" (எபே. 2 : 20) என்று எழுதப்பட்டி ருப்பதால், நடுத்தண்டு அதன் அகலுடன் சேர்ந்து அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய ஊழியத்தைக் குறிக்கிறது. அவர்கள் (பாதமாகிய) கிறிஸ்துவிலும் அவருடைய உபதேசங் களிலும் வேரூன்றியிருக்க வேண்டும்.

ஆறு அகல்களைக் கொண்ட ஆறு கிளைகளும், மேலே ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் மீதியான ஊழியங்களாகிய போதகர்கள், அற்புதங்கள், குணமாக்கும் வரங்கள், ஊழியங்கள், ஆளுகைகள், பலவித பாஷைகள் ஆகியவற்றைக் காண்பிக் கின்றன. எபேசியர் 4 : 13 - இல் குறிப்பிடப்பட்டுள்ள மேய்ப்பர், சுவிசேஷகர் ஆகியோரின் ஊழியங்கள் இங்கே கூறப்பட்டுள்ள எட்டுவித ஊழியங்களில் சொல்லப்படாவிட்டாலும், போதகரின் ஊழியத்தில் இவைகளும் உட்படும் என்பதை இங்கே நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

### (iii) மொக்குகளும், பழங்களும், பூக்களும்:

குத்துவிளக்கின் ஒவ்வொரு கிளையிலும் வாதுமைக் கொட்டைக்கு ஒப்பான மூன்று மொக்குகளும் ஒரு பழமும் ஒரு பூவும் இருந்தன. நடுத்தண்டில் மாத்திரம் நான்காவது ஒரு மொக்கு

உண்டாயிருந்தது. இந்த நான்கு மொக்குகளும் (i) அன்பு (I யோவான் 4 : 17), (ii) விசுவாசம் (யாக். 2 : 22), (iii) பரிசுத்தம் (II கொரி. 7 : 1), (iv) பாடுகளின் மத்தியிலும் தேவசித்தம் செய்தல் (எபி. 5 : 8, 9 ; கொலோ. 4 : 12) ஆகிய நான்கிலும் பூரணத்தை நோக்கி வளருவதைக் குறிக்கின்றன.

கிளைகள் மூன்று மொக்குகளை மாத்திரம் உடையவைகளாய், நான்கு மொக்குகளைக்கொண்ட நடுத்தண்டுடன் இணைக்கப்பட்டிருப்பது, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற சபையார், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களோடு ஐக்கியப்பட்டிருப்பதின் மூலம் தேவசித்தம் செய்கிற ஜீவியத்தைக் கற்றுக்கொண்டு, மற்ற மூன்று அம்சங்களாகிய அன்பு, விசுவாசம், பரிசுத்தம் ஆகியவற்றில் பூரணத்தை அடையும்படி வளர வேண்டும் என்பதைக் குறிக்கிறது (எபே. 4 : 11 - 13 ; எபி. 13 : 17). மொக்குகளுடன் சேர்ந்துள்ள பூவும் பழமும் நாம் இந்த நான்கு அம்சங்களிலும் பூரணத்தை நோக்கிச் செல்லும் நிலைவரங்களைக் குறிக்கின்றன. மொட்டாக இருக்கும் நிலைவரத்திலேயே நாம் நின்றுவிடாமல், நம்முடைய ஜீவியம் பிறருக்கு சுகந்த வாசனையாக இருக்கத்தக்கதாக நாம் பூக்களாக மலரும் நிலைக்கு முன்னேறிச் செல்ல வேண்டும். கடைசியாக, கனி கொடுக்கும் நிலைக்கும் நாம் வளர வேண்டும். இது பூரணத்தை நோக்கி வளருவதைக் குறிக்கிறது.

**(iv) எரியும் அகல்கள்:**

சபையில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவருடைய (தேவ ஊழியர்களும் விசுவாசிகளும்) ஊழியமும், கர்த்தர் அவர்களுக்கு அருளிய வரங்களின் மூலம் எவ்வாறு பிரகாசிக்கின்றன என்பதைக் குத்துவிளக்கின் அகல்கள் காட்டுகின்றன. I கொரிந்தியர் 12 - ஆம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமாகச் சபை உருவானதைக் குறித்தும் (வச. 13), சபையில் கிரியை செய்யும் ஒன்பது விதமான வரங்களைக் குறித்தும் (வச. 7 - 10) நாம் வாசிக்கிறோம். சபையார்

யாவருக்கும் அவரவருடைய அழைப்பிற்கேற்ப வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் சபையில் ஏற்படுத்தப் பட்டுள்ள எட்டு ஊழியங்களில் ஏதாவது ஒன்றில் இடம் பெறுகிறார்கள் (ரோமர் 12 : 4 - 8). குத்துவிளக்கின் ஆறு கிளை களும் நேரடியாகப் பாதத்திலிருந்து புறப்படாமல், பாதத்தோடு இணைக்கப்பட்டுள்ள நடுத்தண்டிலிருந்து புறப்படுவது போல, அபிஷேகம் பெற்ற சபையின் அங்கத்தினர் செய்யும் எந்த ஊழியமும் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களின் ஊழி யத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும். ஆவிக்குரிய வரங்களைப் பெற்றவர்கள் சபைக்குள் தாங்கள் அழைக்கப்பட்ட நிலையிலும் அப்போஸ்தலருடைய நடத்திப்பிலும் நிலைத்திராமல், சுயாதீன மாகக் கிரியை செய்யத் துவங்கினால் - உலக ஜனங்கள் அவர்களுடைய ஊழியங்களால் கவர்ந்துகொள்ளப்பட்டாலும் அந்த ஊழியம் நிலைநிற்காது. ஏனெனில், சுயாதீன ஆவியோடு செய்யப்படும் அவர்களுடைய ஊழியங்கள், குத்துவிளக்கு வெளிப்படுத்தும் உபதேசத்திற்கு முரண்பாடானதாகும்.

**பரிசுத்த ஸ்தலத்தின் வெளிச்சம்:**

குத்துவிளக்கு பரிசுத்த ஸ்தலத்தில் காணப்பட்டது போல, புதிய ஏற்பாட்டுச் சபை பாவத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் வேறுபிரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். பரிசுத்த ஸ்தலத் திற்குத் தேவையான வெளிச்சம் வேறு எங்கிருந்தும் வராமல், குத்துவிளக்கிலிருந்து மாத்திரம் வந்தது போல, சபையில் உள்ள ஒவ்வொருவரும் வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக, சபையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியங்கள், ஆவியின் வரங் களின் மூலம் பிரகாசிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆகவே, சபையிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையா யிருந்து (II பேதுரு 1 : 10), சபையின் பக்திவிருத்திக்காகத் தாங்கள் கிரியை செய்யும்படி ஆவிக்குரிய வரங்களைக் குறித்து வைராக்கிய முள்ளவர்களாயிருக்க வேண்டும்.

**பசும்பொன்னினால் அடிப்பு வேலையாய்ச் செய்யப்படுதல்:**

குத்துவிளக்கு பசும்பொன்னினால் அடிப்பு வேலையாய்ச் செய்யப்பட்டது, நாம் உபத்திரவத்தின் மத்தியில் விசுவாசத்தில் உறுதியாய் நிற்பதைக் காட்டுகிறது. பரிசுத்தவான்கள் தங்கள் அழைப்பிற்கும் தெரிந்துகொள்ளுதலுக்கும் ஏற்ப தங்கள் ஊழியத்தை நிறைவேற்ற ஆரம்பிககும்போது, அவர்கள் பலவிதமான எதிர்ப்புகளையும் தடைகளையும் அநேகம் உபத்திரவங்களையும் சந்திக்க வேண்டியதிருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் பசும்பொன்னினால் அடிப்பு வேலையாய்ச் செய்யப்பட்ட குத்துவிளக்கைப் போல, தைரியமாய் எரிந்து பிரகாசிக்கும்படி, விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருக்க வேண்டும். குத்துவிளக்கு உள்ளே மரம் இல்லாமல் முழுவதும் பசும் பொன்னினால் செய்யப்பட்டிருந்தது, பெருமை, மனுஷ அபிப்பிராயம், மனுஷீகம் போன்றவைகளின் கலப்பு இன்றி, அவர்கள் விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. நாம் முன்அபிப்பிராயம் வைத்துக் கிரியை செய்தால், நம் ஊழியங்கள் ஆசீர்வாதமாக இராமல், மற்றவர்களுக்குச் சாபத்தை வருவிப்பவைகளாகத் தீரும். அப்படிப்பட்ட ஊழியங்களின் மூலமாகத் தேவனுடைய நோக்கமும் நிறைவேற்றப்படாமற்போகும்.

***விளக்கின் எண்ணெய்:***

"குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி அதற்காக இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை இஸ்ரவேல் புத்திரர் உன்னிடத்தில் கொண்டுவரும்படி அவர்களுக்குக் கட்டளையிடு" (லேவி. 24 : 2). பரிசுத்த ஸ்தலத்தில் பிரகாசிக்க வேண்டிய குத்துவிளக்கைக் குறித்து இஸ்ரவேல் புத்திரர் எவ்வாறு பாரமுள்ளவர்களாயிருக்க வேண்டியதாயிருந்தது என்பதையும், விளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி அதைக் காக்கும் உத்தரவாதத்தையுடைய பிரதான ஆசாரியனோடு அவர்களுக்கு இருக்க வேண்டியதாயிருந்த ஐக்கியத்தையும் இது

வெளிப்படுத்துகிறது. தெளிவான ஒலிவ எண்ணெய் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறிக்கிறது. 'இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெய்' என்பது பாடுகள், உபத்திரவங்கள் ஆகியவற்றின் மத்தியிலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம், பரிசுத்த ஆவியின் புதிதாக்குதல் இவற்றின் மூலமாகத் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருப்பதைக் குறிக்கிறது.

**திரிகள்:**


விளக்கின் ஒளியை அதிகரிக்கச் செய்யும்படியாக, கருந்திரிகள் உடனுக்குடன் நீக்கப்பட்டன. அதற்காகக் கத்தரிகள் உபயோகிக்கப்பட்டன. ஊழியத்தில் ஒருவன் எரிந்து பிரகாசிக்கிறவனாகத் தேவனால் உபயோகிக்கப்படும்போது, பெருமை, மேன்மைபாராட்டல்கள் இவற்றின் மூலம் தன்னையே வெளிப்படுத்தும் 'சுயத்தை' இக்கருந்திரிகள் குறிக்கின்றன. கருந்திரிகள் நீக்கப்படுவது, பழைய மனுஷனைக் களைந்துபோடுவதற்கு அடையாளமாயிருக்கிறது.

## சமுகத்தப்ப மேஜை

(யாத். 25 : 23 - 30)

பரிசுத்த ஸ்தலத்திலிருந்த சமுகத்தப்ப மேஜை, புதிய ஏற்பாட்டுச் சபைக்கு ஏற்ற வேளையில் ஆவிக்குரிய ஆகாரம் கொடுத்துப் பராமரிப்பதற்காக, கிறிஸ்துவினால் சபையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியத்தைக் குறிக்கிறது. தாவீது ராஜாவும், "சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை (table) ஆயத்தப்படுத்தி" (சங். 23 : 5) என்று சொன்னபோது, கர்த்தரிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்ட தன்னுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையே குறிப்பிட்டான்.

இந்த மேஜையின் நான்கு கால்கள் எசேக்கியேல் 1 : 10 - இல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு முகங்களையும், நான்கு சுவிசேஷங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்துவின் நான்கு சுபாவங்களையும் குறிக்கின்றன.



சமுகத்தப்ப மேஜை

1. *விசுவாசம்*
(சிங்க முகம் - மத்தேயு சுவிசேஷத்தில் 'ராஜா')

2. *தேவசித்தம் செய்தல்*
(எருது முகம் - மாற்கு சுவிசேஷத்தில் 'அடிமை')

3. *அன்பு*
(மனித முகம் - லூக்கா சுவிசேஷத்தில் 'மனுஷகுமாரன்')

4. *பரிசுத்தம்*
(கழுகு முகம் - யோவான் சுவிசேஷத்தில் 'உன்னத ஜீவியம்')

ஆதலால், இந்த மேஜை கிறிஸ்துவையும், மேற்கூறப்பட்ட சுபாவங்களால் உறுதிப்படுத்தப்பட்டு அவரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியத்தையும் குறிக்கிறது.

***சமுகத்தப்பம்:***

பன்னிரண்டு அப்பங்கள் மேஜையின்மீது வைக்கப்பட்டன. ஒவ்வொரு அப்பமும் ஒரு மரக்காலில் பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவினால் செய்யப்பட்டது. அவைகள் ஒரு வரிசையில் ஆறு அப்பங்களாக இரண்டு வரிசைகளில் வைக்கப்பட்டிருந்தன. "அவைகளை ... கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜை யின்மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு அப்பம் இருக்கும்படியாக வைத்து" (லேவி. 24 : 6) என்று கூறப்பட்டிருக்கிறது. இங்கே இரண்டு அடுக்குகளாக வைக்கப் பட்டன என்பது, ஒன்றின்மேல் ஒன்று வைக்கப்பட்டது என்று கூறப்பட்டிருப்பது போல் இருக்கிறது. ஆனால் மூலபாஷையில் கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தையின்படி (Mooreketh - Array) அவை ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு வரிசைகளாய் வைக்கப் பட்டிருந்தன என்று பொருள்படும்.

'பன்னிரண்டு' என்பது அப்போஸ்தலரின் இலக்கமாகும். இது, சபையைப் போஷிக்கிற, அதாவது தேவ வசனத்தைப்

போதிக்கிற ஊழியம் அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள ஊழியர் களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்து கிறது (அப். 6 : 4).

'இரண்டு' என்ற இலக்கம் சாட்சியைக் குறிக்கிறது. ஆதலால் இரண்டு வரிசைகளாக வைக்கப்பட்டிருந்த அப்பங்கள், தேவ ஊழியர்கள் போதிக்கும் தூதுக்கு ஒத்திருக்கும் அவர் களுடைய சாட்சியின் ஜீவியத்தைக் குறிக்கிறது. இவ்வூழியர்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் தூதானது, முதலாவது அவர்களுக்கே போஜனமாகிறது. பின்பு அவர்கள் பெற்றுக் கொண்ட இத்தூதும், இரண்டு வரிசைகளில் வைக்கப்பட்டிருக்கும் பன்னிரண்டு அப்பங்களைப் போன்ற அவர்களுடைய சாட்சியின் ஜீவியமும் சேர்ந்து சபைக்குப் போஜனமாகிறது. அப். பவுலுங் கூட, "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்" (II கொரி. 4 : 2) என்று கூறுகிறார்.

பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவு என்பது, பத்து என்னும் இலக்கத்தால் குறிப்பிடப்படும் நியாயப்பிரமாணம், புதிய ஏற்பாட்டில் இரண்டு கற்பனைகளுக்குள் கொண்டுவரப்பட்டிருப் பதைக் குறிக்கிறது. அவை, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" என்பதும், "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்பதுமே (மத். 22 : 37, 39). சபையைப் போஷிக்கும் தேவ ஊழியர்கள், தாங்கள் ஊழியஞ்செய்யும்போது, இந்த அன்பினால் நிறைந்து, கர்த்தரிடத்தில் தங்கள் முழு இருதயத்தோடும் அன்பு கூர்ந்து, சபையிலுள்ள மற்றவர்களையும் தங்களைப் போன்று நேசித்து, அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு அதைப் போதிக்கிறவர்களாய் இருக்க வேண்டும் (எபே. 4 : 15).

மேஜையின் மீது கர்த்தருக்கு முன்பாக வரிசையாக வைக்கப்பட்டிருந்த அப்பங்கள், தேவனிடத்திலிருந்து தூது களைப் பெற்றுக்கொள்ளும்படி தேவ ஊழியர்கள் எவ்விதம் தேவ சமுகத்தில் நிலைத்திருக்கிறார்கள் என்பதைக் காண்பிக்கிறது. இந்த அப்பங்கள், எல்லோரும் பொறுக்கி எடுத்துச் சாப்பிடக் கூடியதா யிருந்த மன்னாவைப் போன்றவை அல்ல. இஸ்ரவேல் புத்திர ரால் கொடுக்கப்பட்ட மெல்லிய மாவைப் போல, சபையைப் போஷிக்கும் ஊழியர்களும் தேவனுடைய பிள்ளைகள் மத்தியிலி ருந்து வேறுபிரிக்கப்படுகிறார்கள். சபைக்கு ஆகாரமாகும்படி இவர்கள் தங்களுக்குரிய எல்லாவற்றையும் விட்டு, தங்களுடைய மாம்ச சம்பந்தமானவர்களையும் வெறுத்து (லூக்கா 14 : 26, 33), கிறிஸ்துவின் சுபாவங்களில் தங்களைக் காத்துக்கொண்டு தேவ சமுகத்தில் நிலைத்திருக்கும்படி தங்களை முற்றிலும் இவ்வூழி யத்திற்காகப் பிரதிஷ்டை செய்தவர்களாவர்.

சமுகத்தப்பங்கள் ஆரோனுக்கும், ஆசாரியராய் அபி ஷேகம்பண்ணப்பட்ட அவனுடைய குமாரருக்கும் மட்டுமே உரியவையாயிருந்தன (லேவி. 24 : 9). அவ்வாறே இத்தூதுகளுங் கூட கிறிஸ்துவில் குழந்தைகளுக்கோ அல்லது வளர்ச்சியடையாத வர்களுக்கோ அல்ல, கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கித் தங்களைத் தாங்களே ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற சபையின் அங்கத்தினருக்கே உரியவை. எனவே இந்த அப்பங்கள், "நன்மை தீமையின்ன தென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர் களுக்கே" உரியவை (எபி. 5 : 14).

ஓய்வுநாள்தோறும் இந்த அப்பங்கள் புசிக்கப்பட்டு அடுத்த வாரத்திற்கென சூடான அப்பங்கள் மேஜையின் மேல் அடுக்கி வைக்கப்பட்டன. தேவ ஊழியர் தேவனுடைய சமுகத்தில் காத்தி ருப்பதினால் தேவனிடத்திலிருந்து புதிய தூதைப் பெற்றுக்

கொள்ளும்போது, அது அவர்களுக்குப் போஜனமாகி, சபைக்கும் ஆகாரமாகிறது. சபையானது இவ்விதம் போஷிக்கப்பட்டு, எழுப்புதலடைந்து, வளர்ச்சி பெற்று, கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாக்கப்படுகிறது.

**பாதுகாக்கும் சட்டம்:**

மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த அப்பங்கள் விழுந்து விடாமல் காக்கப்படும்படியாக சீத்திம் மரத்தினால் உண்டாக் கப்பட்ட சட்டங்கள் அதைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருந்தன: “சுற்றிலும் அதற்கு நாலு விரற்கடையான சட்டத்தையும் ... உண்டாக்கி” (யாத். 25 : 25).

மேஜையின் சுற்றளவு ஆறு முழமாயிருந்தது. ‘ஆறு’ என்பது தூதர்களின் இலக்கமாகும். இது ‘சபையின் தூதர்கள்’ என்று குறிப்பிடப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டுத் தேவ ஊழியர் களைக் குறிக்கிறது (வெளி. 1 : 20 ; II கொரி. 8 : 23). சபைக்குத் தேவையான ஆவிக்குரிய ஆகாரத்தைக் கொடுக்கும் வேலை இவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் *தங்களைப்* பாதுகாத்துக்கொள்வதைக் குறித்தும் சபையினிமித்தம் *உபதே சத்தைப்* பாதுகாத்துக்கொள்வதைக் குறித்தும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். அப். பவுல், “உன்னைக்குறித்தும் உபதே சத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலை கொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்” (I தீமோ. 4 : 16) என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். மேஜையின் சட்டம் நான்கு விரற்கடையளவாயிருந்தது என்பது, “வழுவாதபடி உங்களைக் காக்க ... வல்லமையுள்ளவரும்” (யூதா 24) என எழுதப்பட்டிருக்கிறபடி, தேவ ஊழியர்களைக் கர்த்தர் எவ்விதம் தம்முடைய கரங்களில் வைத்து, தமது கிருபையினால் பாதுகாக்கிறார் என்பதைக் காண்பிக்கிறது.

**திரணைகள்:**

***மேஜையைச் சுற்றிலும்*** பொன்னினால் திரணை உண் டாக்கப்பட்டிருந்தது. மேஜைக்குச் சுற்றிலுமிருந்த ***பாதுகாக்கும் சட்டத்திற்கும்*** சுற்றிலும் பொன்னினால் திரணை உண்டாக்கப் பட்டிருந்தது. "சுற்றிலும் அதற்குப் பொன்னினால் திரணையை உண்டாக்கி" என்றும், "அதின் சட்டத்திற்குச் சுற்றிலும் பொன்னி னால் திரணையையும் உண்டாக்கி" என்றும் நாம் வாசிக்கிறோம் (யாத். 25 : 24, 25).

இவ்விரண்டு திரணைகளும், சபையை நன்றாய் விசாரணை செய்து திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர் களான, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணப்படும் மூப்பர்களைக் குறிக்கின்றன (I தீமோ. 5 : 17). நம்முடைய பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது அவர்கள் அவரிடமிருந்து மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவார்கள் (I பேதுரு 5 : 4). அவர்களுடைய ஊழியத்தினால் பயனடைந்து, அவ்வூழியத்தால் பாதுகாக்கப்பட்ட ஆத்துமாக்கள், அவர் வரும்போது அவ ருடைய சந்நிதானத்திலே அவர்களுக்கு மகிழ்ச்சியின் கிரீடமாயிருப் பார்கள் (I தெச. 2 : 19). இத்திரணைகள் பொன்னினால் செய்யப் பட்டிருப்பது, தேவ ஊழியர்கள் இவ்விதமான ஊழியத்தை நிறை வேற்றுவதற்கு அவர்களுக்குத் தேவையான 'தெரிந்துகொள்ளப் பட்டவர்களின் விசுவாசம்' (தீத்து 1 : 1 - 3) அல்லது 'அருமையான விசுவாசத்தைக்' (II பேதுரு 1 : 1) குறிக்கிறது. அவர்களுடைய அப்படிப்பட்ட விசுவாசம் சோதிக்கப்பட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது அவர்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் (I பேதுரு 1 : 7). அவர்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் மகிமையான தூதுகள், ஊழியத்தினிமித்தம் மகா பரிசுத்த விசுவாசத்தை அவர்களுக்கு அளிக்கிறது. அந்த விசுவாசம் ஊழியத்தினிமித்தம் அவர்களைத் தங்கள் சுய மகிமையை வெறுக்கச் செய்கிறது. அதனாலேயே தங்கள் சுய மகிமையையும் மேன்மையையும் ஊழியத்தினிமித்தம் விட்டுவிட்டவர்கள் தேவ மகிமையால் முடிசூட்டப்படுகிறார்கள்.

**துணை உபகரணங்கள்:**

"அதற்குரிய தட்டுகளையும், தூபக் கரண்டிகளையும், கிண்ணங் களையும், பானபலி கரகங்களையும் பண்ணக்கடவாய்; அவை களைப் பசும்பொன்னினால் பண்ணக்கடவாய்" (யாத். 25 : 29).

***தட்டுகள்:*** தட்டுகள் எதற்காக உபயோகிக்கப்பட்டன என்று எழுதப்படவில்லை. சமுகத்தப்பங்கள் 'பரிசுத்த மேஜையின்மேல்' வைக்கப்பட்டன என்று எழுதப்பட்டிருப்பதால், மேஜையின் மேல் அப்பங்கள் வைக்கப்படுவதற்காகத் தட்டுகள் உபயோகப்படுத்தப் படவில்லை என்பது தெளிவாயிருக்கிறது. எனவே, இவை, ஓய்வுநாள்தோறும் அந்த அப்பங்கள் மேஜையிலிருந்து எடுத்துப் புசிக்கப்படும்போது உபயோகிக்கப்பட்டிருந்திருக்கலாம். இது சபையைப் போஷிக்கும் ஊழியத்தைச் செய்கிற ஒரு தேவ ஊழிய னுக்கு இருக்க வேண்டிய பய பக்தியைக் காண்பிக்கிறது. "நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்" (எபி. 12 : 28) என எழுதப்பட்டுள்ளது.

***தூபக்கரண்டிகள்:*** இக்கரண்டிகள், சுத்தமான தூபவர்க் கத்தை எடுத்து கர்த்தருடைய சந்நிதியில் வரிசையாக வைக்கப் பட்ட அப்பங்கள் மேல் ஞாபகக்குறியாகப் போடும்படியாக உபயோகிக்கப்பட்டன. சபையைப் போஷிக்கிறவனாகத் தேவ சமுகத்தில் ஜீவிக்கும் ஒரு தேவ ஊழியனில் இருக்க வேண்டிய நன்றியுள்ள இருதயத்தை இது குறிக்கிறது. "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி. 13 : 15) என எழுதப்பட்டிருக்கிறது.

***கிண்ணங்கள்:*** மேஜையின் மேல் வைக்கப்பட்ட ஒவ் வொரு அப்பத்தையும் மூடும்படி இவை உபயோகிக்கப்பட்டி ருக்கக் கூடும். இது தேவ ஊழியர்கள் தங்களை வெளிப்படுத்த மனதற்றவர்களாய், தாழ்மையை அணிந்திருப்பதை வெளிப் படுத்துகிறது (I பேதுரு 5 : 5).

*பானபலி கரகங்கள்:* இவை, அப்பங்களைப் புசிக்கும் போது அதோடு சேர்த்து அருந்தும் பானங்கள் வைக்கப்படும் பாத்திரங்களாகும். "பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திரு வசனத்தை ஏற்றுக்கொண்டு" (I தெச. 1:6) என்று எழுதப்பட்டி ருக்கிறபடி, ஆவிக்குரிய ஆகாரத்தின் மேலுள்ள வாஞ்சையையும் சந்தோஷத்தையும் இது வெளிப்படுத்துகிறது.

**அதிகாரம் 6**

# பிராகாரமும் அதின் பணிமுட்டுகளும்

ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரம் 100 முழ நீளமும், 50 முழ அகலமுமுள்ளதாய்க் காணப்பட்டது (யாத். 27 : 9 - 19). ஐம்பது என்பது பெந்தெகொஸ்தே அனுபவத்தை அல்லது பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதைக் குறிக்கிறது. நூறு என்பது பரிசுத்த ஆவி முன்மாரியாகவும் பின்மாரியாகவும் பொழிந்தருளப்படும் இரண்டு காலங்களைக் குறிக்கிறது (யோவேல் 2 : 23 ; சக. 10 : 1). பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட பின்பே இப் பூமியில் மெய்யான கூடாரமாகிய சபை ஸ்தாபிக்கப்பட்டது. எனவே, கூடாரத்தைக் குறித்த வெளிப்படுத்தல் முன்மாரி காலமும் பின்மாரி காலமுமாகிய இரு காலங்களுக்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

வடக்கே இருபது வெண்கலத் தூண்களில் 100 முழ நீளமுள்ள தொங்கு திரைகளாலும், தெற்கே இருபது வெண்கலத் தூண்களில் 100 முழ நீளமுள்ள தொங்கு திரைகளாலும், மேற்கே பத்து வெண்கலத் தூண்களில் 50 முழ நீளமுள்ள தொங்கு திரைகளாலும், கிழக்கே வாசலின் ஒரு பக்கத்தில் மூன்று வெண்கலத் தூண்களில் 15 முழ நீளமுள்ள தொங்கு திரைகளாலும்,

வாசலின் மறுபக்கத்தில் மூன்று வெண்கலத் தூண்களில் 15 முழ நீளமுள்ள தொங்கு திரைகளாலும் பிராகாரம் அமைக்கப்பட்டிருந்தது. அதன் வாசலுக்கு நான்கு வெண்கலத் தூண்களில் 20 முழ நீளமுள்ள ஒரு தொங்கு திரை இருந்தது. இவ்விதம், இந்தப் பிராகாரம் 300 முழச் சுற்றளவும், அறுபது தூண்களுடையது மாயிருந்தது. ஒவ்வொரு தூணும் 5 முழ உயரமுள்ளதாயிருந்தது. இரு தூண்களுக்கு இடையே உள்ள இடைவெளி 5 முழமாயிருந்தது. தூண்களின் கொக்கிகளும், அவைகளை ஒன்றோடொன்று இணைக்கும் பூண்களும் வெள்ளியினாலானவையாகும்.

தேவன் நித்தியர். அவர் அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிறார் (சங். 90 : 2). 'தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, ... இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியம்' என எபேசியர் 3 : 9 - 11 - இல் எழுதப்பட்டிருக்கிறபடி, முந்தின நித்தியத்தில் உலகத்தோற்றத்துக்கு முன்னே தேவனுடைய மனதில் இருந்த அநாதி தீர்மானத்தின் அடிப்படையிலேயே அவருடைய கிரியைகள் காணப்படுகின்றன. இந்தத் திட்டம் முடிவுபெறும் போது வரப்போகும் நித்தியத்தில் அவை புதிய பூமி, புதிய வானம், புதிய எருசலேம் ஆகிய மூன்று வாசஸ்தலங்களாக வெளிப்படும் (வெளி. 21 : 1 - 3). பூமிக்குரிய கூடாரமானது வரப் போகும் இம்மூன்று வாசஸ்தலங்களுக்கும் நிழலாயிருக்கிறது.

பிராகாரத்தைச் சுற்றிலுமிருந்த சுற்றடைப்பு, அதனை வெளி உலகத்திலிருந்து வேறுபிரித்துப் பாதுகாத்தது. இது, நித்தியத்திலுள்ள மூன்று வாசஸ்தலங்களும், சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தைச் சேர்ந்தவையாயிராமல், எவ்விதம் ஒரு புதிய சிருஷ்டியாயிருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது (வெளி. 21 : 5). "கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய

இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும் ... பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபி. 9 : 11, 12) என நாம் வாசிக்கிறோம்.

வெண்மை நிறமான திரித்த மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட தொங்குதிரைகளாலான இச்சுற்றடைப்பானது, நாம் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிற புதிய சிருஷ்டி, அவருடைய வாக்குத்தத்தத்தின்படி நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியுமாய் இருக்கிறதென்பதைக் குறிக்கிறது (II பேதுரு 3 : 13).

சுற்றடைப்பிலிருந்த வெண்கலத் தூண்கள், கிறிஸ்துவையும் கிறிஸ்துவுக்குள் தேவன் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தையும் குறித்த வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளும்படியான கிருபை அளிக்கப்பட்டிருக்கும் அப்போஸ்தலரைக் குறிக்கின்றன (கலா. 2 : 9). அவர்கள் தூண்களைப் போல் நின்று, ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்த இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான சுவிசேஷத்தின் சத்தியத்திற்காகப் போராடுகிறார்கள் (ரோமர் 16 : 25 ; I கொரி. 4 : 1). தூண்களின் உயரம் 5 முழமாயிருப்பது - மாம்சத்தில் வெளிப்பட்ட கிறிஸ்துவையும், அவை வெண்கலத்தால் செய்யப்பட்டிருப்பது - சத்தியத்துடன் சேர்ந்துவரும் கிருபையையும், தேவன் கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கும் அநாதி தீர்மானத்தையும் குறிக்கிறது. இதைக் குறித்தே, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1 : 14) என்றும், "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது" (II தீமோ. 1 : 9, 10) என்றும் எழுதப்

பட்டுள்ளது. அப். பவுல் தன்னுடைய அழைப்பைக் குறித்துக் கூறுகையில், "கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தை ... அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (எபே. 3 : 8) என்று கூறுகிறார்.

யாதொன்றும் சிருஷ்டிக்கப்படும் முன்பே முந்தின நித்தியத்தில் சபையைக் குறித்து தேவனுடைய மனதில் மறைந்திருந்த அநாதி நோக்கம் உட்பட, அவருடைய இரகசியங்களின் பூரண வெளிப்படுத்தல், சபையின் காலமாகிய கிருபையின் கால நியமத்திலுள்ள அப்போஸ்தலருக்கு மட்டுமே அருளப்பட்டிருக்கிறது. எனினும், இதற்கு முன்பு நான்கு கால நியமங்கள் உண்டாயிருந்தன. அக்காலங்களில் தேவன் தம்முடைய ஆலோசனைகளைப் பங்குபங்காகவும் நிழலாட்டமாகவும் வெளிப்படுத்தி வந்தார். "பூர்வகாலங்களில் (முந்தின கால நியமங்கள்) பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் (கிருபையின் கால நியமத்தில்) குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; ... இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி. 1 : 1, 2) என எழுதப்பட்டுள்ளது. இங்கு 'உலகங்கள்' (Gk. Aion - யுகம்) என்பது பல்வேறு கால நியமங்களைக் குறிக்கிறது. அவை, (1) தூதர்களின் கால நியமம், (2) அறியாமையின் கால நியமம், (3) மனச்சாட்சி கால நியமம், (4) நியாயப்பிரமாண கால நியமம், (5) சபையின் காலமாகிய கிருபையின் கால நியமம் என்பவையாகும். பன்னிரண்டு அப்போஸ்தலரின் நாமங்கள் எழுதப்பட்ட புதிய எருசலேமின் பன்னிரண்டு அஸ்திபாரங்கள், பன்னிரண்டு கோத்திரங்களின் பெயர் எழுதப்பட்ட அதின் பன்னிரண்டு வாசல்கள், வாசல்களின் அருகேயிருந்த பன்னிரண்டு தூதர்கள் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருப்பது போல (வெளி. 21 : 12 - 14), சபையைப் பற்றி அப்போஸ்தலருக்கு அருளப்பட்ட ஆலோசனை முழுவதும் பன்னிரண்டு என்னும் இலக்கத்தால் குறிப்பிடப்படுகிறது.

எனவே அறுபது தூண்கள் (12 x 5) என்பது, ஐந்து கால நியமங்களாகப் பாதுகாக்கப்பட்டுவரும் தேவனுடைய ஆலோசனையையும், அதைப் பாதுகாத்துவருகிறவர்களையும் குறிக்கிறது. தேவனுடைய அநந்த ஞானமானது தூதர்களுக்கும், நமக்கு முந்தின கால நியமங்களில் ஜீவித்த பரிசுத்தவான்களுக்கும் சபையின் மூலமாகவே தெரிய வருகிறது (எபே. 3 : 10, 11 ; I பேதுரு 1 : 10 – 12).

தூண்கள் ஒன்றோடொன்று வெள்ளிப் பூண்களினால் இணைக்கப்பட்டிருந்தன. இது, நித்திய மீட்புக்குப் பங்குள்ளவர்களான யாவரும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட்டு சேர்த்துக் கட்டப்பட வேண்டுமென்பதே தேவனுடைய மனதிலிருந்த இறுதியான நோக்கமாயிருந்தது என்பதைக் குறிக்கிறது. நிழலாட்டமாகப் பங்குபங்காக நான்கு கால நியமங்களிலும் வெளிப்படுத்தப்பட்ட தேவ ஆலோசனை, கடைசியாகக் கிருபையின் காலத்தில் அல்லது காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தில், தேவனுடைய பூரண ஆலோசனையாக, ஒப்புரவாக்குதலின் கிரியையின் மூலம் சகலத்தையும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டிச் சேர்க்கிறது. இதனாலேயே "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்" (எபே. 1 : 9, 10) என்று எழுதப்பட்டுள்ளது. இது அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படி மீட்கப்படும் சபையை அல்லது வரப்போகும் நித்தியத்தில் வெளிப்படும் புதிய எருசலேமையே முக்கியமாகக் குறித்தாலும், புதிய வானத்திலும் புதிய பூமியிலும் இருப்பவர்கள், சபையின் மூலமாகவே தங்கள் நிலையில் பூரணராக்கப்படுகிறார்கள். "அவர்கள் (மற்றவர்கள்) நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றைத் தேவன் நமக்கென்று (புதிய ஏற்பாட்டுச் சபை)

முன்னதாக நியமித்திருந்தார்" (எபி. 11 : 40). எனவே தூண்களைப் போல் நின்று சத்தியத்திற்காகப் போராடும் அப்போஸ்தலர் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாய் நியமிக்கப்படுகிறார்கள். ஒப்புர வாக்குதலின் ஊழியமும் உபதேசமும் அவர்களிடம் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது (II கொரி. 5 : 18 - 20). தேவனுடைய நித்திய மீட்பின் திட்டத்திற்காக அவர்கள் சேர்ந்து கிரியை செய்கிறார்கள். இவ்விதமாகக் கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியாகிய சபையும் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொண்டு, சகலத்தையும் நித்திய வாசஸ்தலமாக அல்லது தேவனுடைய ராஜ்யமாகக் கூட்டிச் சேர்த்து, நித்தியம் முழுவதையும் ஆளுகை செய்கிறார்கள் (வெளி. 21 : 1 - 3, 7).

***பிராகாரத்தில் வெண்கலத் தொட்டியும் தகன பலி பீடமும் இருந்தன.***


## வெண்கலத் தொட்டி

(யாத். 30 : 18 - 21 ; 38 : 8)

"கழுவுகிறதற்கு வெண்கலத்தால் ஒரு தொட்டியையும், வெண்கலத்தால் அதின் பாதத்தையும் உண்டாக்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக" (யாத். 30 : 18); "ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் கூட்டம் கூட்டமாய்க் கூடின ஸ்திரீகளின் தர்ப்பணங்களாலே, வெண்கலத் தொட்டியையும் அதின் வெண்கலப் பாதத்தையும் உண்டாக்கினான்" (யாத். 38 : 8).

வெண்கலத் தொட்டி பல ஆவிக்குரிய சத்தியங்களை நமக்குப் போதிக்கிறது. அவற்றுள் சிலவற்றை நாம் கீழே காண்போம்:

1. வெண்கலத் தொட்டி, தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் அனுபவிக்கும் கிருபைக்கும் சத்தியத்திற்கும் நிழலாட்டமாய் இருக் கிறது. எகிப்திலிருந்து புறப்பட்ட எபிரெய ஸ்திரீகள் எகிப்திய ஸ்திரீகளைப் போல தங்கள் முகங்களை அழகுபடுத்தும்படி



வெண்கலத் தொட்டி

தர்ப்பணங்களை அதாவது முகம் பார்க்கும் கண்ணாடிகளை உபயோகித்திருக்கக் கூடும். அவ்வாறே நாமும் பாவத்திற்கும் இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்திற்கும் அடிமைகளாய் ஜீவித்த காலத்தில் இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி ஜீவித்து, உலகத்திற்கொத்த வேஷந்தரிக்கிறவர்களாயிருந்தோம் (எபே. 2 : 2 ; ரோமர் 12 : 2).

இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்து, தங்களைப் பின்தொடர்ந்துவந்த எகிப்தியரின் சேனையிலிருந்து இரட்சிக்கப்பட்டது போல, முன்பு நம்மை நம் மாம்சமும் மனதும் விரும்பினவைகளை நடப்பிக்கச் செய்ததும், இவ்வுலக வழக்கத் திற்கேற்றபடி நடக்கச் செய்ததும், நம்மோடு போராடிக்கொண்டி ருந்ததுமான பாவ சுபாவத்திலிருந்து (சங். 51 : 5 ; எபே. 2 : 2, 3), தண்ணீர் ஞானஸ்நானத்தில் ஒரு பக்கத்தில் நாம் விடுதலை யாக்கப்படுகிறோம் (ரோமர் 6 : 1, 2); மற்றொரு பக்கத்தில் நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்கிறோம் அல்லது புதிதான ஜீவ னுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படி அவருடைய சித்தத்திற்கும் கீழ்ப்படிதலின் சுபாவத்திற்கும் பங்குள்ளவர்களாகிறோம் (கலா. 3 : 27 ; ரோமர் 6 : 4). தேவசித்தம் செய்கிற இந்தப் பாதையில் நாம் நடக்கும்படி தேவ வசனமாகிய கண்ணாடியை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்க வேண்டும் (யாக். 1 : 22 - 25). இதையே முகம் பார்க்கும் கண்ணாடிகளாகிய தர்ப்பணங்களால் உண்டாக்கப்பட்ட வெண்கலத் தொட்டி குறிக்கிறது. இவ்விதம் நாம், கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் மகிமையின் மேல் மகிமையடைந்து கர்த்தருடைய சாயலாய் மறுரூபமடைகிறோம் (II கொரி. 3 : 18).

2. கூடாரத்திலுள்ள மற்ற பணிமுட்டுகளுக்கு அளவுகள் குறிப்பிடப்பட்டிருக்க, வெண்கலத் தொட்டிக்கோ யாதொரு அளவும் குறிப்பிடப்படவில்லை. வெண்கலம் கிருபையைக் குறிக்கிறது.

தொட்டிக்கு அளவு குறிப்பிடப்படாமல் இருப்பது, "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" (ரோமர் 5 : 20) என்று எழுதப்பட்டிருக்கிறபடி, ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதால் நாம் பெற்றுக்கொள்ளும் கிருபையின் அளவற்ற ஆசீர்வாதங்களைக் குறிக்கிறது.

3. ஞானஸ்நானம் உள்ளான மனந்திரும்புதலுக்கான ஒரு புறம்பான அடையாளம் மாத்திரமே என சிலர் போதிக்கிறார்கள். ஆனால் அது அப்படியல்ல. அது உண்மையாயிருக்குமாயின், வெளிப்பிராகாரத்தினுள் பலிசெலுத்தும்படி மிருகங்களைக் கொண்டுவந்த விருத்தசேதனம் பெற்ற இஸ்ரவேலர் யாவரும், நிழலாட்டமாக அந்தத் தொட்டியில் கழுவப்பட்டிருந்திருக்க வேண்டுமல்லவா? அபிஷேகம்பண்ணப்பட்டவர்களான ஆசாரியர் மாத்திரம் தங்களைத் தண்ணீரால் கழுவிக்கொண்ட பின்பு வாசஸ்தலத்திற்குள் பிரவேசிக்கக் கூடியவர்களாயிருந்தார்கள். இதற்காகவே தொட்டி வாசஸ்தலத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைக்கப்பட்டிருந்தது. மறுபடியும் பிறந்த தேவபிள்ளைகள் பரிசுத்த ஆவியைப் பெற்று தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும்படி தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதை இது வெளிப்படுத்துகிறது. எனவேதான், "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3 : 5) என்று கர்த்தராகிய இயேசுவும், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2 : 38) என்று அப். பேதுருவும் கூறியிருக்கின்றனர்.

4. தொட்டியில் இரு தேவைகளுக்காகத் தண்ணீர் நிரப்பப்பட்டிருந்தது:

(a) ஆரோனும் அவனுடைய குமாரரும் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு முன்பு தண்ணீரினால் கழுவப்பட்டார்கள் (யாத். 29 : 4). அப்போது அவர்கள் தங்கள் பழைய வஸ்திரங்களைக் களைந்து, புதிய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டனர். இது, நாம் பழைய மனுஷனையும் அவனது செய்கைகளையும் களைந்து போட்டு, புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வதைக் குறிக்கிறது (கொலோ. 3 : 9, 10). முகம் பார்க்கும் கண்ணாடிகளால் உண்டாக்கப் பட்ட தொட்டியிடம் ஒரு மனிதன் கொண்டுவரப்படுவது, தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு முன்பு நாம் நம்மிலுள்ள பாவக் கிரியை களுடன் கூடிய பழைய மனுஷனைக் காணக்கூடியவர்களாயிருப் பதைக் குறிக்கிறது. "நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 6 : 6) என்று எழுதப்பட்டுள்ளபடி, இந்தப் பழைய மனுஷனை நாம் மனந்திரும்புதலின் மூலமாகவும் பாவ அறிக்கை யின் மூலமாகவும் களைந்துபோடுகிறோம்.

(b) "அவன் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே தொட்டியை வைத்து, கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர் வார்த்தான். அவ்விடத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவினார்கள்" (யாத். 40 : 30 , 31) என்று எழுதப்பட்டிருப்பதைப் போன்று, அனுதினமும் அவர்கள் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவுவதற்காகத் தொட்டியில் தண்ணீர் வார்க்கப்பட்டிருந்தது. இது அபிஷேகம் பெற்ற தேவஜனங்கள் அனுதினமும் தேவ வசன மாகிய கண்ணாடியில் தங்களைத் தாங்களே கண்டு, தங்களைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டியதும், பழைய மனுஷனுடைய சுபாவத்திற்குத் தங்களை மரித்தவர்களாக எண்ணிக்கொள்ள வேண்டியதும் அவசியமாயிருக்கிறது என்பதை வெளிப்படுத்து கிறது (ரோமர் 6 : 11). ஆகவேதான், "தாம் அதைத் (சபையைத்) திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்" (எபே. 5 : 26) என்று எழுதப்பட்டிருக்கிறது.

5. தண்ணீர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதின் மூலம் நாம் விசுவாசத்தினால் தேவபுத்திரராகிறோம் (கலா. 3 : 26, 27). அதன் பின்னர், நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறவர்களாகிறோம். ஒரு அம்சத்தில், ஒரு வரையும் மாம்சத்தின்படி அறியாதிருக்கும்படியாக நாம் நம்மைக் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாகவும் அடக்கம்பண்ணப்பட்டவர் களாகவும் எண்ணிக்கொள்ளுகிறோம். மரணமும் அடக்கம் பண்ணப்படுதலும் மாம்சத்துக்குரிய எல்லா வித்தியாசங்களையும் அகற்றி, நம்மை உலகத்திற்கும் உலகத்திலுள்ளவைகளுக்கும் மரித்தவர்களாயிருக்கச் செய்கிறது (கலா. 3 : 28 ; 6 : 14). மற்றொரு அம்சத்தில், கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது நாம் 'மகிமையான உயிர்த்தெழுதலில்' பங்குபெறுவோம் என்ற நம்பிக்கையுடன், கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினால் ஒரு உயிர்த்தெழுந்த ஜீவியம் செய்ய ஆரம்பிக்கிறோம் (கொலோ. 2 : 12 ; ரோமர் 6 : 5). நாம் கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்போது முடிவான புத்திர சுவிகாரத்தில் பங்குபெறும்படி, அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக நம் முடைய சரீரம் முற்றிலும் மீட்கப்படும் (ரோமர் 8 : 23). ஆசாரியன் வெண்கலத் தொட்டியில் கழுவப்பட்ட பின்னர் புதிய வஸ்திரங் களைத் தரித்துக்கொள்ளுதல், நாம் புதிய மனுஷனைத் தரித்துக் கொள்வதை வெளிப்படுத்துவதாயிருக்கிறது, தன்னைச் சிருஷ்டித்த வருடைய சாயலுக்கொப்பாய்ப் புதிதாக்கப்பட்ட இப்புதிய மனுஷன் (கொலோ. 3 : 10), முடிவான புத்திர சுவிகாரத்தை அடையும் வரை மகிமையின் மேல் மகிமையடைந்து, பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ளும்படி சரீர மீட்பைப் பெற்றுக் கொள்ளும்படி காத்திருந்து தவிக்கிறது. ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்ட நாம் நாளுக்கு நாள் அவருடைய அதே சாயலில் வளர்ந்து, அவர் வெளிப்படும்போது அவருக்கு ஒப்பாயிருப்போம் (II கொரி. 5 : 1 - 3 ; I யோவான் 3 : 2).


# தகன பலிபீடம்

(யாத். 27 : 1 - 8)

தகன பலிபீடத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய பதம் 'MIZBEACH' என்பதாகும். அதன் அர்த்தம், 'ஆடு மாடுகள் கொல்லப்படும் இடம்' (slaughter house) என்பதாகும். இதி லிருந்து பலிபீடம் என்பது, அடிக்கப்படும்படி கொண்டுபோகப் படுகிற ஆட்டுக்குட்டியைப் போன்றவரும், தம்மைத்தாமே கல்வாரியில் பூரண பலியாக ஒப்புக்கொடுத்தவருமான கிறிஸ்து வின் பாடுகளைக் குறிக்கிறது என நாம் விளங்கிக்கொள்ளு கிறோம் (அப். 8 : 32 ; எபி. 9 : 14).

பலிபீடம் 5 முழ சதுர வடிவாயும், 3 முழ உயரமுள்ள தாயும் இருந்தது. இது, தேவனுக்குச் சமமாயிருந்தவரும், பலி யாக மாறும்படியாக மனுஷனானவருமான கிறிஸ்துவைக் குறிக் கிறது' (பிலி. 2 : 5 - 7). 3 என்ற இலக்கம் திரித்துவ தேவனைக் குறிப்பதால், அது கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், 5 என்ற இலக்கம் ஐம்புலன்களையுடைய மனிதனைக் குறிப்பதால், கிறிஸ்துவின் மனுஷீகத்தையும் குறிக்கிறது. அவர் பூரண தேவனும் பூரண மனுஷனுமாயிருந்தார்; அல்லது தேவகுமாரனும் மனுஷகுமாரனுமாயிருந்தார்.

ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்திற்குள் பிரவேசிக்கிற எந்த மனுஷனும் முதலாவதாகப் பலிபீடத்தைச் சந்திக்கிறான். அதுபோலவே, கிறிஸ்துவாகிய வாசலின் மூலம் பிரவேசித்து இரட்சிக்கப்பட்டவர்களாகிய நாம், தேவனுக்கென்று ஜீவபலி யாகும்படியாகக் கிறிஸ்துவுடனேகூட நம்மைப் பலிபீடத்தில் அர்ப்பணிக்க வேண்டும். எனவேதான், "உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12 : 1) என்றும், "புறஜாதி யாராகிய பலி பரிசுத்தஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு" (ரோமர் 15 : 15)



தகன பலிபீடம்

என்றும், "உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம்" (ரோமர் 8 : 35) என்றும் எழுதப்பட்டுள்ளது. தேவனுக்கென்று இவ்விதம் நாம் நம்முடைய ஜீவியங்களை முற்றிலும் ஒப்புக்கொடுக்கும் போது, அப். பவுல் கூறுவது போல, நாம் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் (II தீமோ. 1 : 12).

**வெண்கலத்தால் பொதியப்பட்டது:**

மரத்தினால் செய்யப்பட்ட பலிபீடத்தின் மேல் அக்கினி எப்போதும் எரிந்துகொண்டிருந்தும், அது சுட்டெரிக்கப்பட்டுப் போகவில்லை. ஏனெனில் அது வெண்கலத்தால் பொதியப் பட்டிருந்தது. வெண்கலத்தால் பொதியப்பட்டிருக்கும் மரம் நெருப்பில் எரிந்துபோகாமல் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்று இன்று நாம் அறிந்திருக்கிறோம். எனினும் தேவனுடைய மனதில் மறைந்திருந்த இரகசியமானது மாதிரிகள், நிழலாட்டங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் பொருட்டு பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பாகவே இது மோசேக்கு வெளிப்படுத்தப்பட்டது. மரம் என்பது, பெலவீனமான மனுஷ சுபாவத்தை அல்லது அக்கினி சோதனை வழியாய்க் கடந்து செல்லும்போது எளிதாய்ச் சோர்ந்து போகக் கூடியதான பெலவீனமான மாம்சத்தைக் காண்பிக்கிறது. கர்த்தராகிய இயேசு சோதனைக்குட்படக்கூடிய சந்தர்ப்பத்தைப் பற்றிப் பேசும்போது, "மாம்சமோ பலவீனமுள்ளது" என்கிறார் (மத். 26 : 41). ஆயினும், வெண்கலம் எப்படி மரத்தைப் பாது காக்கிறதோ, அப்படியே தேவனுடைய கிருபையானது மனு ஷனை எத்தகைய சோதனையிலும் பாதுகாக்க வல்லமையுள்ள தாயிருக்கிறது.

தம்மைப் பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து வுங்கூட தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் (எபி. 2 : 9). அப். பவுல் உலகத்தோற்றத் துக்கு முன்பாகவே கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்குக் கிருபை அருளப்பட்டது என்று கூறியிருப்பினும் (II தீமோ. 1 : 9 - Eng.),

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமான தினாலே இது வெளியாக்கப்பட்டது (வச. 10). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இது வெளிப்படுத்தப்படவில்லை. அப். பேதுரு தன் னுடைய நிருபத்தில், "கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்ட படியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்" என்றும், "உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" என்றும் எழுதுகிறார் (I பேதுரு 4 : 1, 12). "ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக் கிறவர்கள் ... தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" (வச. 19) என்று அவர் முடிவாகக் கூறுகிறார். இந்தப் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அக்கினி போன்ற பரிசோதனைகளைச் சகிக்க வேண்டிய தேவசபையைப் பாதுகாப்பதற்குத் தேவனுடைய கிருபையானது எவ்வளவு இன்றியமையாதது என்று இதிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம்.

அப். பவுல் தன்னுடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் அருளப்பட்ட கிருபையைப் பற்றிக் குறிப்பிடுகையில், "ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்க ளெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது" (I கொரி. 15 : 10) என்றும், "மேலும், உங்கள் விசுவாச மாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப் பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன்" (பிலி. 2 : 17) என்றும் சொல்லும் அளவுக்குப் பிரயாசப்பட்டார். அவர் எபிரெயருக்கு எழுதின நிருபத்தில், நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருப்பதால், அசை வில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம், தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம் என்கிறார் (எபி. 12 : 28, 29).

"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக" (I பேதுரு 5 : 10) என்று அப். பேதுரு கூறுவதும், "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" (II கொரி. 4 : 17) என்று அப். பவுல் கூறுவதும், மகா பரிசுத்த ஸ்தலத்தில் இரண்டு கேரு பீன்கள் மத்தியில் காணப்பட்ட தேவ மகிமையையே குறிக்கின்றன. இதன் காரணமாகவே, சுவிசேஷத்தினிமித்தம் பத்மு என்னும் தீவுக்கு நாடுகடத்தப்பட்டிருந்தவரும், 'உபத்திரவத்துக்கு உடன்பங் காளன்' என்று தன்னைக் குறித்துக் கூறுகிறவருமான அப். யோவா னுக்கு (வெளி. 1 : 9), தேவனுடைய மகிமையை அடைந்த எருச லேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டுத் தேவனிடத்திலி ருந்து இறங்கி வருகிறதான தரிசனம் அருளப்பட்டது.

**அக்கினி:**

பலிபீடத்தின்மேல் எரிந்துகொண்டிருந்ததான பரலோகத் திலிருந்து இறங்கிவந்த அக்கினி, ஒரு அம்சத்தில் சபையானது கடந்துசெல்ல வேண்டியதும், பரலோகத்திலிருந்து அனுமதிக்கப் படுகிறதுமான அக்கினி சோதனைகளையும் பாடுகளையும் குறிக்கிறது. மற்றொரு அம்சத்தில், அது பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டு நம்மைப் பரிசுத்தப்படுத்துகிற பரிசுத்த ஆவியின் அக்கினியைக் குறிக்கிறது. இவ்விதமாகச் சபையானது, நம் முடைய இரட்சிப்பின் அதிபதி நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, பாடு களின் வழியாகப் பூரணப்படுத்தப்பட்டது போல, பாடுகளின் மூலம் பூரணத்துக்குக் கடந்து செல்லுகிறது (எபி. 2 : 10 ; 9 : 14). இருப்பினும் இதே அக்கினியானது, தேவனை அறியாதவர் களும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படியாதவர்களுமாகிய இவ்வுலகத்திலுள்ள தேவபக்தி

யற்றவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் அக்கினி யாகவும் கோபாக்கினையாகவும் (II தெச. 1 : 7, 8), வானங்களும் பூமியும் நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறபடியால், முழு உலகத்திற்கும் பட்சிக்கிற அக்கினியாகவும் மாறிவிடுகிறது (II பேதுரு 3 : 7).

**உள்வெளிவிட்டுச் செய்யப்பட்டது:**

உட்புறத்தில் மரம் அகழ்ந்தெடுக்கப்பட்டு குழாயைப் போன்று உள்ளே வெறுமையானதாயிருந்த (hollow) பலிபீடமானது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எவ்விதம் தம்மை வெறுமை யாக்கினார் என்பதைக் காட்டுகிறது. “அவர் தேவனுடைய ரூப மாயிருந்தும், ... தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்” (பிலி. 2 : 6 - 8). இதிலிருந்து கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளி களாகும்படி அழைக்கப்பட்ட நாம், நம்மை நாமே வெறுமையாக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று அறிந்து கொள்கிறோம். இப்படியாக நாம் நம்மை வெறுமையாக்கும்போது, “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் (தம்மைத்தாமே வெறுமையாக்கி) தரித்திர ரானாரே” (II கொரி. 8 : 9) என்று எழுதப்பட்டிருக்கிறபடி, கிருபை யால் நிரப்பப்படுகிறோம்.

**வலைப்பின்னல் போன்ற சல்லடை:**

வலைப்பின்னல் போன்ற சல்லடை, எரிந்துகொண்டி ருக்கும் பலிப்பொருளின் சாம்பலோடு பலிபீடத்தினடியில் விழுகின்ற எரியாத துண்டங்களைத் தன்னில் தங்க வைக்கிறது (யாத். 27 : 4, 5). அந்தத் துண்டங்கள் அனைத்தும் எரிந்து

சாம்பலாகும்படியாக, அவை திரும்பவும் நெருப்பிலே இடப்படு கின்றன. இந்த வெண்கலச் சல்லடை, நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஆராய்ந்து அறிகிற தேவனுடைய வசனத்தைக் குறிக்கிறது. "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்து கிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபி. 4 : 12) என்று எழுதப் பட்டுள்ளதே! "அந்த வார்த்தை மாம்சமாகி, ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1 : 14) என்று குறிப்பிடப்படுபவரும் பாடுகளின் மூலமாகப் பூரணராக்கப்பட்டவருமான கிறிஸ்துவே நம்முடைய அளவுகோலாய் இருக்கிறபடியால், நாம் பரிசுத்த ஆவியின் பரிசுத்தமாக்குகிற அக்கினியினாலே முற்றிலும் சாம்ப லாக்கப்பட்டிருக்கிறோமா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**நான்கு கொம்புகள்:**

பலிபீடத்தின் நான்கு மூலைகளிலும் கொம்புகள் காணப் பட்டன. "நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்" (லூக்கா 1 : 75) என்று எழுதப்பட்டிருக்கிறபடி, இது, நமக்கு இரட்சணியக் கொம்பாகும்படி பூரண பலியாக்கப்பட்டவரான - பூமியின் நான்கு திசைகளுக்கும் இரட்சகராக்கப்பட்டவரான - கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது. மேலும் இக்கொம்புகள், நம் ஜீவியத்தில் எல்லாப் பக்கங்களிலுமிருந்து சோதனைகளைச் சந்திக்கும்போது நாம் இரட்சிப்பின் பெலத்தில் உறுதியாய் நிற்பதைக் காண் பிக்கிறது. முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பலியாகும் அனுபவத்தின் மூலமாகவே இது சாத்தியமாகும்.

**அதிகாரம் 7**

# வாசல்கள்

ஆசரிப்புக்கூடாரத்திற்கு மூன்று வாசல்கள் இருந்தன. அவையாவன:

1. மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்படியான திரைச் சீலை (veil) (யாத். 26 : 33).
2. பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்படியான வாசல் அல்லது கதவு (door) (யாத். 26 : 36).
3. வெளிப் பிராகாரத்திற்குள் பிரவேசிக்கும்படியான வாசல் (gate) (யாத். 27 : 16).

மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம், வெளிப் பிராகாரம் ஆகியவற்றின் வாசல்கள் ஒவ்வொன்றும் "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவான் 10 : 9) என கர்த்தராகிய இயேசு கூறியுள்ளபடி, ஒரே வாசலாகிய கிறிஸ்துவையே குறிக்கின்றன.

இந்த வாசல்களுக்கான தொங்குதிரைகள் ஒரேவிதமான நூல்களினால் - இளநீலநூலினாலும் இரத்தாம்பரநூலினாலும் சிவப்புநூலினாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலினாலும் நெய்யப் பட்டவையாயிருந்தன. ஆனால், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் வழியாகிய 'திரைச்சீலை'யின் மீது மட்டும் விசித்திர

வேலையாகக் கேருபீன்கள் நெய்யப்பட்டிருந்தன. இளநீலம், இரத்தாம்பரம், மெல்லிய பஞ்சு, சிவப்பு ஆகிய இந்த நான்கு வித நூல்களும் முறையே, நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாக விளங்கும் கிறிஸ்துவைக் குறிக்கின்றன (I கொரி. 1 : 31).

**1. *திரைச்சீலை* (veil) :**

நான்கு விதமான நூல்களால் உண்டாக்கப்பட்டிருந்த திரைச்சீலை கிறிஸ்துவைக் குறிக்கிறது. எபிரெயர் 10 : 19 - இல் எழுதப்பட்டுள்ளபடி, இயேசுவானவர் தமது மாம்சமாகிய அல்லது சரீரமாகிய திரையின் வழியாய்ப் 'புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார்'. இது பரலோகத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் வழியாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தின் 'கைகளால் செய்யப்பட்ட கூடாரம்' நிற்குமளவும் இந்த மார்க்கம் வெளிப்படவில்லை (எபி. 9 : 8, 11). கிறிஸ்து தமது சரீரத்தில் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். கல்வாரியில் அவருடைய சரீரமாகிய சபைக்காக அவரது சரீரம் நொறுக்கப்பட்டு, அதன் மூலம் அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றியபோது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது. இப்படியாக அவர் புதிய ஏற்பாட்டுச் சபைக்குத் தேவையான பூரணத்தை வெளிப்படுத்தினார்.

இந்தத் திரைச்சீலையின் மீது விசித்திர வேலையாக நெய்யப்பட்டிருந்த கேருபீன்கள், நாம் பூரணத்திற்குக் கடந்து செல்வதற்குத் தேவையான கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்கள் நிறைவாக அருளப்பட்டுள்ள மெய்யான அப்போஸ்தலர்களை வெளிப்படுத்துகின்றன. இவர்கள் பிலிப்பியர் 3 : 8, 11 - இல் சொல்லப்பட்டுள்ளபடி கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள்; அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டவர்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய புதிய ஏற்பாட்டுச் சபையானது அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள்,

சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் ஆகியோரின் ஊழியத்தின் மூலமாக இப்பூரணத்திற்குக் கொண்டுவரப்படுகிறது (எபே. 4 : 11 - 13). இந்த உத்தியோகங்களுள், I கொரிந்தியர் 12 : 28 - இல் கூறப் பட்டுள்ளபடி அப்போஸ்தலரின் ஊழியமே முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிறது. இதையே திரைச்சீலையில் விசித்திர வேலையாய்ச் செய்யப்பட்ட கேருபீன்கள் குறிக்கின்றன. மற்ற நான்கு ஊழியங்களும் திரைச்சீலை தொங்குவதற்கு ஆதாரமா யிருந்த நான்கு தூண்களால் நிழலாட்டமாக வெளிப்படுத்தப் படுகிறது. எனவே பூரணத்திற்கென்று, கிறிஸ்துவின் ஞானம், நீதி, பரிசுத்தம், மீட்பு ஆகியவற்றை அறிகிற அறிவின் மேன்மை யானது முதலாவது அப்போஸ்தலருக்கும், பின்பு மற்ற உத்தி யோகஸ்தருக்கும் அருளப்பட்டு, அவர்கள் மூலமாகச் சபைக்கும் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த வெளிப்படுத்தல்களினால் புதிய ஏற்பாட்டுச் சபை பூரணத்தை அடைந்துகொள்ளுவதற்குக் கர்த்த ராகிய இயேசுகிறிஸ்து 'வாசலாகத்' திகழ்கிறார்.

அப். யோவானுக்குப் பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேம் தரிசனத்தில் காண்பிக்கப்பட்டதன் மூலமாக, தேவனுடைய மகிமையை அடைந்ததும், கிறிஸ்துவின் மணவாட்டியாக அலங் கரிக்கப்பட்டதுமான பூரணமாக்கப்பட்ட சபையைப் பற்றிய வெளிப் படுத்தல் கொடுக்கப்பட்டது (வெளி. 21 : 2, 9, 10). புதிய எருச லேமின் வாசல்களின் மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னி ரண்டு கோத்திரத்தாருடைய நாமங்கள் எழுதப்பட்டிருந்தன; வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்கள் இருந்தார்கள். 12 என்னும் இலக்கம் அப்போஸ்தலரையே குறிக்கிறது. சபையைப் பற்றிய ஆலோசனை முழுவதும் கிறிஸ்துவுக்குள்ளாக அப்போஸ் தலருக்கே அருளப்பட்டிருக்கிறது. மேற்கூறப்பட்டுள்ள பன்னிரு கோத்திரத்தாரும், பன்னிரு தூதருமாகிய இரண்டு கூட்டத்தாரும் கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தலைப் பெற்றவர்களா யிருப்பினும், இவர்கள் அப்போஸ்தலரைப் போல பூரண வெளிப் படுத்தலைப் பெற்றுக்கொண்டவர்கள் அல்லர். *பழைய ஏற்பாட்டுப்*

*பரிசுத்தவான்கள்* நியாயப்பிரமாணத்தைப் பெற்று, அதைப் போதித்ததின் மூலமாக, புதிய ஏற்பாட்டுச் சபையாராகிய நமக்குக் கிறிஸ்துவின் இரகசியத்தை நிழலாட்டங்களாகவும் மாதிரிகளா கவும் தெரிவித்திருக்கிறார்கள். கிறிஸ்துவைப் பற்றிய இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கு ஆவி யானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங் களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை (எபே. 3 : 6). இந்த வெளிப்படுத்தல்கள், பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே அப்போஸ்தலர் மூலமாகச் சபைக்கு அறிவிக்கப் பட்டுவருகிறது. இவைகளை உற்றுப்பார்க்கத் தேவ *தூதரும்* ஆசை யாயிருக்கிறார்கள் (I பேதுரு 1 : 10 - 12). "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசு கிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக் குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டி ருக்கிறது" (எபே. 3 : 9 – 11) என அப். பவுல் எழுதுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்தின் பிராகாரத்திற்குச் செல்லும் வாசலும் (gate), பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகும் வாசலும் (door), முன் கூறப்பட்டபடியே, நான்கு விதமான நூல்களினால் உண்டாக்கப் பட்ட அவற்றின் தொங்குதிரைகளுங்கூட, நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாக விளங்கும் கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தலையே காட்டுகின்றன. இவ்வெளிப்படுத்தலைப் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் தேவதூதர்களும் நிழ லாட்டமாக அல்லது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மாத்திரமே பெற்றிருந்தனர்.

**2. பரிசுத்த ஸ்தலத்தின் வாசல்** (door):

தூண்களை ஆதாரமாகக்கொண்டு தொங்குதிரைகள் இடப்பட்டிருந்த பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகும்படியான வாசலில் காணப்பட்ட ஐந்து தூண்களும், பழைய ஏற்பாட்டின் காலத்தில் காணப்பட்ட ஐந்து விதமான ஆளுநர்களாகிய (i) கோத்திரப் பிதாக்கள், (ii) ஆசாரியர்கள், (iii) நியாயாதிபதிகள், (iv) ராஜாக்கள், (v) தீர்க்கதரிசிகள் (தேசாதிபதிகள்) ஆகியோரைக் காண்பிக்கின்றன.

இந்த ஐந்து வித ஆளுநர்களும் தாங்கள் ஜீவித்திருந்த காலத்தில் கிறிஸ்துவைப் பற்றிய பூரண வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளாவிடினும், முன்பு சொல்லப்பட்டதைப் போல, இவர்கள் தங்களது ஜீவியம், ஊழியம் ஆகியவற்றின் மூலமாகப் புதிய ஏற்பாட்டுச் சபையின் பூரணத்திற்காகக் கிறிஸ்துவை நிழலாட்டமாகவும் மாதிரிகளாகவும் வெளிப்படுத்தினர். இனிவரும் நித்தியத்தில் இவர்களும் பூரணமாக்கப்பட்ட சபையின் மூலமாகவே, நமது ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாக விளங்கும் கிறிஸ்துவைப் பற்றிய நிறைவான வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வர்.

**3. பிராகாரத்தின் வாசல்** (gate) :

நான்கு விதமான நூல்களினால் உண்டாக்கப்பட்ட திரையானது தொங்கிக்கொண்டிருந்த பிராகார வாசலின் நான்கு தூண்களும் கொலோசெயர் 1 : 16 - இல் கூறப்பட்டுள்ளபடி தூதர்களிடையே காணப்படும் நான்கு வகுப்புகளாகிய (i) சிங்காசனங்கள் (ii) கர்த்தத்துவங்கள் (iii) துரைத்தனங்கள் (iv) அதிகாரங்கள் ஆகியவற்றைக் குறிக்கின்றன. இத்தூதர்கள் மூலமாகவே பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொண்டனர் (அப். 7 : 53). இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களுக்குப் பணிவிடை செய்யும்போது அவர்கள் சபையின் மூலமாக நமது ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாக விளங்கும் கிறிஸ்துவைப் பற்றிய பூரண வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுகின்றனர் (எபே. 3 : 10).

**அதிகாரம் 8**

# பலகைகளும் தாழ்ப்பாள்களும்

ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலமும் மகா பரிசுத்த ஸ்தலமும் நேராய் நிமிர்ந்து நிற்கும் நாற்பத்தெட்டு பலகைகளால் சுற்றிலும் மறைக்கப்பட்டிருந்தன. அதன் வடபுறத்தில் இருபது பலகைகளும், தென்புறத்தில் இருபது பலகைகளும், அதன் மேற்குப் புறத்தில் ஆறு பலகைகளும், அதன் இருபக்கத்திலுமிருந்த மூலைகளில் இரண்டு பலகைகளும் காணப்பட்டன. ஒவ்வொரு பலகையின் கீழும் இரண்டு கழுந்துகளும் இரண்டு வெள்ளிப் பாதங்களும் காணப்பட்டன. பலகைகள், மூலைகளில் இரண்டிரண்டாக மேலேயும் கீழேயும் வளையத்தினால் இணைக்கப்பட்டு, ஒவ்வொரு பக்கத்திலும் ஐந்தைந்து தாழ்ப்பாள்களினால் இணைக்கப்பட்டிருந்தன (யாத். 26 : 15 - 27).

**பலகைகள்:**

ஒவ்வொரு பலகையும் 10 முழ நீளமும், 1½ முழ (3 ஜாண்) அகலமுமாய் இருந்தது. அவைகள் சீத்திம் மரத்தினால் உண்டாக்கப்பட்டு, பொன் தகட்டினால் மூடப்பட்டிருந்தன (யாத். 26 : 15, 16, 29).

நாம் ஏற்கனவே கண்டது போல, சீத்திம் மரமானது மனுஷ சுபாவத்தை வெளிப்படுத்துகிறது. காட்டு மரங்களைப் போலிருந்த

நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, அவருடைய நித்திய வாசஸ்தலத்தின் ஒரு பகுதியாகும்படி கொண்டுவரப்பட்டிருக் கிறோம். தேவன் நம்மைக் கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொண்ட படியினாலும், கிறிஸ்து நம்மை நேசித்து நமக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தபடியினாலும் இது சாத்தியமாயிற்று. "நீங்கள் மலை யின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 1 : 8) என எழுதப்பட்டுள்ளது,

கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் நாம் தேவ னுக்குச் சமீபமாய்க் கொண்டுவரப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் அவருக்குள் புதிய சிருஷ்டிகளாக்கப்பட்டிருக் கிறோம். சீத்திம் மரமானது பொன்னினால் மூடப்படுவது, நம்மில் அன்புகூர்ந்து நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவகுமாரனுடைய விசுவாசத்தினாலே (Eng.) நாம் பிழைத்திருப் பதைக் காண்பிக்கிறது (கலா. 2 : 20). இந்தப் பலகைகள் 10 முழ உயரமுள்ளவையாயிருப்பது, முன்பு வார்த்தையாயிருந்து, பின்பு மாம்சமாகி, 'பத்து' என்னும் இலக்கத்தால் குறிப்பிடப்படும் நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக அல்லது முடிவாக (மத். 5 : 17 ; ரோமர் 10 : 4) இவ்வுலகில் வெளிப்பட்ட கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவாகிய பூரண அளவைக் காட்டு கிறது. பலகைகள் 3 ஜாண் அகலமுள்ளவையாயிருந்தது, ஒரு மனுஷனின் மூன்று அம்சங்களாகிய ஆவி, ஆத்துமா, சரீரம் இவற்றைக் குறிக்கிறது. இவை முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களுக்காக ஜெபம் பண்ணினபோது, "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோவான் 17 : 19) என்றார். ஆகவே, நிமிர்ந்து நிற்கும் பலகைகள், சபையிலுள்ள ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண வளர்ச்சியைப் பெற்றுக்கொண்டு, அவருடைய இரகசிய

வருகையில் தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் இவற்றில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக் கப்படாதவர்களாகவும் நிறுத்தப்படுவதற்காக, முற்றிலும் பரிசுத்த மாக்கப்பட்ட ஜீவியத்திற்காகவும் சுவிசேஷத்தின் சத்தியத்திற் காகவும் தைரியமாகப் போராட வேண்டுமென்பதை வெளிப் படுத்துகிறது. நாம் சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல் ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும் (கொலோ. 1 : 22). ஒவ்வொரு பலகையின் கீழும் இருக்கும் இரண்டு கழுந்துகளும் இரண்டு வெள்ளிப் பாதங்களின் மேல் நிற்பது இதை வெளிப் படுத்துகிறது.

**தாழ்ப்பாள்கள்:**

வாசஸ்தலத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் பலகைகளை ஒன்றாய்ச் சேர்த்து இசைவாய் இணைக்கும்படியாக ஐந்தைந்து தாழ்ப்பாள்கள் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் நான்கு தாழ்ப் பாள்கள் இப்பலகைகளிலுள்ள வளையங்களிலும், நடுத்தாழ்ப்பாள் ஒருமுனை தொடங்கி மறுமுனை மட்டும் பலகைகளின் மையத் திலும் உருவப் பாய்ச்சப்பட்டு, இதனால் பலகைகளும் தாழ்ப் பாள்களும் இசைவாய் இணைக்கப்பட்டிருந்தன.

இந்த ஐந்து தாழ்ப்பாள்களும் பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடை வதற்காகவும், தேவனானவர் சபையிலே நியமித்திருக்கிற அப் போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் என்னும் ஐந்து விதமான உத்தியோகங்களைக் காண்பிக்கின்றன (எபே. 4 : 12, 13). அதன் நடுத்தாழ்ப்பாள் பிரதானமாக ஒப்புரவாக்கு தலின் ஊழியத்தை ஸ்தாபித்த கிறிஸ்துவையும், பின்பு ஒப்புர வாக்குதலின் ஊழியம் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டவர் களாய் அவரோடுகூட உடன் வேலையாட்களாய்த் திகழ்கிற

அப்போஸ்தலரையும் குறிக்கிறது (II கொரி. 5 : 18 - 20). எனவே மற்ற நான்கு தாழ்ப்பாள்கள் எபேசியர் 4 : 13 - இல் குறிப்பிடப் பட்டுள்ள உத்தியோகங்களில் அப்போஸ்தலரைத் தவிர மீதியுள்ள நான்கு உத்தியோகங்களைக் குறிக்கின்றன. இந்த ஐந்து விதமான உத்தியோகங்களின் மூலமாகச் சபையானது தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக் குத்தக்க பூரண புருஷனாய் வளருகிறது (எபே. 4 : 11 - 13).

**வளையங்கள்:**

பலகைகளும் தாழ்ப்பாள்களும் வாசஸ்தலத்தின் மூன்று பக்கங்களிலும் காணப்படுவதோடல்லாமல், அது இசைவாய் இணைக்கப்பட்ட ஒரே வாசஸ்தலமாய் மாறும்படியாக அவை, மேலும் கீழும் வளையங்களினால் இணைக்கப்பட்டிருந்தன. இந்த வளையங்கள் சமாதானம், அன்பு இவைகளின் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுதலைக் குறிக்கிறது. "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள் வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (எபே. 4 : 3) என்றும், "பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்" (கொலோ. 3 : 14, 15) என்றும் கூறப்பட்டிருக்கிறது. இப்பெரிதான ஒப்புரவாக்குதலின் ஊழியம் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் மூலமாகப் பரிசுத்த ஆவியானவரால் நடப்பிக்கப்படுகிறது. "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே. 2 : 21, 22) என எழுதப்பட்டுள்ளது. எனவே இவ்வளை யங்கள், சுவிசேஷத்திற்கும், ஆவியினால் சபையை ஆளுகை செய்யும்படி தேவன் சபையிலே நியமித்திருக்கும் ஊழியங் களுக்கும் இணங்கிக் கீழ்ப்பட்டிருப்பதைக் குறிக்கின்றன.

அதிகாரம் 9

# மூடுதிரைகள்

**ம**கா பரிசுத்த ஸ்தலமும் பரிசுத்த ஸ்தலமும் சேர்ந்து ஒரே வாசஸ்தலமாகும்படியாக அவை கீழ்க்கண்டவாறு மூடுதிரைகளால் மூடப்பட்டிருந்தன: (i) திரித்த மெல்லிய பஞ்சு நூல், இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல் ஆகிய நான்குவித நூல் களினால் செய்யப்பட்ட 'வாசஸ்தலம்' என்னும் மூடுதிரை; (ii) 'வாசஸ்தலம்' என்னும் மூடுதிரையின் மீது கூடாரமாய்ப் போடப்படும்படி வெள்ளாட்டு மயிரினால் செய்யப்பட்ட மூடுதிரை; (iii) சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல் மூடி; (iv) தகசுத்தோல் மூடி.

**1. நான்கு வித நூல்களினால் செய்யப்பட்ட வாசஸ்தலம் என்னும் மூடுதிரை:**

"மேலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலினாலும் இளநீலநூலி னாலும் இரத்தாம்பரநூலினாலும் சிவப்புநூலினாலும் நெய்யப் பட்ட பத்து மூடுதிரைகளால் வாசஸ்தலத்தை உண்டுபண்ணு வாயாக; அவைகளில் விசித்திரவேலையாய்க் கேருபீன்களைச் செய்யக்கடவாய். ஒவ்வொரு மூடுதிரையும் இருபத்தெட்டு முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருப்பதாக; மூடுதிரைகளெல்லாம் ஒரே அளவாயிருக்கவேண்டும். ஐந்து மூடுதிரைகள் ஒன்றோ டொன்று இணைக்கப்பட்டிருக்கவேண்டும்; மற்ற ஐந்து மூடு

திரைகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவேண்டும். இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் கடை ஓரத்தில் இளநீல நூலால் காதுகளை உண்டுபண்ணு; இணைக்கப்பட்ட மற்ற மூடு திரையின் கடைஓரத்திலும் அப்படியே செய்வாயாக. காதுகள் ஒன்றோடொன்று இணையும்படி ஒரு மூடுதிரையில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணுவாயாக. ஐம்பது பொன் கொக்கிகளையும் பண்ணி, மூடுதிரைகளை ஒன்றோடொன்று அந்தக் கொக்கிகளால் இணைத்துவிடுவாயாக. அப்பொழுது அது ஒரே வாசஸ்தலமாகும்" (யாத். 26 : 1 - 6).

திரித்த மெல்லிய பஞ்சு நூலினாலும் இளநீல நூலினாலும் இரத்தாம்பர நூலினாலும் சிவப்பு நூலினாலும் உண்டாக்கப்பட்ட இந்த மகிமையான மூடுதிரையானது 'வாசஸ்தலம்' என அழைக்கப்பட்டது. இது, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் வாசம்பண்ணுவதைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்த வான்களுக்கு வெளிப்படுத்தப்படாமலிருந்ததும், இக்காலத்தில் இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத் தப்பட்டிருக்கிறதுமான 'இரகசியம்' என்று அப். பவுல் இதை விவரிக்கிறார். "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறை களுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவ வசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, ... ஊழியக் காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத் திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோ. 1 : 25 - 27). பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஆசரிப்புக் கூடாரம் உண்டாக்கப் பட்டதின் மூலம் இச்சத்தியம் மாதிரியாகவும் நிழலாட்டமாகவும் வெளிப்படுத்தப்பட்டது.

'வார்த்தை'யாகிய கிறிஸ்து, பழைய ஏற்பாட்டில் பத்து என்னும் இலக்கத்தால் குறிப்பிடப்படும் 'நியாயப்பிரமாணமாக' வெளிப்பட்டார். எனினும், கற்பலகைகளில் எழுதப்பட்ட இந்தப் பிரமாணம் புதிய ஏற்பாட்டில் அவருடைய ஆவியினால் நமது இருதயங்களாகிய சதையான பலகைகளில் எழுதப்படும் அன்பின் வார்த்தையாக மாற்றப்படுகிறது. "ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்க ளென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவ னுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருத யங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது" என அப். பவுல் எழுதுகிறார் (II கொரி. 3 : 3). மேலும் கிறிஸ்து இந்த நியாயப்பிரமாணத்தை இரு 'அன்பின் கற்பனைகளாக' வகைப் படுத்தியிருக்கிறார். அவை, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப் பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" (மத். 22 : 37 - 40). ஐந்தைந்தாக ஒன்றோடொன்று இணைக்கப் பட்டிருந்த பத்து மூடுதிரைகள் வெளிப்படுத்தும் சத்தியம் இதுவே.

மேலும் இந்த மூடுதிரைகள் இளநீல நூலினால் உண்டாக் கப்பட்ட ஐம்பது காதுகளாலும், ஐம்பது பொன் கொக்கிகளாலும் இணைக்கப்பட்டிருந்தன. 'ஐம்பது' என்பது பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நம்முடைய இருதயத்தில் ஊற்றப்படும் 'பெந்தெ கொஸ்தே' அனுபவத்தைக் காட்டுகிறது: "நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப் படுத்தாது" (ரோமர் 5 : 5). இந்த பெந்தெகொஸ்தே அனுபவத்தின் மூலமாகவே பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணம் அன்பின்

பிரமாணமாகவும் ஆவியின் பிரமாணமாகவும் மாற்றப்பட்டது. மேலும், இந்த அபிஷேகத்தின் வாயிலாக நாம் தேவனை நேசிக்கவும், நம்மை நேசிப்பது போலப் பிறரை நேசிக்கவும் கூடிய இருதயத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். இந்த அபிஷேக மானது, நம் இருதயத்தில் வைக்கப்பட்டுள்ள தேவவசனத்தின் மூலமாக அல்லது பிரமாணத்தின் மூலமாக, நாம் மகிமையின் மேல் மகிமையடைந்து கிறிஸ்துவின் சாயலுக்குப் பங்குள்ளவர் களாகி மறுரூபமாக்கப்படும் வரை நம்மில் தொடர்ந்து கிரியை செய்கிறது. "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவி யாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (II கொரி. 3 : 18).

இந்த மூடுதிரைகள் இளநீல நூல், இரத்தாம்பர நூல், திரித்த மெல்லிய பஞ்சு நூல், சிவப்பு நூல் ஆகிய நான்கு வித்தியாசமான நூல்களினால் உண்டாக்கப்பட்டிருப்பது, கிறிஸ்து நம்முடைய ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாய் விளங்குவதைக் குறிக்கிறது (I கொரி. 1 : 31).

ஒவ்வொரு மூடுதிரையிலும் கேருபீன்கள் விசித்திர வேலை யாய் நெய்யப்பட்டிருந்தன. இக்கேருபீன்கள் கிறிஸ்துவுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிற அப்போஸ்தலரையும், அவர்களுடைய உபதேசத்தையும் குறிக்கின்றன. இதையே அப். பவுல், "நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்" (I கொரி. 3 : 9) என்றும், "தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன்வேலையாட்களாகிய நாங்கள் உங்க ளுக்குப் புத்திசொல்லுகிறோம்" (II கொரி. 6 : 1) என்றும், "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும் படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்" (கொலோ. 1 : 28) என்றும் எழுதுகிறார்.

**2. 'வாசஸ்தலம்' என்ற மூடுதிரையின் மீது கூடாரமாகப் போடப் படும்படி வெள்ளாட்டு மயிரினால் செய்யப்பட்ட மூடுதிரை:**

"வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும்படி ஆட்டு மயிரால் பதினொரு மூடுதிரைகளை உண்டுபண்ணுவாயாக. ஒவ்வொரு மூடுதிரை முப்பது முழ நீளமும் நாலு முழ அகலமு மாய் இருக்க வேண்டும்; பதினொரு மூடுதிரைகளும் ஒரே அளவா யிருக்கவேண்டும். ஐந்து மூடுதிரைகளை ஒன்றாகவும், ஆறு மூடுதிரைகளை ஒன்றாகவும் இணைக்க வேண்டும்; ஆறாம் மூடுதிரையைக் கூடாரத்தின் முகப்பிற்கு முன்னே மடித்துப் போடுவாயாக" (யாத். 26 : 7 - 9).

இந்த மூடுதிரைக்குக் 'கூடாரம்' என்று பெயர். திரித்த மெல்லிய பஞ்சு நூல், இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல் ஆகிய இவைகளினால் செய்யப்பட்ட 'வாசஸ்தலம்' என அழைக்கப்படும் மகிமையான உள்ளான திரைக்கு இது ஒரு மூடுதிரையாக அமைக்கப்பட்டிருந்தது. மேலே கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு மூடுதிரையும் முப்பது முழ நீளமானதாயிருந்தது. பரிசுத்த ஸ்தலத்திலும் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் ஊழியஞ்செய்ய ஏற்படுத்தப்பட்ட ஆசாரியர், ஆசரிப்புக் கூடாரத்தையும் அதின் பணிமுட்டுகளையும் சுமக்கிற லேவியர் ஆகியோர் ஊழியஞ் செய்யத் துவங்கும் வயது 'முப்பது' ஆகும். "ஆசரிப்புக்கூடாரத் திலே பணிவிடை வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகை ஏற்றுவாயாக" (எண். 4 : 22, 23). இந்த ஆசாரியரும் லேவியரும், தங்களுக்குரிய யாவற்றையும் விட்டு, தங்கள் ஜீவனையும் சுவிசேஷத்தினிமித்தம் பலியாக்குகிற வர்களும், பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களுமான தேவ ஊழியர் களுக்கு நிழலாட்டமானவர்கள். இப்படிப்பட்ட தேவ ஊழியர் களால் மட்டுமே கிறிஸ்துவுடன் சேர்ந்து ஒரு மகிமையுள்ள சபையை அவருடைய இரகசிய வருகைக்காக ஆயத்தப்படுத்த

இயலும். ஆதலால், மகிமையான உள்ளான திரைக்கு மூடுதிரையாக அமைந்திருக்கும் முப்பது முழ நீளமுள்ள இம்மூடுதிரைகள், சபையின் மகிமையான, உள்ளான அனுபவங்களைப் பாதுகாக்கத் தேவையான தியாகமுள்ளதும் தன்னலமற்றதுமான ஜீவியத்தையும் ஊழியத்தையும் குறிக்கின்றன.

இந்த மூடுதிரை வெள்ளாட்டுத் தோல் ஏதும் இல்லாத வெள்ளாட்டு மயிரினாலானது என்பது கவனிக்கப்படத்தக்கது. தோலானது புறம்பான அலங்காரம் அல்லது தோற்றம், மற்றும் ஜாதி, நிற வேறுபாடுகளையும் குறிப்பதால், தோல் இல்லாதிருப்பது, பூமிக்குரிய எவ்வித வித்தியாசங்களையும் பாராமல், ஒருவரையும் மாம்சத்தின்படி அறியாதிருக்கிற (II கொரி. 5 : 16), மெய்யான தேவ ஊழியரின் பிரதிஷ்டையின் ஜீவியத்தையும் ஊழியத்தையும் குறிக்கிறது. யூதராயினும் புறஜாதியாராயினும், அடிமைகளாயினும் சுயாதீனராயினும் - சபையிலுள்ள எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்களாயிருப்பதால் (I கொரி. 12 : 13), இந்த ஆழ்ந்த ஆவிக்குரிய சத்தியம் மெய்யான தேவ ஊழியரால் நடைமுறையில் நிரூபிக்கப்பட வேண்டும்.

பத்து மூடுதிரைகளைக் கொண்ட உள்ளான வாசஸ்தலத்தைப் போலல்லாது, இந்தக் கூடாரம், பதினொரு மூடுதிரைகளைக் கொண்டது. கூடுதலாக இருக்கும் மூடுதிரை வாசஸ்தலத்தின் முன்புறத்தில் இரண்டாய் மடித்துப்போடப்பட்டது. மூடுதிரையின் அகலம் 4 முழமாயிருப்பதால், அது இரண்டாய் மடித்துப் போடப்படும்போது 2 முழ அகலமுள்ளதாய்த் தொங்கிக் கொண்டிருக்கும். இங்கே 'இரண்டு' என்னும் இலக்கம் 'சாட்சியைக்' குறிக்கிறது. வாசஸ்தலத்தின் முன்புறத்தில் இரண்டாய் மடித்துப் போடப்பட்ட மூடுதிரையானது, முன்னணியில் நிற்பதற்காக அழைக்கப்பட்ட மெய்யான தேவ ஊழியர்கள் தங்கள் ஜீவியம், ஊழியம் ஆகிய இரண்டிலும் சாட்சிகளாய் இருக்க

வேண்டுமென்பதைக் குறிக்கிறது. அப். பவுல், II கொரிந்தியர் 6 : 3 - இல், "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்" என்று கூறுகிறார். உண்மையான தியாக ஜீவியத்தின் மூலமாகவும் பிரதிஷ்டையின் ஊழியத்தின் மூலமாகவுமே அது சாத்தியமாகும்.

'வாசஸ்தலம்' என்றழைக்கப்பட்ட உள்ளான மூடுதிரைகள் பொன்னினால் செய்யப்பட்ட கொக்கிகளால் இணைக்கப்பட்டிருந்தன. ஆனால், 'கூடாரம்' என்றழைக்கப்பட்ட இம்மூடு திரைகளோ, வெண்கலக் கொக்கிகளால் இணைக்கப்பட்டிருந்தன. 'வெண்கலம்' கிருபையைக் காட்டுகிறது. "ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" (அப். 20 : 24) என்று அப். பவுல் சொல்லுகிறபடி, தேவ ஊழியர் தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்திற்குச் சாட்சிகளாயிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அன்றியும் அவர் தன்க்கு அளிக்கப்பட்ட கிருபையைக் குறித்து, "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (எபே. 3 : 8, 9) என்று கூறுகிறார்.

முன் கூறப்பட்ட விளக்கத்தின்படியே, ஐம்பது காதுகளும் ஐம்பது கொக்கிகளும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் தேவ அன்பு நமது இருதயங்களில் ஊற்றப்படும் பெந்தெகொஸ்தே அனுபவத்தைக் காட்டுகிறது. "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" (II கொரி. 5 : 14) என்று

அப். பவுல் சொல்லுகிறபடி, சபைக்காகப் பிரயாசப்பட்டு உழைக்கும் மெய்யான தேவ ஊழியர், கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கி ஏவப்படுகிறவர்களாவர்.

**3. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல் மூடி:**

"சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலினால் கூடாரத்திற்கு ஒரு மூடியையும் ... உண்டுபண்ணுவாயாக" (யாத். 26 : 14). இந்த சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல் மூடி, வெள்ளாட்டு ரோமத்தினால் செய்யப்பட்டிருந்த மூடுதிரையின் மேல் போடப்பட்டது. இது சிவப்புத் தீர்ந்த தோல் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால், இது இயற்கை நிறம் கொண்டதாய் இராமல், சிவப்பு நிறமாக்கப் பட்டிருந்தது என்பது வெளிப்படை. "மேலும், விருத்தசேதன மில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும்பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாயி ருக்கும்படிக்கும் ... அந்த அடையாளத்தைப் பெற்றான்" (ரோமர் 4 : 11, 12) என எழுதப்பட்டிருக்கிறபடி, இது விசுவாசத்தின் மூல மாய் நாம் நீதிமான்களென்று கணக்கிடப்படுவதைக் காண்பிக் கிறது. இது நம்முடைய நீதியல்ல, தேவனுடைய நீதியே. நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத வராயிருந்த கிறிஸ்து, நமக்காகப் பாவநிவாரண பலியாக்கப்பட்டு, அடிக்கப்பட்டும் வாதிக்கப்பட்டும் சிறுமைப்படுத்தப்பட்டும் காயப்பட்டும் நொறுக்கப்பட்டும் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டும் நமக்காகச் சிலுவையைச் சகித்தார். இந்த அறிவு, நம்மைக் குறித்து நாம் மேன்மைபாராட்டுவதற்கு ஒரு முடிவுண்டாக்குவதுடன், சுயநலமற்ற, தியாகமுள்ள ஜீவியத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும் நமக்கு உதவி செய்கிறது. இந்தச் சத்தியத்தை வெளிப்படுத்தும் படியாகவே வெள்ளாட்டு ரோமத்தினால் செய்யப்பட்ட மூடுதிரை யின் மேல் சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல் மூடி போடப் பட்டது.

## 4. தகசுத்தோல் மூடி:

'தகசு' (badger - Heb. 'Tachash') என்பது பலஸ்தீனாவில் காணப்படும் ஒரு வகை பிராணியாகும். ஆனால் கூடாரத்திற்கு மூடியாகப் பயன்படுத்தப்பட்ட தோல், பெரும்பாலும் சிவந்த சமுத்திரத்தில் அதிகமாகக் காணப்பட்ட கடற்பசு அல்லது ஒருவகை கடற்பிராணியின் தோலாக இருக்கக் கூடும். இங்கு கொடுக்கப்பட்டுள்ள எபிரெய பதம், கடற்பசு, கடல் நாய், கடற் பன்றி போன்ற, ஏறக்குறைய ஒன்றோடொன்று ஒத்திருக்கும் பாலூட்டி விலங்கினத்தைச் சேர்ந்தவைகளான கடற்பிராணிகள் அனைத்தையும் குறிக்கும் பொதுவான ஒரு பெயராயிருக்கக் கூடும். தூரத்திலிருந்து கண்ணோக்கும்போது இம்மூடுதிரை சரியாக ஆகாயத்தின் நிறம் போலவே காட்சியளித்தது என்று ஜோசஃபஸ் என்ற சரித்திர ஆசிரியர் கூறுகிறார்.

தகசுத்தோல் மூடியானது, சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல் மூடியின் மேல் போடப்பட்டது. இது வாசஸ்தலத்தின் வெளி மூடுதிரையாகும். பரிசுத்த ஆவியைப் பெற்ற தேவ பிள்ளைகளின் உலக அழகும் மேன்மையுமில்லாத புறம்பான தோற்றத்தையும் ஜீவியத்தையும் இது குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு பரலோகத்தில் தமக்கிருந்த எல்லா மகிமையையும் விட்டு, தம்மைத்தாமே வெறுமையாக்கி, இவ்வுலகத்திற்கு மனுஷனாக வந்தபோது அவர் இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் இருந்தார். அவர் இப்பூமியில் செய்த ஊழியத்தின் முடிவில், கெத்செமனே துவங்கி கொல்கொதா வரை மனிதவர்க்கத்திற்காகப் பாடுபட்டார். மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும் அந்தக்கேடு அடைந்திருந்தது. அவரைக் குறித்து, "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது" (ஏசாயா 53 : 2)

என நாம் வாசிக்கிறோம். கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுகிற வர்கள் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறார்கள்; உலக மும் அவர்களுக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் புறம்பாகத் தங்களை அலங்கரிப்பதில்லை; இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கிறதுமில்லை; மனுஷரால் வரும் கனத்தையும் புகழ்ச்சியையும் தேடுகிறதுமில்லை. கிறிஸ்துவின் மணவாட்டியாகக் காணப்பட வேண்டியவர்கள் சூலமித்தியுடன் சேர்ந்து, "எருசலேமின் குமாரத்திகளே! கேதாரின் கூடாரங்களைப் போலவும், சாலொமோனின் திரைகளைப்போலவும் நான் கறுப்பா யிருந்தாலும், அழகாயிருக்கிறேன்" (உன். 1 : 5) என்று கூறக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

ஒரு தனிநபரின் பூரணமாகுதலைப் பொறுத்த வரையில் இம்மூடுதிரைகள், அவனது ஆவி, ஆத்துமா, சரீரம் இவற்றின் பரிசுத்தமாகுதலை வெளிப்படுத்துகின்றன. இந்தப் பூரணமே நாம் நம்மில் உள்ளான மகிமையைப் பாதுகாத்துக்கொள்ளவும், கர்த்த ராகிய இயேசுகிறிஸ்துவின் வருகைக்காகக் குற்றமற்றவர்களாய்ப் பாதுகாக்கப்படவும் தேவையாயிருக்கிறது (I தெச. 5 : 23). "சித்திரத் தையலாடையை உனக்கு உடுத்தி, சாயந்தீர்ந்த (Eng. - தகசுத்தோல்) பாதரட்சைகளை உனக்குத் தரித்து, கட்ட மெல்லிய புடவை யையும், மூடிக்கொள்ளப் பட்டுச் சால்வையையும் உனக்குக் கொடுத்து" என்று எசேக்கியேல் 16 : 10 - இல் நாம் வாசிக்கிறோம். வாசஸ்தலத்தின் தகசுத்தோல் மூடியானது, எல்லா மூடிகளுக்கும் மேலாக இருந்து, அதற்குக் கீழிருக்கும் எல்லா மூடிகளையும் பாதுகாத்தது. II கொரிந்தியர் 4 : 16 - இல் அப். பவுல், "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" என்று கூறுகிறபடி, இந்த 'மேல் மூடுதிரை' பரிசுத்தமாக்கப்பட்ட தேவபிள்ளைகளின் சரீரத்தை அல்லது புறம்பான மனுஷனைக் குறிக்கிறது. கர்த்த ராகிய இயேசு வரும்போது, அவர், "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப் படுத்துவார்" (பிலி. 3 : 21).

**கூடாரத்தின் பலகைகளுக்கும் மூடுதிரைகளுக்கும் இடையே உள்ள சம்பந்தம்:**

20 முழ நீளமுள்ளதாயிருந்த முதலாம் கூடாரம் அல்லது பரிசுத்த ஸ்தலம் இப்போது பூமியிலிருக்கும் புதிய ஏற்பாட்டுச் சபையைக் குறிக்கிறது. 10 முழ நீளமும் 10 முழ அகலமு முள்ளதாயிருந்த இரண்டாங்கூடாரம் அல்லது மகா பரிசுத்த ஸ்தலம், பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் பூரணமாக்கப் பட்ட சபையை - புதிய எருசலேமைக் குறிக்கிறது.

கூடாரத்தின் நிமிர்ந்து நிற்கும் நாற்பத்தெட்டு பலகை களும், 10 முழ உயரமும் 1½ முழ அகலமும் உள்ளவையாயி ருந்தன என்று எழுதப்பட்டிருக்கிறது. வட புறத்தில் இருபது பலகைகளும் தென் புறத்தில் இருபது பலகைகளும் மேற்கே எட்டுப் பலகைகளும் நிமிர்ந்து நின்றன. ஆகவே, பரிசுத்த ஸ்தலமும் மகா பரிசுத்த ஸ்தலமும் சேர்ந்து 30 முழ (20 x 1½ = 30) நீளமுள்ளதாயிருந்தது. பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் இணைத்து ஒரே வாசஸ்தலமாக்கும்படி அவைகள் மீது போடப்பட்டிருந்த மகிமை நிறைந்த உள்ளான மூடுதிரை, ஒவ்வொன்றும் 4 முழ அகலம் கொண்டதான பத்து மூடுதிரை களை உடையதாயிருந்தது. ஆகையால் இந்த மூடுதிரை 10 x 4 = 40 முழ நீளத்திற்கு கிழக்கு மேற்காக விரிக்கப்பட்டிருந்தது. மேற்கே நிமிர்ந்து நின்ற பலகைகள் 10 முழ உயரமாய் இருக்க, இந்த மூடுதிரையானது அந்தப் பலகைகளின் மீது போடப்படும்போது அது பூமியைத் தொடாமல், தரைக்கு மேல் தொங்கினபடியால் இதை விளக்கும்படியாக, அந்தப் பலகைகளின் தடிப்பு எவ்வள வாய் இருக்கும் என்பதை நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். வாசஸ்தலத்தின் மேற்புறத்திற்கு ஆறுபலகைகளும் (யாத். 26 : 22), அதன் இருபக்கங்களிலுமுள்ள இரு மூலைகளுக்கு இரண்டு பலகைகளுமாக எட்டுப் பலகைகள் மேற்புறத்தில் இருந்தன (வச. 23, 25). ஒவ்வொரு பலகையும் 1½ முழம் அகலமுடைய தாயிருந்தது. ஆகவே அந்த எட்டுப் பலகைகளின் நீளம்

12 முழமாகும். ஒவ்வொரு பலகையின் உயரமும் 10 முழம் என்று கூறப்பட்டிருக்கிறது. மகா பரிசுத்த ஸ்தலம் சமசதுரமாயிருப்பதால், அதன் நீளமும் அகலமுங்கூட 10 முழமாயிருக்க வேண்டும். ஆகவே, இரு பக்கங்களிலும் உள்ள அந்தப் பலகைகளின் தடிப்பு 12 - 10 = 2 முழம் எனவும், ஒவ்வொரு பலகையின் தடிப்பும் ஒரு முழம் எனவும் நாம் முடிவெடுக்கலாம்.

எனவே வாசஸ்தலத்தின் உள் அளவு 30 X 10 X 10 முழமாகவும், வெளி அளவு 31 X 12 X 10 முழமாகவும் இருக்கிறது.

'கூடாரம்' என்று அழைக்கப்பட்ட ஆட்டுமயிரினால் செய்யப்பட்ட மூடியானது 4 முழ அகலமான பதினொரு மூடு திரைகளை உடையதாயிருந்தபடியினாலும், அதின் ஆறாவது மூடுதிரை மடித்துப் போடப்பட்டிருந்தபடியாலும், கிழக்கு மேற்காக அது (10 X 4) + (1 X 2) = 42 முழ நீளமுள்ளதாயிருந்தது. ஆறாவது மூடுதிரையானது மடித்துப் போடப்பட்டு (2 முழம்), கூடாரத்தின் முகப்பிற்கு முன்பாகத் தொங்கவிடப்பட்டிருந்தது. இதின் மீதியான 40 முழம், கிழக்கு மேற்காக வாசஸ்தலத்தின்மேல் 31 (30 + 1) முழ நீளத்திற்கு விரிக்கப்பட்டும், மற்ற 9 முழமும் தரை மட்டத்திலிருந்து ஒரு முழ உயரத்திற்கு வாசஸ்தலமாகிய மூடுதிரையின் பின்புறத்தை மறைக்கும்படியாகத் தொங்கவிடப் பட்டுமிருந்தது (யாத். 26 : 12). மேலும் முன்பு கூறப்பட்டபடியே, இம்மூடுதிரைகளின் நீளத்திலே மீதியானது வடக்கு தெற்காக 'வாசஸ்தலமாகிய' மூடுதிரையை இந்தப் புறத்தில் ஒரு முழமும் அந்தப் புறத்தில் ஒரு முழமும் மூடும்படியாக இரண்டு பக்கங்களிலும் தொங்கவிடப்பட்டிருந்தது (வச. 13). இது, கிறிஸ்து தங்களுக்குள் மகிமையின் நம்பிக்கையாக வாசம் செய்யும் அனுபவத்தைப் பெற்றவர்கள், தங்களை மறைத்துக்கொண்டவர் களாக, ஒரு சுயநலமற்ற ஜீவியம் செய்யவேண்டுமென்பதைக் குறிக்கிறது. கிறிஸ்துவை மகிமையின் நம்பிக்கையாகத் தனக் குள்ளே கொண்டிருக்கிற மனிதன் இந்த உலகத்தானல்ல என்பது, கூடாரத்தின் மூடுதிரைகள் தரையைத் தொடாமல் அதற்கு மேலாக நிற்பதின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

கூடாரம் நிலைநிற்பதற்கும் நிமிர்ந்து நிற்பதற்கும் *முளைகளும் கயிறுகளும் வளையங்களும்* உதவியாயிருந்தன.

***முளைகள்:*** பிராகாரத்தின் முளைகள் யாவும் வெண்கலத்தால் செய்யப்பட்டு, நிலத்தில் பாய்ச்சப்பட்டிருந்தன (யாத். 27 : 19). இந்த முளைகள், ஸ்திரமாயும் உறுதியாயும் நிற்கிற விசுவாசத்தைக் காட்டுகின்றன. "பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்" (I தெச. 5 : 8). முளைகள் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன என்பது, இந்த விசுவாசம் கிருபையினால் உண்டாகிறது என்பதைக் காண்பிக்கிறது.

***கயிறுகள்:*** கூடாரத்தின் பலகைகளிலிருந்த வளையங்களின் வழியாய்ச் செலுத்தப்பட்டிருந்த கயிறுகள், அன்பின் கயிறுகளைக் குறிக்கின்றன. "மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன், அவர்கள் கழுத்துகளின்மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப்போல் இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங் கொடுத்தேன்" (ஓசியா 11 : 4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

***வளையங்கள்:*** அசையாமல் நிற்கும் விசுவாசமானது அன்பாகிய கயிறுகளால் இணைக்கப்படும்போது, ஒரு மனுஷன் நம்பிக்கையில் இளைப்பாறுகிறான். எனவே இந்த வளையங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன என நாம் கூறலாம். விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியாயிருக்கிறது (எபி. 11 : 1). "நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" (ரோமர் 5 : 5). "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது" (I கொரி. 13 : 13).

அதிகாரம் 10

# ஆசாரிய ஊழியமும் ஆசாரிய ராஜ்யமும்

இது வரை ஆசரிப்புக் கூடாரத்தைக் குறித்தும் அதின் பணிமுட்டுகளைக் குறித்தும் நாம் கண்டோம். இந்தக் கூடாரத்தில் ஊழியஞ்செய்வதற்குக் கர்த்தர் ஸ்தாபித்த ஊழியத்தைக் குறித்து இங்கு நாம் ஆராய்வோம். அந்த ஊழியமே ஆசாரிய ஊழிய மாகும்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவந்தது முதற்கொண்டு அவர்கள் பலவித கிரியைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். எனினும் ஆரோன் அபிஷேகம்பண்ணப்பட்ட பின்பே ஆசாரியன் என்று அழைக்கப்பட்டான். "பின்பு ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரவாசலில் வரச்செய்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணுவித்து, ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவனை அபிஷேகம்பண்ணி, அவனைப் பரிசுத்தப்படுத்துவாயாக. அவன் குமாரரையும் வரச்செய்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி, அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி, அவர் களையும், அவர்கள் தகப்பனை அபிஷேகம்பண்ணினபடியே, அபிஷேகம்பண்ணுவாயாக; அவர்கள் பெறும் அந்த அபிஷேகம்

தலைமுறைதோறும் நித்திய ஆசாரியத்துவத்துக்கு ஏதுவா யிருக்கும் என்றார். கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் மோசே செய்தான்" (யாத். 40 : 12 - 16). "கர்த்தர் தனக்குக் கட்டளை யிட்டபடியே, மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணுவித்து, அவனுக்கு உள்ளங்கியைப் போட்டு, இடைக்கச்சையைக் கட்டி, மேலங்கியை உடுத்தி, ஏபோத்தைத் தரித்து, அதின்மேல் ஏபோத் தின் விசித்திரமான கச்சையைக் கட்டி, அவனுக்கு மார்ப்பதக் கத்தை அணிந்து, மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவை களையும் வைத்து, அவன் தலையிலே பாகையைத் தரித்து, பாகையின்மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டத்தைக் கட்டினான். பின்பு மோசே, அபிஷேக தைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்தி, அதில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தப்படுத்தும்படிக்கு அபிஷேகம்பண்ணி, அபிஷேக தைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம்பண்ணினான்" (லேவி. 8 : 6 - 12).

மோசே ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, அபிஷேக தைலத்தை எடுத்துக் கூடாரத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் அபிஷேகம் பண்ணினான்; பின்பு ஆரோனையும் அவன் குமாரரையும் அபிஷேகம் பண்ணினான். அபிஷேகம்பண்ணப்பட்ட ஆரோ னும் அவன் குமாரரும் இவ்விதம் அபிஷேகம்பண்ணப்பட்ட கூடாரத்தில் ஊழியஞ்செய்தார்கள். இது புதிய ஏற்பாட்டிலும் அபிஷேகம்பண்ணப்பட்ட ஊழியர்களே அபிஷேகம்பண்ணப் பட்ட சபைக்கு ஊழியஞ்செய்யும்படி நியமிக்கப்பட வேண்டும் என்ற சத்தியத்தை வெளிப்படுத்துகிறது.

அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியர்களாலேயே இஸ்ரவேல் ஜனங்கள் நடத்தப்பட்டார்கள். கர்த்தருடைய பிரமாணங்கள், ஜனங்கள் நடக்க வேண்டிய வழிகள் ஆகியவை ஆசாரியன் மூலமாய் ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டன. வனாந்தரத்தில் துவங்கின இந்த ஆசாரிய ராஜ்யம், அது ஸ்தாபிக்கப்பட்ட ஒழுங்கின்படியே நியாயாதிபதிகளின் காலம் வரையும் நீடித்தது. கர்த்தர் கூடாரத்தில் தாம் வாசம்பண்ண வருவதற்கு முன்பு இதைக் குறித்தே மோசேயோடு பின்வருமாறு பேசினார்: "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு *ஆசாரிய ராஜ்யமும்* பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்" (யாத். 19 : 5, 6). பழைய ஏற்பாட்டின் காலத்தில் கர்த்தர் இவ்விதமாக ஒரு ஆசாரிய ராஜ்யத்தை ஸ்தாபித்தபோது, பிரதான ஆசாரியனே இதற்குத் தலைவனாயிருந்தான். அவனைக் கொண்டு கர்த்தர் ஜனங்களை நடத்தினார். இந்த ஆசாரிய ராஜ்யத்தில் பல பிரிவினர் இருந்தனர்.

***1. பன்னிரண்டு கோத்திரத்தார்:*** பன்னிரு கோத்திரங்களாக இருந்த விருத்தசேதனம் பெற்ற இஸ்ரவேலர் தங்கள் கோத்திரத்தின் கொடிகளோடு ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளயமிறங்கியிருந்தார்கள் (எண். 2 : 2).

***2. லேவியர்:*** லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தின் மேற்கு, தெற்கு, வடக்குத் திசைகளில் தங்கள் கூடாரங்களைப் போட்டுப் பாளயமிறங்கியிருந்தார்கள் (எண். 3 : 23, 29, 35).

***3. ஆசாரியர்கள்:*** மோசேயும், ஆரோனும் அவனுடைய குமாரரும் தங்கள் கூடாரங்களைக் கிழக்குத் திசையில் போட்டு, ஆசரிப்புக் கூடாரத்தைக் காவல் செய்தார்கள் (எண். 3 : 38).

இவ்விதம் ஜனங்கள் பலவிதமான கூட்டத்தினராய் இருந்தார்கள். *பிரதான ஆசாரியனே* இவர்களெல்லாருக்கும் தலைவனாயிருந்தான். பழைய ஏற்பாட்டின் இந்த ஆசாரிய ராஜ்யமானது, புதிய ஏற்பாட்டின் ஆசாரியத்துவத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது. அதனாலேயே, "இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது" என்று எபிரெயர் 8 : 5 - இல் நாம் வாசிக்கிறோம்.

## புதிய ஏற்பாட்டின் ஆசாரியத்துவமும் மெல்கிசேதேக்கும்

பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவம் புதிய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்திற்கு நிழலாட்டமாயிருந்தபடியால், பழைய ஏற்பாட்டின் ஆசாரிய ராஜ்யத்தில் எவையெல்லாம் இருந்தனவோ, அவை யாவும் புதிய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தில் இன்னும் நுட்பமாய், மெய்ப் பொருளாய் இருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு தென்னை மரத்தின் நிழலை நோக்கிப் பார்க்கிறவன் அதன் ஓலைகளையும் அதன் காய்களையும் அதன் தோற்றத்தையும் நிழலாட்டமாய்க் கண்டுகொள்ளுகிறான். ஆனால் அவன் உண்மைப் பொருளாகிய அம்மரத்தையே நேராகப் பார்க்கும்போது, அந்த நிழலில் தெளிவாய்க் காணப்படாதவை யாவும் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றன. எத்தனை ஓலைகள், எத்தனை தேங்காய்கள் இருக்கின்றனவென்று நிழலில் கண்டு கொள்ளக் கூடாதிருந்த அவன், பொருளில் அவற்றை நுட்பமாய்க் காண்கிறான். அதுபோலவே நிழலாட்டமாக வெளிப்படுத்தப் பட்டிருந்த ஆசாரிய ராஜ்யத்தில் காணப்பட்ட வகுப்புகளெல்லாம், பொருளாகிய மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தில் மிகவும் நுட்பமாய்க் காணப்பட வேண்டும்.

ஆரோனின் முறைமைக்குட்பட்ட பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தில் ஆசாரிய ராஜ்யத்துக்குத் தலைவனாக ஒரு பிரதான ஆசாரியன் இருந்தது போல, புதிய ஏற்பாட்டின் மெல்கிசேதேக்கின் முறைமைக்குட்பட்ட ஆசாரியத்துவத்துக்கு

ஒரு பிரதான ஆசாரியர் காணப்பட வேண்டும். அவரே நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமா யிருக்கிற கிறிஸ்து இயேசு. அவர் மெல்கிசேதேக்கின் முறைமை யின்படி நித்திய பிரதான ஆசாரியராயிருக்கிறார் (எபி. 3 : 1 ; 6 : 20). இந்த மெல்கிசேதேக்கு யார்?

**மெல்கிசேதேக்கு:**

மெல்கிசேதேக்கைக் குறித்து எபிரெய நிருபக்காரன், "இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ... இவனுடைய முதற்பேராகிய மெல்கி சேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அருத்தமாம். இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்" என்று எழுதுகிறார் (எபி. 7 : 1 - 3). இந்த மெல்கிசேதேக்கைக் குறித்து, அவன் பூமியில் சாலேம் என்ற இடத்தில் அரசாண்ட ஒரு ராஜா என்றும், தேவ குமாரனாகிய கிறிஸ்து இயேசுவுக்கு அடையாளமான ஒரு புருஷன் என்றும், இன்னும் வேறு பல விதங்களிலும் பலரும் கூறுகின்றனர். ஆனால் இவைகளெல்லாம் தவறான போதனை களாகும். ஏனெனில், மெல்கிசேதேக்கு என்பதற்கு 'நீதியின் ராஜா' என்று அர்த்தங்கொடுப்பது போல, சாலேமின் ராஜா என்பதற்குச் 'சமாதானத்தின் ராஜா' என்று அர்த்தமாம் என்று எபிரெய நிருபக்காரன் கூறி, இவர் சாலேம் பட்டணத்தில் அரசாண்ட ஒரு ராஜா அல்ல என்று நிரூபிக்கிறார். இவர் தகப்பனும் தாயும் இல்லாத முதல் மனுஷனாகிய ஆதாமாய் இருக்கக் கூடுமோ என்று சிந்தித்தாலும், ஆதாம் வம்ச வரலாறு உள்ளவனாய் இருப்பதினால், இந்த மெல்கிசேதேக்கு முதல் மனுஷனாகிய ஆதாமாயிருக்க முடியாது. நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமில்லாதவர் என்று சொல்லப்பட்டிருப்பதினால், இவர் ஒரு

தேவ தூதனுமல்ல. ஏனென்றால், தூதர்களுக்கு நாட்களின் துவக்கம் உண்டு. இவைகளினால் இந்த மெல்கிசேதேக்கு மனுஷனு மல்ல, தூதனுமல்ல என்பது முடிவாகிறது. இவர் 'உன்னதமான தேவனுடைய' ஆசாரியன் என்று கூறப்பட்டிருப்பதினால், இவர் பிதாவாகிய தேவனுமல்ல; தேவ குமாரனுக்கு ஒப்பானவர் என்று கூறப்பட்டிருப்பதினால், இவர் தேவகுமாரனும் அல்ல. இந்த மெல்கிசேதேக்கு பிதாவாகிய தேவனுமல்ல; குமாரனாகிய கிறிஸ்துவு மல்ல; மனுஷனுமல்ல; தூதனுமல்ல. அப்படியானால் இவர் யார்? இவர் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமில்லாதவரும் திரித்துவத்தின் மூன்றாமவருமாகிய பரிசுத்த ஆவியானவரே யல்லாமல், வேறொருவருமல்ல. உலகத்தோற்றத்தின்போது இவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் என்று கூறப் பட்டுள்ளது (ஆதி. 1 : 2). இவர் உலகத்தோற்றத்திற்கு முன்னும், உலகத்தோற்றத்திலும் இருந்தவராவார்.

. ஒருமுறை ஆபிரகாம் ஐந்து ராஜாக்களை முறியடித்துத் திரும்புகிறபோது, மெல்கிசேதேக்கு அவனைச் சந்தித்து, அவ னுக்கு அப்பமும் திராட்சரசமும் கொடுத்து, அவனை ஆசீர் வதித்தார் என்று ஆதியாகமம் 14 - ஆம் அதிகாரத்தில் நாம் காண்கிறோம். அச்சந்தர்ப்பத்தில் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம், மெல்கிசேதேக்குக்குத் தசமபாகம் கொடுத்தான். அப்போது லேவி தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால் அவனும் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம் என்று எபிரெய நிருபக்காரன் எழுதுகிறார் (எபி. 7 : 9, 10). அவர் விவாதிப்பது என்ன? ஆரோனுடைய தலைமையின் கீழ் உண்டாக்கப்பட்ட லேவிய ஆசாரியத்துவத்தைப் பார்க்கிலும் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் விசேஷமானது என்பதே! இவ்வாறு பழைய ஏற்பாட்டின் ஆசாரியத்துவம் உண்டாவதற்கு முன்னதாகவே மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவம் தேவனுடைய மனதில் இருந்ததென்றும், அது ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தப்பட்டதென்றும் நாம் காண்கிறோம்.

கர்த்தராகிய இயேசு மனுஷனாய் இந்த உலகத்திற்கு வந்து தம்முடைய முப்பதாவது வயதில் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் வந்தார். பரிசுத்த ஆவியானவராகிய மெல்கிசேதேக்கு அவர்மேல் வந்திருந்தாலும், அபிஷேகத்தினால் மாத்திரமல்ல, பிரதிஷ்டையினாலும், தாம் பட்டபாடுகளினால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டதினாலும், தம்முடைய மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றினாலும், அவர், மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார். எனவேதான், "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசே தேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்" (எபி. 5 : 8 - 10) என்று கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருந்த ஆசாரிய ராஜ்யத்தைப் போல், புதிய ஏற்பாட்டிலும் ஒரு ஆசாரிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பது கர்த்தருடைய மனதிலிருந்த இரகசியமாகும் என்பதை இதன் மூலம் நாம் விளங்கிக்கொள்ளுகிறோம். எனவே, நிழலாட்டமான பழைய ஏற்பாட்டின் ஆசாரிய ராஜ்யத்தில் காணப்பட்டதைப் போல, புதிய ஏற்பாட்டின் மெல்கிசேதேக்கின் ஆசாரிய ராஜ்யத் திலும் அதற்கு ஒத்த வகுப்புகள் இன்னும் நுட்பமாய்க் காணப்பட வேண்டியது அவசியமல்லவா? அவை பின்வருமாறு:

*1. பன்னிரண்டு கோத்திரங்கள்:*

பன்னிரண்டு கோத்திரத்தார் விருத்தசேதனம் பெற்ற யூதர்களாவர். இவர்கள், புதிய ஏற்பாட்டில் தேவனுடைய குடும் பத்தைச் சேர்ந்த இரட்சிக்கப்பட்ட ஜனங்களுக்கு அடையாளமா யிருக்கிறார்கள் (ரோமர் 2 : 28, 29).

*2. லேவியர்:*

லேவியர் இஸ்ரவேலரின் கோத்திரங்களோடு பங்கும் சுதந்தரமும் இல்லாதவர்கள். புதிய ஏற்பாட்டில் இவர்கள்,

தேவனைக் காட்டிலும் அதிகமாகத் தங்கள் இன ஜனத்தாரை நேசியாதவர்களும் (மத். 10 : 37), கர்த்தருக்காகத் தங்களுக் குண்டான எல்லாவற்றையும் தங்கள் இருதயத்தில் (ஆவிக்குரிய பிரகாரம்) வெறுத்து ஜீவிப்பவர்களுமான (அப். 4 : 34, 35), பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற விசுவாசிகளுக்கு அடையாள மாயிருக்கிறார்கள். இவர்கள் பூமியின்மேல் தங்களை அந்நி யரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டுக்கொண்டு, பரம தேசத்தை நாடிச் செல்லுகின்றனர் (எபி. 11 : 13, 14 ; எபே. 2 : 19). இஸ்ரவேலரின் முதற்பேறானவர்களுக்குப் பதிலாக லேவி கோத்தி ரத்தார் தெரிந்துகொள்ளப்பட்டார்கள் (எண். 3 : 12, 13). இந்த லேவியர், புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத் தினால் முதற்பேறானவர்களான சபையாருக்கு நிழலாட்டமா யிருக்கிறார்கள் (ரோமர் 8 : 23 ; எபி. 12 : 23).

### 3. *ஆசாரியர்கள்:*

ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியஞ்செய்யும் படியாக லேவியரிலிருந்து வேறுபிரிக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்ட கூட்டத்தாராவர். மாம்சீக, பூமிக்குரிய கட்டுகளிலி ருந்து முற்றிலுமாகத் தங்களை வேறுபிரித்துக்கொண்டு, ஆசாரிய உத்தியோகம் வகித்து, சபைக்கு ஊழியஞ்செய்யும்படியாக அபிஷேகம்பண்ணப்பட்ட புதிய ஏற்பாட்டு தேவ ஊழியக் காரருக்கு இவர்கள் நிழலாட்டமாயிருக்கின்றனர் (லூக்கா 14 : 26, 33).

### 4. *பிரதான ஆசாரியன்:*

ஆசாரிய ராஜ்யத்தில் பிரதான ஆசாரியனே பிரதான மானவனாய் அல்லது தலைமையானவனாய் இருக்கிறான். இவன் முதலாவதாக, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவுக்கு அடை யாளமாயிருக்கிறான் (எபி. 3 : 1). இரண்டாவதாக, வருஷத்தில் ஒரு நாள் திரைக்குள் அல்லது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவே சிக்கிற பிரதான ஆசாரியன் - பரிசுத்த ஆவியின் அபிஷேகம்

பெற்ற விசுவாசிகளும் தேவனுடைய ஊழியக்காரரும் சேர்ந்து ஒரே சரீரமாக, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக் குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் வளர்ந்து (எபே. 4 : 11), கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் சபைக்கு அடையாளமாயிருக்கிறான்.

தேவனுடைய மனதிலுள்ள பூரண சித்தத்தின் ஒழுங்கின் படி, பழைய ஏற்பாட்டு ஆசாரிய ராஜ்யத்தில் காணப்பட்ட எல்லா வகுப்பினரும் ஆரோனின் கீழ் ஒன்றாயிருந்தது போல, புதிய ஏற்பாட்டிலுங்கூட, இரட்சிக்கப்பட்டவர்கள் யாவரும், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற விசுவாசிகள் யாவரும், பிர திஷ்டையுள்ள தேவ ஊழியர் யாவரும், பிரதான ஆசாரியனின் உத்தியோகம் வகிக்கின்ற மெல்கிசேதேக்கின் முறைமையின்படி யுள்ள ஆசாரியனுக்குள் ஒன்றாக்கப்பட வேண்டும் ஆகையால் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நமக்கு முன்னோடினவராய், நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காகத் திரைக்குள் பிரவேசித் திருக்கிறவரும், நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவை நாம் கவனித்துப் பார்ப்போமாக (எபி. 3 : 1; 6 : 20).

எபிரெயர் 7 : 3 - இல் மெல்கிசேதேக்கைப் பற்றி, "இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்" என்று நாம் வாசிக்கிறோம். கர்த்தராகிய இயேசுதாமே மெல்கிசேதேக்காகிய பரிசுத்த ஆவியினால் அபி ஷேகம் பண்ணப்பட வேண்டியதாயிருந்தது. அவர்மேலிருந்த அபிஷேகத்தினால் அவர் மெல்கிசேதேக்கின் முறைமைக்குள் கொண்டுவரப்பட்டு, பிரதிஷ்டையின் மூலம் தாயும் தகப்பனும் சகோதரரும் இல்லாதவரானார். "என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, ... பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச்

சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" என்று அவர் கூறினார் (மத். 12 : 47 - 50). அவர் புதிய ஏற்பாட்டில் ஸ்தாபிக்கும் ஆசாரிய ராஜ்யம் இந்தக் கருத்தின்படியே அமைக்கப்பட வேண்டியதாயிருந்தது. ஆகையினாலேயே அவர், "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவி யையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்" (லூக்கா 14 : 26) என்று திருவுளம்பற்றி, மெல்கிசே தேக்கின் ஆசாரியத்துவம் எப்படிப்பட்டதென்பதை நமக்குக் காண்பிக்கிறார். மேலும், "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (வச. 33) என்றும் அவர் கூறுகிறார். அதுபோலவே தேவனுடைய அழைப்பிற் கிணங்கித் தங்களுடையதெல்லாவற்றையும் விட்டு, தங்களுடைய மாம்சீக பந்தங்களையும், தங்கள் சொந்த ஜீவனையும் வெறுத்து விட்டவர்களே இப்பூமியில் புதிய ஏற்பாட்டு ஆசாரிய ராஜ்யம் ஸ்தாபிக்கப் பொறுப்பான ஸ்தானம் வகிக்கிற உண்மையுள்ள அப்போஸ்தலராவர். "ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப் பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை" என நாம் வாசிக்கிறோமே! (எபி. 5 : 4).

இது வரை புதிய ஏற்பாட்டின் ஆசாரியக் கூட்டத்திற்கு நிழலாட்டமாய்ப் பழைய ஏற்பாட்டின் ஆசாரிய ராஜ்யத்தில் காணப்பட்ட பல வகுப்புகள் அல்லது பிரிவுகளைக் குறித்து நாம் கண்டோம். புதிய ஏற்பாட்டுச் சபையின் ஆளுகையின் அடிப் படையில் நாம் அவைகளை வேறொரு கோணத்திலும் வகைப்படுத்தலாம். அவை பின்வருமாறு:

### *1. பன்னிரண்டு கோத்திரங்கள்:*

பன்னிரண்டு கோத்திரத்தாரையும், தேவனுடைய வீட்டா ராய் அமையும் அபிஷேகம்பண்ணப்பட்ட விசுவாசிகளாகிய

கூட்டத்தாருக்கு நாம் ஒப்பிடலாம். “ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிரு(க்கிறீர்கள்)” (எபே. 2 : 19). இவர்கள் பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியத்தின் வல்லமைக்குக் கிறிஸ்துவின் சாட்சிகளாயிருக்கிறார்கள்.

**2. *லேவியர்:***

லேவியர் இஸ்ரவேலில் தங்கள் சகோதரருக்குள்ளே பங்கும் சுதந்தரமுமில்லாதவர்களாய் இருந்ததால், இவர்களை நாம் புதிய ஏற்பாட்டில், கர்த்தருடைய சீஷராயிருக்கும்படி தங்களுக் குரிய எல்லாவற்றையும் எழுத்தின்படியே விட்டுவிட்ட மெல்கிசே தேக்கின் முறைமையின்படியான தேவ ஊழியருக்கு ஒப்பிடலாம். “யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்” ; “அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்” (லூக்கா 14 : 26, 33).

**3. *ஆசாரியர்:***

ஆசாரியர்களை, புதிய ஏற்பாட்டில் கர்த்தருக்கென்று தங் களை முற்றிலும் வேறுபிரித்துக்கொண்டவர்களும், அபிஷேகம் பண்ணப்பட்டவர்களும், மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரிய உத்தியோகத்துக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களு மான உத்தரவாதமுள்ள தேவ ஊழியருக்கு நாம் ஒப்பிடலாம். இவர்களுடைய வேலையானது, ஜனங்களைப் பரிசுத்த ஆவி யினால் முற்றிலும் பரிசுத்தமாக்கப்படும் அனுபவத்திற்கு வழி நடத்துதல் ஆகும்.

**4. *பிரதான ஆசாரியன்:***

பிரதான ஆசாரியன் ஆசாரிய ராஜ்யத்துக்குத் தலைவனாய் இருப்பதினால், அவனைப் புதிய ஏற்பாட்டின் ஆசாரியத்துவத்தில்

பிரதான இடத்தை வகிக்கும் அப்போஸ்தலருக்கு நாம் ஒப்பிட லாம். சபையானது, அவர்களுடைய அப்போஸ்தல ஊழியத்தின் முத்திரையாயிருக்கிறது (I கொரி. 9 : 2). இங்கே நாம் கவனிக்க வேண்டிய பிரதானமான ஒரு விஷயம் உண்டு. ஆசாரிய ராஜ்யத்தைச் சேர்ந்த எல்லாரும் ஆரோனின் கீழ் ஒரே பிரமாணத் தினால் ஆண்டுகொள்ளப்பட்டு ஒன்றாயிருந்தது போல, புதிய ஏற்பாட்டின் மேற்கூறப்பட்ட எல்லாக் கூட்டத்தாரும் ஒரே ஆளுகைக்குள்ளும் ஒரே உபதேசத்துக்குள்ளும் கொண்டுவரப்பட வேண்டும் (எபே. 4 : 3 - 6, 11 - 16).

**அதிகாரம் 11**

# லேவியரும் அவர்களது ஊழியமும்

**ப**ழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசரிப்புக் கூடாரம் உண்டாக்கப்படுவதற்கு முன்பு, மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து வழிநடத்தி, அவர்களை வனாந்தரத்திற்குக் கொண்டு வந்ததைக் குறித்து நாம் அறிவோம். பின்னர் கூடாரம் உண்டாக்கப்பட்டு, கூடாரமும் அதன் பணிமுட்டுகளும் அதில் ஊழியஞ்செய்யும் ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்ட விவரங்களையும், அது புதிய ஏற்பாட்டு ஆசாரிய ஊழியத்திற்கு எவ்விதம் நிழலாட்டமாய் இருக்கிறதென்பதையும் முன்பு நாம் கண்டோம்.

இவைகளெல்லாம் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப் பட்டதின் இரண்டாம் வருஷம் முதலாம் மாதம், முதல் தேதி வரை நடைபெற்ற சம்பவங்களே. அது வரை ஆரோனின் முறைமையின்படியுள்ள ஊழியம் அல்லது ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியஞ்செய்வதற்கான ஆசாரிய ஊழியம் ஸ்தாபிக்கப்பட வில்லை. இருப்பினும், அந்த இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம், முதல் தேதியில் கூடாரத்தில் ஊழியஞ்செய்வதற்குரிய மனுஷர் வேறுபிரிக்கப்படும்படி இஸ்ரவேலருடைய தொகை எண்ணப்பட்டது. அவர்கள் எண்ணப்பட்டபோது லேவியரைக் கர்த்தர் தமக்கென்று வேறுபிரித்தார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் யாவரையும் கர்த்தர் தமக்கு ஊழியஞ்செய்யும்படி தெரிந்தெடுக்க வில்லை. எகிப்தில் முதற்பேறானவை யாவும் சங்கரிக்கப்பட்ட நாளிலே, "முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது" (யாத். 13 : 2) என்று மோசேயிடம் கூறி, பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் இஸ்ரவேலர் அனைவ ருடைய வீடுகளிலேயும் இருந்த முதற்பேறான யாவையும் அவர் தமக்கென்று பாதுகாத்தார். இஸ்ரவேலரின் முதற்பேறானவர் களுக்குப் பதிலாக அவர் அவர்களிலிருந்து ஒரு கோத்திரத்தை - அதாவது லேவி கோத்திரத்தை ஆசரிப்புக்கூடார ஊழியத்தின் வேலைக்காகப் பிரித்தெடுத்தார்: "இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பந் திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக, நான் லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து எடுத்துக்கொண்டேன்; அவர்கள் என்னுடையவர்களாயிருக்கிறார்கள்" (எண். 3 : 12).

இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரங்களிலுமிருந்த முதற் பேறானவர்கள் தொகையிடப்பட்டனர். அவ்விதம் தொகையிடப் பட்டபோது, லேவியர் அவர்களோடு சேர்த்து எண்ணப்பட வில்லை. அதற்குப் பதிலாக யோசேப்பின் கோத்திரமானது, எப்பிராயீம், மனாசே என இரண்டாகப் பிரிக்கப்பட்டு, இஸ்ரவேலர் பன்னிரண்டு கோத்திரங்களாகவே இருந்தனர். இஸ்ரவேலரில் ஒருமாத முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதற்பேறான ஆண்பிள்ளைகளெல்லாரும் எண்ணப்பட்டபோது, அவர்கள் 22, 273 பேராயிருந்தனர். அவர்களைக் குறித்து, அவர்கள் தம்முடையவர்கள் என்று கர்த்தர் சொன்னார். லேவி கோத்திரத்தில் ஒரு மாத முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளை களெல்லாம் எண்ணப்பட்டபோது, அவர்களுடைய தொகை 22, 000 ஆகக் காணப்பட்டது. இஸ்ரவேலரின் முதற்பேறானவர்களுக்குப் பதிலாக லேவியர் தெரிந்துகொள்ளப்பட வேண்டியதாயிருந்தது. ஆனால் லேவியரின் எண்ணிக்கையோ, முதற்பேறானவர்களின் மொத்த எண்ணிக்கைக்கு 273 பேர் குறைவாயிருந்தது. இந்த 273

பேருக்குப் பதிலாக ஒவ்வொருவனுக்கு ஐந்து சேக்கல் வீதம் மீட்கும் பொருள் பிரதான ஆசாரியனாகிய ஆரோனுக்குக் கொடுக்கப்பட்டது. இஸ்ரவேலின் முதற்பேறானவர்கள் ஒவ்வொரு வரும் ஐந்து சேக்கல் மதிப்பாகக் கணக்கிடப்பட்டதால், இந்த 273 பேருக்குப் பதிலாகப் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக் கின்படியே 1, 365 சேக்கல் நிறையான வெள்ளியை ஒரு பணமுடிப்பாய்க் கட்டி, 22, 000 பேரையும் அப்பணமுடிப்பையும் சேர்த்து, மோசே ஆரோனுக்குத் தத்தமாய்க் கொடுத்தான் (எண். 3 : 50, 51). இப்படியே இஸ்ரவேலின் முதற்பேறானவர்களுக்குப் பதிலாக லேவியரின் எல்லா ஆண்பிள்ளைகளும் இந்தப் பண முடிப்புடன் ஆரோன் வசமாயினர். லேவியராகிய இவர்கள், கூடாரத்தில் பணிவிடை செய்யும்படிக்கு ஆரோனுக்கும் அவ னுடைய குமாரருக்கும் தத்தமாய்க் கொடுக்கப்பட்டவர்களே. "ஆகையால் லேவியரை ஆரோனிடத்திலும் அவன் குமார ரிடத்திலும் ஒப்புக்கொடுப்பாயாக; இஸ்ரவேல் புத்திரரில் இவர்கள் முற்றிலும் அவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்" (வச. 9); "ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்ய, கர்த்தருக்குக் கொடுக்கப்பட்ட உங்கள் சகோதரராகிய லேவியரை நான் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உங்களுக்குத் தத்தமாகக் கொடுத்தேன்" (எண். 18 : 6).

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்க வேண்டிய விசேஷ மான காரியம் ஒன்று உண்டு. சாதாரணமான இஸ்ரவேலருக்கான மீட்கும் பொருள் ஒரு ஆத்துமாவுக்கு அரைச்சேக்கல் என்றும், முதற்பேறான ஒரு ஆண்பிள்ளைக்கான மீட்கும் பொருள் ஐந்து சேக்கல் என்றும் நாம் காண்கிறோம் (யாத். 30 : 11 - 16 ; எண். 3 : 46, 47). இதிலிருந்து, தேவனுக்குச் செய்யப்படும் ஊழியத்தின் மேன்மையையும், உன்னத அழைப்பின் விலையேறப்பெற்ற தன்மையையும் நாம் விளங்கிக்கொள்ளுகிறோம்.

லேவியர் இஸ்ரவேல் கோத்திரங்களின் முதற்பேறான வர்களுக்குப் பதிலாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களென்று நாம்

மேலே கண்டோம். பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்தும் தெரிந்துகொள்ளப்பட்ட முதற்பேறான ஆண்பிள்ளைகள் இப்பொழுது தேவனுடைய கணக்கீட்டின்படி லேவியர் என்று எண்ணப்படுவதினால், தங்கள் கோத்திரம், குடும்பம், தாய், தகப்பன், வீடு போன்றவற்றைப் பற்றிய அவர்களுடைய மனப்பான்மை முற்றிலும் மாற்றப்படுகிறது. உதாரணமாக, யூதாவின் குடும்பத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட முதற்பேறான ஆண் பிள்ளைகள் இப்பொழுது யூதா கோத்திரத்தார் என்று கருதப்படாமல், லேவியர் என்றே எண்ணப்பட வேண்டும். இது, புதிய ஏற்பாட்டில் முதற்பேறானவர்கள், யூதனென்றும் கிரேக்கனென்றும், அடிமையென்றும் சுயாதீனனென்றும், ஆணென்றும் பெண்ணென்றும் அழைக்கப்படாமல், தேவபுத்திரராய் மாற்றப்படுவதை வெளிப்படுத்துகிறது. இது இஸ்ரவேலருக்குள் மறைந்திருந்த புதிய ஏற்பாட்டின் இரகசியமே.

பூமியில் லேவியருக்குத் தங்கள் சகோதரரோடே பங்கும் சுதந்தரமுமிருக்கவில்லை. தேவனாகிய கர்த்தரே அவர்களுடைய் சுதந்தரமாயிருந்தார் (உபா. 10 : 9). எனவே லேவியர் விசேஷித்தவர்களானார்கள். அப்படியே புதிய ஏற்பாட்டுச் சபையின் தேவ ஊழியர்கள் எல்லா ஜனங்களிலிருந்தும் முற்றிலும் வேறுபிரிக்கப்பட்ட முதற்பேறானவர்களாயிருக்க வேண்டும். சாதாரணமான விசுவாசிகளைப் பார்க்கிலும் இவர்கள் அதிக விலையேறப் பெற்றவர்களே. இவர்கள் லேவியரைப் போல் தங்களுக்கென்று யாதொரு பங்கும் சுதந்தரமுமில்லாமல், தங்கள் மாம்ச சம்பந்தமானவர்கள் யாவரையும் வெறுத்து விட்டவர்களாயும், தங்கள் உடைமைகள் யாவற்றையும் விற்றுவிட்டவர்களாயும் இருக்க வேண்டும். இதனாலேயே கர்த்தர், "நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்" என்று கேட்ட வாலிபனைப் பார்த்து, "நீ ... உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா"

என்றார் (மத். 19 : 16, 21). ஆதி அப்போஸ்தலருடைய காலத்தில் பரிசுத்தவான்கள் இக்கட்டளையை நிறைவேற்றினார்கள். சீப்புரு தீவானும், லேவியனும், அப்போஸ்தலரால் ஆறுதலின் மகன் என அர்த்தங்கொள்ளும் பர்னபா என்று பெயரிடப்பட்டவனுமாகிய யோசே என்பவன், தன்னுடைய காணியாட்சிகளை விற்று, அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தான் (அப். 4 : 36, 37). கர்த்தராகிய இயேசு, 'தரித்திரருக்குக் கொடு' என்று சொன்னபோது, சாதாரணமாக இப்பூமியிலிருக்கும் பிச்சைக்காரரை அல்ல, பூமியில் தரித்திரராயிருந்தும் விசுவாசத்தில் ஐசுவரியவான்களா யிருக்கும் தம்முடைய பரிசுத்தவான்களையே கருதினார். "தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாக" தெரிந்துகொண்டார் (யாக். 2 : 5). கர்த்தருடைய ஊழியருக்குப் பூமியில் சொந்தமாக ஒன்றுமில்லை. இதனாலேயே கர்த்தரும், "உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்" (லூக்கா 14 : 33) என்றும், "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" (மத். 8 : 20) என்றும் கூறினார்.

மேலும், முதற்பேறானவர்களுக்குப் பதிலாக ஆரோனுக்குக் கையளிக்கப்பட்ட பணமுடிப்பைப் போல, இந்த ஊழியஞ் செய்யும்படி பூமியில் ஏதுமற்றவர்களாயிருக்கும் பிரதிஷ்டைக்குள் வருகிற இவர்கள், தேவனுடைய கரத்திலும் தேவனால் அபி ஷேகம் பண்ணப்பட்ட அப்போஸ்தலருடைய கரத்திலும் தங்களை விலையேறப்பெற்ற பொக்கிஷமாக ஒப்புக்கொடுக்க வேண்டும். சுயசித்தம் செய்யாதவர்களாய், இவர்கள் தாங்கள் அனுப்பப்படும் எந்த இடத்திற்கும் போகவும், கர்த்தருக்காகத் தங்களையே செலவுபண்ணவும், தாங்கள் செலவுபண்ணப்படவும் தங்களை ஒப்புக்கொடுத்திருக்க வேண்டும்.

இவ்விதம் ஆசரிப்புக் கூடாரத்தின் ஊழியத்திற்காக ஆரோ னுக்குத் தத்தமாகக் கொடுக்கப்பட்ட லேவியர் - கோகாத்தியர்,

கெர்சோனியர், மெராரியர் என்ற மூன்று கூட்டத்தாராயிருந்தனர். கோகாத்தியர் ஆசாரியனாகிய எலெயாசாரின் கட்டளைப்படி அவனுக்குக் கீழிருந்து ஊழியஞ்செய்தனர். அவர்கள் வாசஸ் தலத்தின் மகா பரிசுத்தமானவைகளைச் சுமக்கிறவர்களாயிருந்தனர். கெர்சோனியரும் மெராரியரும் ஆசாரியனாகிய இத்தாமாருக்குக் கீழிருந்து ஊழியஞ்செய்தனர். ஆரோன், ஆசாரியர்கள், கோகாத் தியர், கெர்சோனியர், மெராரியர் இவர்களனைவரும் சேர்ந்து - சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும்படியாகவும், புதிய ஏற்பாட்டுச் சபையில் தேவன் நியமித்திருக்கிற அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் ஆகிய உத்தியோகஸ்தர்களைக் குறிக் கின்றனர். "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதக ராகவும் ஏற்படுத்தினார்" (எபே. 4 : 11 - 13).

இஸ்ரவேலரின் பிரயாணத்தில் கெர்சோனியர் ஆசரிப்புக் கூடாரத்தின் மூடுதிரைகள், தொங்குதிரைகள், கயிறுகள் முதலிய வற்றைச் சுமக்கிறவர்களாகவும், மெராரியர் ஆசரிப்புக் கூடாரத் தின் பலகைகள், தூண்கள், பாதங்கள், முளைகள் போன்றவற்றைச் சுமக்கிறவர்களாகவும் இருந்ததால், இவர்கள் மற்றவர்களுக்கு முன்னே சென்று ஆசரிப்புக் கூடாரத்தை ஸ்தாபித்தனர். இவர் களைத் தொடர்ந்து, பரிசுத்த ஸ்தலத்தின் உபகரணங்களைத் தங்கள் தோள்களின் மேல் சுமக்கிறவர்களான கோகாத்தியர் சென்று, அவற்றை ஆரோனிடம் கொடுத்தனர். ஆரோனும் அவனுடைய குமாரராகிய ஆசாரியரும் அவற்றை ஊழியத்தினுடைய முறை

யின்படி அதினதின் இடங்களில் வைத்தனர். மேற்கூறப்பட்டுள்ளபடி, ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்தில் மாதிரியாகவும் நிழலாட்டமாகவும் காண்பிக்கப்பட்ட வண்ணமாகவே, தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரை நியமித்திருக்கிறார் என்பதும், மற்ற தேவ ஊழியர்கள் அப்போஸ்தலருடைய ஆளுகைக்குட்பட்டவர்கள் என்பதும் நாம் மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும். இந்த அப்போஸ்தலர், நாம் அறிக்கைபண்ணுகிற பிரதான ஆசாரியரும், சபையில் எல்லாவற்றிற்கும் மேலான தலையுமாகிய கிறிஸ்து இயேசுவின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறார்கள் (I கொரி. 12 : 28 ; எபி. 3 : 1 ; எபே. 1 : 22, 23). ஆயினும் இக்காலத்தில் தங்களைத் தீர்க்கதரிசிகளென்றும் சுவிசேஷகர்களென்றும் சொல்லிக்கொண்டு, சுயாதீனமாக ஊழியஞ்செய்து, தேவனானவர் சபையிலே நியமித்திருக்கிற அப்போஸ்தலரிடம் ஆத்துமாக்களை ஒப்புவியாமல், அவர்களைத் தங்களுக்கென்றே சேர்த்துக்கொள்ளுகிற அநேகர் இருக்கிறார்கள் என்பது வருந்தத்தக்கதாகும்.

அதிகாரம் 12

# ஆசாரியப் பிரதிஷ்டை

**வ**னாந்தரத்தில் கர்த்தர் ஒரு ஆசாரிய ராஜ்யத்தை ஸ்தாபித்தார் என்று நாம் முன்பு கண்டோம். அதன் தலைவன் பிரதான ஆசாரியனே. பிரதான ஆசாரியனும் அவனுடைய குமாரரும் ஆசாரிய ஊழியஞ்செய்யும்படி அபிஷேகம்பண்ணப் பட்டார்கள். புதிய ஏற்பாட்டில் இவர்கள் கிறிஸ்துவுக்கும் அவருடைய அப்போஸ்தலருக்கும் நிழலாட்டமாயிருக்கிறார்கள். ஆசாரியர்கள் லேவியரிலிருந்து வேறுபிரிக்கப்பட்டவர்கள் ஆவர். இந்தக் கனமான ஊழியம் செய்வதற்காக அவர்கள் வேறுபிரிக்கப் பட்டபோது, அவர்களுக்குச் செய்யப்பட்ட காரியங்களைக் குறித்து யாத்திராகமம் 29 - ஆம் அதிகாரத்திலும், லேவியராகமம் 8 - ஆம் அதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளது. அது 'ஆசாரியப் பிரதிஷ்டை' என்று அழைக்கப்படுகிறது. நாம் அவற்றின் ஆவிக்குரிய கருத்துக்களைச் சுருக்கமாக ஆராய்வோமாக.

## 1. வெண்கலத் தொட்டியில் கழுவுதல்:

முதலாவது ஆசாரியர்கள் வெண்கலத் தொட்டிக்கு அருகில் கொண்டுவரப்பட்டனர். அங்கு அவர்கள் தங்கள் பழைய வஸ்திரங்களைக் களைந்து, தண்ணீரினால் கழுவப்பட்டு, புதிய ஆசாரிய வஸ்திரங்களை அணிந்துகொள்ள வேண்டியதாய்

இருந்தது. இதில் 'பழைய வஸ்திரங்களைக் களைதல்' என்பது மனந்திரும்புதல், பாவ அறிக்கை இவற்றின் வாயிலாக, 'முந்தின நடக்கைக்குரிய பழைய மனுஷனைக் களைந்துபோடுதலை' (எபே. 4 : 22) அல்லது 'மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்து விடுதலைக்' (கொலோ. 2 : 11) குறிக்கிறது. ஏனென்றால், "தன் பாவங் களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதி. 28 : 13). இங்கு 'கழுவுதல்' என்பது தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதையும், 'புதிய வஸ்திரம் அணிந்துகொள்ளுதல்' என்பது தண்ணீர் ஞானஸ்நானத்தில் ஒருவன் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்வதையும் குறிக்கின்றன. "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலா. 3 : 27).

## 2. ஆசாரிய வஸ்திரங்களைத் தரித்தல்:

"உன் சகோதரனாகிய ஆரோனுக்கு, மகிமையும் அலங் காரமுமாய் இருக்கும் பொருட்டு, பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணுவாயாக" (யாத். 28 : 2). பிரதான ஆசாரியன் தண்ணீரினால் கழுவப்பட்ட பின்பு அவனுக்குத் தரிப்பிக்கப்படும் வஸ்திரங்கள் பரிசுத்த வஸ்திரங்கள் எனப்பட்டன. அவ்வஸ்திரங் கள் பின்வருமாறு:

(i) **சணல்நூல் சல்லடங்கள்** (யாத். 28 : 42):

"அவர்களுடைய நிர்வாணத்தை மூடும்படிக்கு, இடுப்புத் தொடங்கி முழங்கால்மட்டும் உடுத்த சணல்நூல் சல்லடங்களையும் உண்டுபண்ணுவாயாக."

தண்ணீர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதினால், நாம் தேவநீதியைத் தரித்துக்கொள்கிறோம். ஆசாரிய வஸ்திரங்கள் யாவையும் தரித்துக்கொள்ளுதல் இதையே




**மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரதான ஆசாரியன்**

குறிக்கிறது. எனினும், சணல்நூல் சல்லடங்கள், நிர்வாணத்தை மூடும்படி உள்ளாக அணியப்பட்டதினால், அவை ஒரு தேவ ஊழியனுக்கு மிகவும் இன்றியமையாத பண்பாகிய தேவனுக்கு முன்பாகக் குற்றமற்ற மனச்சாட்சியுடையவனாயிருத்தலைக் குறிக் கின்றன. "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (II கொரி. 5 : 21) என்று எழுதப்பட்டிருக்கிறபடி, இந்தத் தேவநீதியைக் கிறிஸ்துவின் மூலமாய் நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆதாமும் ஏவாளும் தங்கள் விழுகைக்கு முன்பாகக் கொண்டிருந்த மகிமையைப் பாவமானது உரிந்துகொண்டு, அவர்களை நிர்வாணி களாக்கியது. பின்பு கர்த்தர் அவர்களுடைய நிர்வாணத்தை மூடும்படி தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தி னார். இது கிறிஸ்துவின் பலியின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் நீதியை முன்னறிவித்தது.

ஆசாரியனுடைய மற்ற வஸ்திரங்களைக் கொண்டு அவன் நிர்வாணியல்ல என்று உலகம் அவனை நிதானிக்கக் கூடியதாயி ருந்தது. ஆனால், சணல்நூல் சல்லடங்களோ, அவன் தேவனுக்கு முன்பாக நிர்வாணியல்ல என்பதை அவனுக்கு நிச்சயப்படுத்திற்று. ஒரு தேவ ஊழியன் தன் இரகசிய ஜீவியத்தில் தேவனுக்கு முன்பாக நிர்வாணியாய்க் காணப்படாமல், பரிசுத்தமுள்ளவனும் குற்றமற்றவனுமாய்க் காணப்பட வேண்டும் என்பதை இது நமக்கு எச்சரித்துக்கொண்டிருக்கிறது. அப். பவுல், "என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே" (I கொரி. 4 : 4) என தன்னைக் குறித்து சாட்சி கூறுகிறார்.

**(ii) சணல்நூல் அங்கி** (யாத். 28 : 39):

சணல்நூல் சல்லடங்களின் மேல் அணியப்படும் சணல் நூல் அங்கி, தேவ ஊழியர்கள் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாகக் குற்றஞ்சாட்டப்படாத பரிசுத்தவான்களாய்க் காணப்

படும்படியாக விசுவாசத்தினாலே தரித்துக்கொள்ள வேண்டிய தேவ நீதியைக் குறிக்கிறது. "விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப் படுத்தப்படுகிறது" (ரோமர் 1 : 17) என எழுதப்பட்டிருக்கிறது. அப். பவுல் நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுய நீதியை உடையவராயிராமல், விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டா யிருக்கிற நீதியை உடையவராய், கிறிஸ்துவுக்குள் இருக்கிறவ ரென்று காணப்பட வேண்டும் என வாஞ்சித்தார் (பிலி. 3 : 9). அதனால், "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி" (I தெச. 2 : 10) என்று அவரால் கூற முடிந்தது.

**(iii) இடைக்கச்சை** (யாத். 28 : 39) :

அப். பேதுரு தன்னுடைய நிருபத்தில், "நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு" (I பேதுரு 1 : 13) என்று எழுதுவது போல, 'இடைக்கச்சை' மனதின் அரை கட்டப்படு வதைக் குறிக்கிறது. "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும்" (எபே. 6 : 14) என்று கூறப் பட்டுள்ளபடி, தேவ ஊழியரின் மனதின் அரை கட்டப்பட்டதாயி ருக்கும்படி அவர்களுக்குச் சுவிசேஷ சத்தியத்தின் தெளிவான வெளிப்படுத்தல் தேவை. அவ்வெளிப்படுத்தல் இல்லாமல் ஒருவரது உள்ளான மனிதன் ஸ்திரமாயும் உறுதியாயும் இருக்க இயலாது. பிரதான ஆசாரியன் இந்த இடைக்கச்சையைத் தரித்தவனாய் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தான். நாம் முன்பு கண்டபடி தேவ ஊழியர்களும் விசுவாசிகளும் பரலோ கத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டியவர் களாகையால், அவர்களது மனதின் அரை சத்தியத்தால் கட்டப் பட்டிருக்க வேண்டும். எபிரெயர் 6 : 19, 20 - இல் குறிப்பிடப் பட்டுள்ளபடி பரலோகத்தின் மகா பரிசுத்த ஸ்தலமே நமது நம்பிக்கையாயிருப்பதால், அப். பவுல் கொலோசெயருக்கு

எழுதும்போது, 'அவர்கள் தாங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருக்க வேண்டும்' என்று கூறுகிறார் (கொலோ. 1 : 22).

(iv) **பாகை** (யாத். 28 : 39) ;

பிரதான ஆசாரியன் தரித்திருந்த பாகை, புதிய ஏற்பாட்டில் இரட்சணியமென்னும் தலைச்சீராவைக் குறிக்கிறது (எபே. 6 : 17). "இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீரா" என்று I தெசலோனிக்கேயர் 5 : 8 – இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது கர்த்தருடைய வருகையின் நம்பிக்கையைக் காட்டுகிறது. இந்த நம்பிக்கையை இழந்துபோகிறவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்மாறிப்போவார்கள். அப். யோவானுங்கூட தன்னுடைய நிருபத்தில், "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (I யோவான் 3 : 2, 3) என்று எழுதுகிறார். 'நம்பிக்கையில் சந்தோஷமாயிருக்க வேண்டும்' (ரோமர் 12 : 12) என்றும், 'நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்' (எபி. 3 : 6) என்றும் நாம் அறிவுறுத்தப்படுகிறோம். ஆதலால், தேவ ஊழியரும் விசுவாசிகளும் தங்கள் மனதை இரட்சிப்பின் நம்பிக்கையினால் காத்துக்கொள்ள வேண்டும்.

(v) **பொற்பட்டம்** (யாத். 28 : 36 – 38) :

பொற்பட்டமானது, பிரதான ஆசாரியனுடைய பாகையின் முகப்பில் கட்டப்பட்டிருந்தது. இதன்மேல் "*கர்த்தருக்குப் பரிசுத்தம்*"

என்று முத்திரை வெட்டாய் வெட்டப்பட்டிருந்தது. இது, அவன் கர்த்தருக்கு மாத்திரம் உரியவன் என்பதை வெளிப்படுத்துகிறது. இது பாகையிலிருக்கும்படி இளநீல நாடாவினால் பாகையின் முகப்பில் கட்டப்பட்டிருந்தது.

முதலாவதாக, இந்தப் பொற்பட்டம், எல்லா அந்நிய எண்ணங்களிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப் பட்டு, கர்த்தருக்கென்று வேறுபிரிக்கப்பட்டிருக்கும் மனதைக் குறிக்கிறது. "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதை யுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26 : 3) என்று தீர்க்கதரிசி கூறுகிறான். பிரதான ஆசாரியன் இப்பொற்பட்டத்தைத் தரித்துக்கொண்டு வருடம் முழுவதும் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்து, வருடத்தில் ஒரு நாள் மகா பரிசுத்த ஸ்தலத் திற்குள் பிரவேசிக்கிறான். நாம் கர்த்தருடைய வருகையில் சேர்த்துக்கொள்ளப்படும் நாள்பரியந்தம் நம் ஜீவியகாலம் முழு வதும் நம்முடைய பரிசுத்தத்தை எவ்விதம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை இது குறிக்கிறது. ஏனெனில், நம்முடைய பிரதான ஆசாரியர், 'பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாத வரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்த வருமாயிருக்கிறார்' (எபி. 7 : 26).

இரண்டாவதாக, யாத்திராகமம் 28 : 38 - இல், "இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பரிசுத்த காணிக்கைகளாகப் படைக்கும் பரிசுத்த மானவைகளின் தோஷத்தை ஆரோன் சுமக்கும்படி, அது ஆரோ னுடைய நெற்றியின்மேல் இருப்பதாக; கர்த்தருடைய சந்நிதியில் அவர்கள் அங்கிகரிக்கப்படும்படி, அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேல் இருக்கவேண்டும்" என்று எழுதப்பட்டிருக் கிறபடி, பிரதான ஆசாரியன் அப்பட்டத்தை ஜனங்கள் கர்த்தரால் அங்கீகரிக்கப்படும்படியாகத் தரித்திருந்தான். இஸ்ரவேல் புத்திரர் படைக்கும் பரிசுத்தமானவைகளின் தோஷம் என்றால் என்ன?

ஒருவன் முழு இருதயத்தோடும் கர்த்தருக்குக் கொண்டுவரும் காணிக்கையானது மனுஷனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்படத்தக்க தாகக் காணப்பட்டாலும், அது தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாகக் குறைவுள்ளதாகவே எப்போதும் காணப்படும். '*கர்த்த ருக்குப் பரிசுத்தம்*' என்னும் பட்டம் தரித்திருக்கும் ஆசாரியன் இந்தத் தோஷத்தைச் சுமக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பிரதான ஆசாரியன் இருப்பதினாலேயே, பரிசுத்த காணிக்கை களைச் செலுத்தும் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணிக்கைகள் தோஷமுள்ளவைகளாயிருந்தாலும் தேவனால் அங்கீகரிக்கப்படு கிறார்கள். அதைப் போலவே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமானதும் தேவனால் அங்கீகரிக்கப் படத்தக்கதுமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாக அழைக்கப்பட்டிருக்கும் நாம் (I பேதுரு 2 : 5 - Eng.), 'தேவன் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாகப் பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப்படுகிறோம்' (எபே. 1 : 6 - Eng.) என்று கூறப் பட்டுள்ளபடி, நம்முடைய பிரதான ஆசாரியராயிருக்கிற கிறிஸ்துவின் பூரணத்தின் மூலம் பிரியமானவருக்குள் தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோம். மேலும் கொலோசெயர் 1 : 28 - இல் சொல்லப்பட்டுள்ளபடி, அப்போஸ்தலருடைய ஊழி யத்தின் வாயிலாக நாம் கிறிஸ்துவுக்குள் பூரணராக நிறுத்தப் படுகிறோம். "புறஜாதியாராகிய பலி பரிசுத்தஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான (தேவனால் அங்கீகரிக்கப்படும்) பலியாகும்படிக்கு, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து புறஜாதி களுக்கு இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாகும்பொருட்டு" (ரோமர் 15 : 15) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தப் பட்டம் இளநீல நாடாவினால் பாகையோடு சேர்த்துக் கட்டப்பட்டது. இளநீலம் தெய்வீக அன்பைக் காண்பிக்கிறது. அன்பு மாத்திரமே சகலத்தையும் தாங்குமாதலால்,

தேவ ஊழியர் அன்புடன் அக்கிரமத்தைச் சுமப்பதை இது குறிக்கிறது. இவ்வித ஊழியத்தின் வாயிலாகவே ஊழியஞ்செய்யப் படுகிறவர்களும் ஊழியஞ்செய்கிறவர்களும் பரிசுத்தமாக்கப் பட்டு, கர்த்தருடைய வருகைக்குத் தகுதியுள்ளவர்களாகிறார்கள்.

**(vi) ஏபோத்தின் கீழ் அங்கி** (யாத். 28 : 31 - 35) **:**

பிரதான ஆசாரியன் தரித்திருந்த சணல்நூல் அங்கி, ஒரு இடைக்கச்சையால் அவனுடைய சரீரத்துடன் சேர்த்துக் கட்டப் பட்டிருந்தது. முழுவதும் இளநீல நூலினால் உண்டாக்கப்பட்ட ஏபோத்தின் கீழங்கி, சணல்நூல் அங்கியின்மீது தரிக்கப்பட்டது. இந்த அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழமும், ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழமுமாகத் தொங்கும்படியாக நெய்யப்பட்டிருந்தன. இந்த மாதளம்பழங்கள் திரித்த இளநீலநூல், இரத்தாம்பர நூல், சிவப்புநூல் இவற்றினால் செய்யப்பட்டிருந்தன. ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியஞ் செய்யும்போது மணிகளின் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கும்.

'இளநீல நிறம்' ஞானத்தினால் நிறைந்த தூய்மையான தெய்வீக அன்பைக் குறிக்கிறது. ஒரு தேவ ஊழியன் ஞானத் தினால் நிறைந்திருக்கும் அன்பினால் உடுத்துவிக்கப்பட்டிருக்க வேண்டும். அவன் கர்த்தருக்காக அன்பினால் ஊழியஞ்செய்ய வேண்டுமேயன்றி, பிரதிபலனுக்காக ஊழியஞ்செய்யக் கூடாது. ஒரு முறை பேதுரு தன் பழைய தொழிலுக்குத் திரும்பிப் போனபோது கர்த்தராகிய இயேசு அவனிடம், "சீமோனே, இவர் களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" (யோவான் 21 : 15) என்று கேட்டார். பேதுரு அவரை மறுதலித்த தற்கும், தன் ஊழியத்திலிருந்து பின்வாங்கினதற்கும் காரணம், பூரண அன்பு இல்லாமையே ஆகும். ஆயினும் அவர் பெந்தெ கொஸ்தே நாளில் கர்த்தருடைய அன்பில் மீண்டும் ஸ்திரப் படுத்தப்பட்டு, தன் சேவையைத் தொடர்ந்தார். அப். பவுல் கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கி ஏவப்பட்டு ஊழியம் செய்தார் (II கொரி. 5 : 14, 15). தூய்மையான அன்பு அல்லது தேவ அன்பு

ஞானத்தினால் நிறைந்ததாயிருக்கிறது. ஞானமில்லாத அன்பு ஜென்ம சுபாவத்துக்குரியதும் அழிவுக்கேதுவானதுமாயிருக்கிறது. ஒரு தேவ ஊழியன் தெய்வீக ஞானத்தினால் நிறைந்த தூய்மை யான அன்பைத் தனக்குள் பேணி வளர்க்க வேண்டும். அப். பவுல், "உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர் விலும் (பகுத்தறிவிலும்) இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும் ... வேண்டுதல் செய்கிறேன்" (பிலி. 1 : 9, 11) என்று பிலிப்பியருக்கு எழுதுகிறார்.

அன்பினால் நிறைந்து செய்யப்படும் ஊழியம், எப்பொழு தும் சந்தோஷமான ஒன்றாயிருக்கிறது என்பதை மணிகளின் சத்தம் விளங்கப்பண்ணுகிறது. "ஆரோன் ஆராதனை செய்யக் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவே சிக்கும்போதும், வெளியே வரும்போதும், அவன் சாகாதபடிக்கு, அதின் சத்தம் கேட்கப்படும்படி அதைத் தரித்துக்கொள்ள வேண்டும்" (யாத். 28 : 35) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அன்பினால் நிறைந்து, சந்தோஷத்துடன் கர்த்தருக்கு ஊழியஞ் செய்யும் ஒரு தேவ ஊழியன் தன்னைக் காத்துக்கொள்ளக் கூடியவனாய் இருப்பான் என்பதையும், அவனுக்கு ஆவிக்குரிய மரணம் சம்பவிப்பதில்லை என்பதையும் காட்டுகிறது. இரட்சிப் பின் சந்தோஷம், பரிசுத்த ஆவியின் சந்தோஷம், கர்த்தருடைய வருகையைப் பற்றிய நம்பிக்கையின் சந்தோஷம் இவற்றினால் நிறைந்து, அவன் அன்பில் நடந்துகொண்டால் மாத்திரமே, ஆவி யின் கனி கொடுக்கிறவனாயிருப்பான். இதைச் சித்திரிக்கும் பொருட்டாகவே இவ்வங்கியின் ஓரங்களில் ஒவ்வொரு மணிக்கும் அடுத்தாற்போல் ஒரு மாதளம்பழம் நெய்யப்பட்டிருந்தது. இம் மாதளம்பழம், ஆவியின் கனியை வெளிப்படுத்துகிறது. ஆவியின் 'கனி' என்று ஒருமையில் கூறப்பட்டிருக்கிறது. அது தெய்வீக அன்பே. மாதளம்பழம், ஆவியின் கனியாகிய அன்பை வெளிப்படுத்துகிறது. ஒரு மாதளம்பழத்துக்குள்ளே முத்துக் களைப் போன்ற பல விதைகள் இருப்பது போல, அன்பின்

கனிக்குள்ளேயும் அன்பின் பல அம்சங்களாகிய சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவை இருக்கின்றன (கலா. 5 : 22, 23). உன்னதப்பாட்டு 4 : 3 - இல், "உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதளம்பழம்போலிருக்கிறது" என்று நாம் வாசிக்கிறோம். மாதாளம்பழத்தின் உள்ளே முத்துக்கள் ஒழுங்கான வரிசைக் கிரமமாய்க் காணப்படுவதைப் போல, ஒரு தேவ ஊழியனின் மனது அன்பின் சிந்தனைகளால் நிறைந்திருக்க வேண்டும். அவன் தன்னில் ஆவிக்குரிய சந்தோஷத்தைக் காத்துக்கொண்டால் மாத்திரமே, கெட்டுப்போகப் பின்வாங்குகிற வனாயிராமல், ஆவியின் கனி கொடுக்கக்கூடியவனாயிருப்பான்.

**(vii) ஏபோத்து** (யாத். 28 : 6, 7):

"ஏபோத்தைப் பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலாலும் விசித்திரவேலையாய்ச் செய்யக்கடவர்கள்" (யாத். 28 : 6). ஐந்து விதமான நூல்களினால் செய்யப்பட்டதாயிருந்த ஏபோத்து, பிரதான ஆசாரியனுடைய மற்ற எல்லா வஸ்திரங்களையும் பார்க்கிலும் மிக அழகானதாக, மகிமையாகவும் அலங்காரமாகவும் மின்னிக்கொண்டிருந்தது. எனவே, ஒரு தேவ ஊழியனுடைய மகிமையும் அழகும், அவனுக்கிருக்கும் வரங்கள், தாலந்துகள் இவற்றில் முக்கியமாய்த் தங்கியிராமல், அவன் தன் ஜீவியத்தில் வெளிப்படுத்தும் பலவித திவ்ய சுபாவங்களிலேயே தங்கியிருக் கின்றன.

(a) ***பொற்சரிகைகள்:*** பொன்னானது தகடுகளாய் அடிக்கப் பட்டு, பின்பு நூலைப் போல சரிகைகளாய் இழைக்கப்பட்டது (யாத். 39 : 3). இது உபத்திரவங்கள், பாடுகள் இவற்றின் மத்தியில் உருவாக்கப்படும் விசுவாசத்தைக் காண்பிக்கிறது. "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும்

அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (I பேதுரு 1 : 7).

(b) ***இளநீல நூல்:*** இது அன்பின் பூரணத்தைக் காண்பிக்கிறது. "நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத் தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (I யோவான் 4 : 17).

(c) ***இரத்தாம்பர நூல்:*** இது தைரியமும் நீதியும் கலந்த ராஜரீகத்தைக் காட்டுகிறது. இதைக் குறித்து, "நீதியினால் சிங்காசனம் உறுதிப்படும்" (நீதி. 16 : 12) என்றும், "நீதிமான்களோ சிங்கத்தைப்போலே தைரியமாயிருக்கிறார்கள்" (நீதி. 28 : 1) என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த நீதியானது விசுவாசத்தின் வளர்ச்சியில் வெளிப்படுத்தப்படுகிறது (ரோமர் 1 : 17). தேவ நீதியின் பூரணம் விசுவாசத்தின் கிரியைகளினாலே நாம் அடைந்துகொள்ளும் ஒன்றாகும் (யாக். 2 : 20 - 25).

(d) ***சிவப்பு நூல்:*** இது தேவசித்தத்தின்படி பாடுபடுதலில் ஒருவர் அடைந்துகொள்ளும் பூரணத்தைக் காண்பிக்கிறது. கர்த்தராகிய இயேசுவைக் குறித்து, "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்(டார்)" (எபி. 5 : 8) என்று கூறப்பட்டுள்ளது. பாடுகளினால் பூரணமாக்கப்பட்ட நம்முடைய இரட்சிப்பின் அதிபதி, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராயிருக்கிறார் (எபி. 2 : 10 ; 5 : 9). சபையார் "தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் (பூரணராயும்) பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று" தேவ ஊழியனாகிய எப்பாப்பிரா தன் ஜெபங்களில் எப்பொழுதும் போராடினார் என்று கூறப்பட்டிருக்கிறது (கொலோ. 4 : 12). தேவசித்தம் செய்யும்படி

தங்களை ஒப்புக்கொடுத்ததின் மூலம் தங்கள் சொந்த சித்தத்திற்கு மரித்தவர்கள் மட்டுமே கிறிஸ்துவுக்குள் பூரணமாக்கப்படக் கூடும்.

(e) *திரித்த மெல்லிய பஞ்சுநூல்:* "பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத் தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (II கொரி. 7 : 1) என்று எழுதப் பட்டிருக்கிறபடி, இது, பரிசுத்தத்தின் பூரணத்தைக் காண்பிக்கிறது.

இந்த ஏபோத்து மேற்கண்ட ஐந்து விதமான நூல்களினால் செய்யப்பட்டிருப்பது, ஒரு தேவ ஊழியன் அவை குறிக்கும் சுபாவங்களில் எவ்விதம் வளர்ச்சியடைகிறான் என்பதையும், தேவன் அவனுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தைக் கொண்டு சபையை எவ்விதம் பூரணத்துக்கு நடத்துகிறான் என்பதையும் காண்பிக்கிறது. பொற்சரிகைகள் மற்ற நான்கு நூல்களினூடே நெய்யப்பட்டிருப்பது, நாம் பூரணப்படுவதும் மற்றவர்களைப் பூரணத்திற்கு வழிநடத்துவதும் விசுவாசத்தின் பரீட்சைகளினால் மட்டுமே சாத்தியமாகும் என்பதைக் குறிக்கிறது.

ஏபோத்து, இரண்டு தோள்துண்டுகளாய்ச் செய்யப்பட்டு, இரண்டு முனைகளும் இணைக்கப்பட்டு, பிரதான ஆசாரிய னுடைய 'ஏபோத்தின் கீழ் அங்கி'யின் மீது அணியப்பட்டது. இது கர்த்தர் தமக்கு ஊழியஞ்செய்யும்படி தம்முடைய சீஷர் களுக்குக் கொடுக்கும் அதிகாரத்தையும் வல்லமையையும் காண்பிக்கிறது (மத். 10 : 1). கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களை அனுப்பியபோது அவர்களுக்கு அதிகாரமும் வல்லமையும் கொடுத்தனுப்பினார்.

**(viii) ஏபோத்தின் விசித்திரமான கச்சை** (யாத். 28 : 8) **:**

பிரதான ஆசாரியன் அணிந்திருந்த முதல் கச்சை, அவ னுடைய முதலாவது வஸ்திரமாகிய சணல்நூல் அங்கியைச்

சேர்த்துக் கட்டுவதாக மறைந்திருந்தது. ஆனால் இந்த ஏபோத்தின் விசித்திரமான கச்சையானது, அவன் தன் வஸ்திரங்களின் மேல், வெளியே அணிந்திருந்த இரண்டாவது கச்சையாகும். அது ஏபோத்தைப் போலவே ஐந்து விதமான நூல்களினால் செய்யப் பட்டிருந்தது. ஏபோத்தின் விசித்திரமான கச்சை, சபையைப் பூரணத்திற்கு வழிநடத்துவதற்குத் தேவையான ஆழமான சத்தியம் அல்லது உபதேசத்தைக் குறிக்கிறது. சிலர் அடிப்படையான உபதேசங்களைக் குறித்து மாத்திரம் கருத்துள்ளவர்களாய் இருக் கிறார்கள். ஆழமானதும் அதிமேன்மையானதுமான உபதேசங் களினால் சபையைப் பக்திவிருத்தியடையச் செய்வதை அவர்கள் அசட்டை செய்து, அடிப்படை உபதேசங்களையே மறுபடியும் மறுபடியும் போதிக்கிறார்கள். எனவே, அப். பவுல், "காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவ னுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தை யல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்" (எபி. 5 : 12) என்றும், "ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு ... பூரணராகும்படி கடந்துபோவோ மாக" (எபி. 6 : 1, 2) என்றும் சொல்லுகிறார்.

(ix) **நியாயவிதி மார்ப்பதக்கமும் ஊரீமும் தும்மீமும்** (யாத். 28 : 15 - 30) **:**

நியாயவிதி மார்ப்பதக்கம் ஏபோத்து செய்யப்பட்ட அதே ஐந்து விதமான நூல்களினால் செய்யப்பட்டிருந்தது. அது சதுரமாயும் இரட்டையாயுமிருந்தது. மார்ப்பதக்கத்தில் பன்னிரண்டு விலையேறப்பெற்ற கற்கள் நான்கு வரிசைகளாகப் பொன்னினால் பதிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கல்லிலும் இஸ்ரவேலின் பன்னி ரண்டு கோத்திரங்களின் ஒவ்வொரு கோத்திரத்தினுடைய பெயர் முத்திரை வெட்டாக வெட்டப்பட்டிருந்தது (யாத். 28 : 15 - 21). இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் கூடாரம் போட்டிருந்த ஒழுங்கின்படியே அவர்களுடைய கோத்திரங்களின் பெயர்கள்




**பரிசுத்த ஸ்தலத்தில் பிரதான ஆசாரியன்**

முத்திரை வெட்டாய் அதில் வெட்டப்பட்டிருந்தன. அவை பின்வருமாறு:

***முதலாம் வரிசை:*** யூதா, இசக்கார், செபுலோன். இந்த வரிசையிலுள்ள கோத்திரங்கள் முறையே பத்மராகம், புஷ்ப ராகம், மாணிக்கம் என்னும் கற்களினால் குறிக்கப்பட்டிருந்தன.

***இரண்டாம் வரிசை:*** ரூபன், சிமியோன், காத். இந்த வரிசையிலுள்ள கோத்திரங்கள் முறையே மரகதம், இந்திரநீலம், வச்சிரம் என்னும் கற்களினால் குறிக்கப்பட்டிருந்தன.

***மூன்றாம் வரிசை:*** எப்பிராயீம், மனாசே, பென்யமீன். இந்த வரிசையிலுள்ள கோத்திரங்கள் முறையே கெம்பு, வைடூரி யம், சுகந்தி என்னும் கற்களினால் குறிக்கப்பட்டிருந்தன.

***நான்காம் வரிசை:*** தாண், ஆசேர், நப்தலி. இந்த வரிசை யிலுள்ள கோத்திரங்கள் முறையே படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி என்னும் கற்களினால் குறிக்கப்பட்டிருந்தன.

நியாயவிதி மார்ப்பதக்கத்தின்மேல் இந்தப் பன்னிரண்டு கற்களும் பதிக்கப்பட்டிருப்பது, சபையானது விலையேறப்பெற்ற சம்பத்து என்பதையும், தேவ ஊழியர் விசுவாசிகளை அருமை யாக எண்ணி அவர்களைத் தங்கள் இருதயங்களில் தரித்திருக்க வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகிறது (மல். 3 : 17 ; பிலி. 1 : 7). பன்னிரண்டு கோத்திரத்தாரும் எவ்வளவு பெலவீனமுள்ளவர் களாயிருந்தாலும், பிரதான ஆசாரியன் அவர்களை விலையேறப் பெற்ற இரத்தினக் கற்களென்று எண்ணி, தன் இருதயத்தில் பதித்திருக்க வேண்டும். உதாரணமாக, "பென்யமீன் பீறுகிற ஓநாய்" (ஆதி. 49 : 27) என்று அவன் தகப்பனாகிய யாக்கோபு கூறுகிறான். இருப்பினும், பிரதான ஆசாரியன் அந்தக் கோத் திரத்தைச் சுகந்தி என்ற இரத்தினக் கல்லைப் போல விலையேறப் பெற்றதாக நினைத்து தன் இருதயத்தில் வைத்திருந்தான். இதனால் அக்கோத்திரமானது, "கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி,

அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார்" என்று தேவதாசனாகிய மோசேயினால் ஆசீர்வதிக்கப்படத் தக்கதாயிற்று (உபா. 33 : 12). அதுபோல சபையின் பொறுப்பான தேவ ஊழியர், சபையாரின் பெலவீனங்களைச் சுமந்து அவர்களை நேசிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டுச் சபையின் தேவ ஊழியர் சபையாரைப் பகுத்தறிந்து, நிதானித்து, அவர்களை சுமந்து செல்வதையே இந்த 'நியாயவிதி மார்ப்பதக்கம்' வெளிப்படுத்துகிறது.

நியாயவிதி என்பது புதிய ஏற்பாட்டில் நியாயம் விதித்து தண்டனை கொடுப்பதை அல்ல, பகுத்தறிதலையே (discernment) குறிக்கிறது. அதனாலேயே, "உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் (judgment) இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும் ... வேண்டுதல் செய்கிறேன்" (பிலி. 1 : 9, 11) என அப். பவுல் கூறுகிறார். இவ்விதம் பகுத்தறிவதினால், சபையாரிலுள்ள பெலவீனங்களினிமித்தம் கசப்பு உண்டாகி, அவர்கள் மீதுள்ள அன்பு குறைந்து போகாமல், அதில் தேவ ஊழியர் அதிகமதிகமாய்ப் பெருக வேண்டும். இவ்வாறு சபையின் நிலையைப் பகுத்தறியும் தேவ ஊழியர் மாத்திரமே உத்தமமானவைகளை ஏற்றுக்கொள்வார்கள் என்பதையும், அவர்களுக்கு மாத்திரமே அந்த ஆத்துமாக்களைப் பூரணத்துக்கு வழிநடத்துவதற்கான வெளிப்படுத்தல் கிடைக்கும் என்பதையும் இந்த நியாயவிதி மார்ப்பதக்கமும், ஊரீமும் தும்மீமும் வெளிப்படுத்துகின்றன. இவை உத்தரவாதமான ஊழியக்காரருக்குரிய ஆவிக்குரிய வஸ்திரங்களாகும்.

பழைய ஏற்பாட்டில் மார்ப்பதக்கம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, புதிய ஏற்பாட்டில் நீதியென்னும் மார்க்கவசத்தைக் குறிக்கிறது என்றும், அது விசுவாசமும் அன்பும் சேர்ந்து கிரியை செய்வதினால் உண்டாகிறது என்றும் நாம் அறிந்திருக்கிறோம் (எபே. 6 : 14 ; I தெச. 5 : 8). உத்தரவாதமான தேவ ஊழியராகிய சபையின் நடத்திப்புக்காரர் தேவநீதியின் இரண்டு பக்கங்களாகிய

விசுவாசத்தையும் அன்பையும் தரித்திருப்பதால், தங்களுக்கு விரோதமாய் வரும் பிசாசின் போராட்டத்தில் தங்களைப் பாது காத்துக்கொள்ளுகிறார்கள் என்றும், அவர்கள் தேவனுடைய சபையைத் தங்கள் ஊழியத்தினால் பூரணத்துக்குக் கொண்டு செல்லக் கூடும் என விசுவாசித்து, சபையை அன்புடன் சுமக்கிற வர்களாய் இருக்க வேண்டுமென்றும் இவைகளினால் நாம் விளங்கிக்கொள்ளுகிறோம்.

இந்த மார்ப்பதக்கத்தில் ஊரீம் தும்மீம் என்பவை இருந்தன. தேவனுடைய வலதுகரத்திலிருந்து அக்கினிமயமான பிரமாணம் புறப்பட்டது என்று நாம் வாசிக்கிறோம் (உபா. 33 : 2). அந்தப் பிரமாணம் பிரதான ஆசாரியன் மூலம் வெளிப்பட்டது. இப் படியே புதிய ஏற்பாட்டிலும் அப்போஸ்தலருடைய உபதேச மானது கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆசீர்வாதத்தையும், கீழ்ப்படியாத வர்களுக்கு மரணத்தையும் கொடுக்கிறது என்று நாம் வாசிக் கிறோம் (II கொரி. 2 : 16). ஊரீம் 'வெளிச்சத்தையும்', தும்மீம் 'பூரணத்தையும்' குறிக்கின்றன.

ஏபோத்தும் நியாயவிதி மார்ப்பதக்கமும் ஒரே விதமான நூல்களினால் செய்யப்பட்டிருந்தது, சபையானது உத்தமமானவை களை அங்கீகரித்தால் மட்டுமே கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி யின் அளவை அடைய முடியும் என்பதை வெளிப்படுத்துகிறது. மார்ப்பதக்கம் சதுரமாயிருப்பது - புதிய ஏற்பாட்டின் சபையானது முழு உலகத்துக்கும் உரியது என்பதையும், அது இரட்டையா யிருப்பது - யூதரும் புறஜாதியாரும் ஒரே சபைக்குள் கொண்டு வரப்படுவதையும் காட்டுகிறது.

நியாயவிதி மார்ப்பதக்கம் ஏபோத்திலிருந்து நீங்காதபடிக்கு அது அதின் ***வளையங்களால்*** ஏபோத்து வளையங்களோடே இளநீல நாடாவினால் கட்டப்பட்டிருந்தது. இந்த மார்ப்பதக்கம் ஏபோத்தை விட்டு விலகாமல் ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாக இருக்கும்படி வைக்கப்பட்டது (யாத். 28 : 26 - 28). தன்

சபையின் நிலைவரத்தைப் பகுத்தறிந்து நாளுக்கு நாள் அன்பில் பெருகி சபையை நடத்தும் ஒரு தேவ ஊழியனுக்கு மாத்திரமே அதிகாரமும் வல்லமையும் உண்டாகும் என்பதையும், அப்படிச் செய்வதினாலேயே தேவஜனங்கள் தேவ பெலத்தில் பாது காக்கப்படக் கூடும் என்பதையும் இது காண்பிக்கிறது.

**(x) இரண்டு கோமேதகக் கற்கள்** (யாத். 28 : 9 - 12):

ஆரோன் கர்த்தருக்கு முன்பாகத் தன் இரண்டு தோள் களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை ஞாபகக் குறியாகச் சுமந்து வரும்படியாக இரண்டு கோமேதகக் கற்களை ஏபோத்துத் தோள்களின்மேல் வைக்க வேண்டும் என நாம் வாசிக்கிறோம் (யாத். 28 : 12). இரண்டு கோமேதகக் கற்களில் இஸ்ரவேல் புத்திரரின் பன்னிரண்டு கோத்திரங்களின் நாமங்கள் அவர்கள் பிறந்த வரிசையின்படியே முத்திரை வெட்டாக வெட்டப்பட்டிருந்தது. அவர்களுடைய நாமங்களில் ஆறு நாமங்கள் ஒரு கல்லிலும், மற்ற ஆறு நாமங்கள் ஒரு கல்லிலு மாக வெட்டப்பட்டு, அவை பொன் குவளைகளில் பதிக்கப் பட்டு, ஏபோத்துத் தோள்களின்மேல் வைக்கப்பட்டிருந்தது. இது, கர்த்தருக்கு முன்பாக விலையேறப்பெற்ற கற்களைப் போல காணப்படும் தேவஜனங்கள் தங்கள் ஜீவியத்தில் பலவிதமான சோதனைகளையும் பரீட்சைகளையும் கடந்து செல்லும்போது, ஒரு தேவ ஊழியன், எவ்விதம் அவர்களுடைய பாரங்களைச் சுமக்கும் உத்தரவாதத்தை உடையவனாயிருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. அவன், தேவன் எவ்விதம் அவர்களைச் சுமக்கிறாரோ அவ்வண்ணமே அவர்களைச் சுமந்து (பிலி. 1 : 7), தேவன் எவ்விதம் அவர்களை விலையேறப்பெற்ற வர்களாக எண்ணுகிறாரோ, அவ்வண்ணமே அவர்களை விலை யேறப்பெற்றவர்களாக எண்ண வேண்டும். அப். பவுல், "இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது" (II கொரி. 11 : 28) என்று கூறுகிறார். சபையின் பாரங்களைச்

சுமப்பதில், சரீரப்பிரகாரமான பாடுகளுங்கூட உட்படுகின்றன. அப். பவுல் சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் சபைக்காகப் பாடுபட்டார்.

மேற்காணும் இரு கோமேதகக் கற்களும், நியாயவிதி மார்ப் பதக்கத்திலிருந்து புறப்படும் இரண்டு சங்கிலிகளினால் இணைக் கப்பட்டிருந்தன (யாத். 28 : 24, 25). பிரதான ஆசாரியன் பன்னிரண்டு கோத்திரங்களின் நிலைவரங்களையும் பகுத்தறிந்து (judgment), அவர்கள் தேவசமுகத்தில் அங்கீகரிக்கப்படும்படி அவர்களைத் தன்னுடைய தோளினால் சுமக்க வேண்டியதாயிருந்தது (வச. 12). இந்தச் சங்கிலிகள், தேவ ஊழியருக்கு ஜனங்களுடைய நிலை வரத்தைக் குறித்து இருக்க வேண்டிய உணர்வையும், அவர் களுக்காக அவர்கள் ஏறெடுக்க வேண்டிய ஜெபத்தையும், அவர் களை அவர்கள் சுமப்பதற்குத் தேவையான அன்பையும் குறிக் கிறது. அப். பவுல் தான் சபையாருக்காக இடைவிடாமல் ஸ்தோத் திரம்பண்ணி, தன் ஜெபங்களில் அவர்களை நினைத்து, எப் போதும் அவர்களுக்காக வேண்டுதல் செய்ததாகக் கூறுகிறார் (எபே. 1 : 16 ; கொலோ. 1 : 5).

மார்ப்பதக்கத்தில் லேவியின் பெயர் இருக்கவில்லை என்பதையும், தோளில் அவன் பெயர் இருந்ததென்பதையும் காண்க. லேவி இஸ்ரவேலரின் முதற்பேறானவர்களுக்குப் பதி லாகக் கர்த்தருடையவனாய் விசேஷமாகத் தெரிந்துகொள்ளப் பட்டபடியினாலே அவன் மற்றவர்களோடு சேர்த்து நியாயந் தீர்க்கப்படவோ, எண்ணப்படவோ வேண்டியவனல்ல என்று காண்பிப்பதற்காக நியாயவிதி மார்ப்பதக்கத்தில் அவனுடைய பெயர் பதிக்கப்படவில்லை (எண். 2 : 33). ஆனால், அவனுடைய அழைப்பின்படியுள்ள ஊழியம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அவ னுடைய நாமம் பிரதான ஆசாரியனின் தோளின்மேல் இருக்க வேண்டும். இது முதற்பேறானவர்களான பரிசுத்தவான்கள், உத்தர வாதமுள்ள தேவ ஊழியர்களுடைய ஜெபத்தினால் தாங்கப்பட்டு, தங்கள் அழைப்பில் பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதை வெளிப் படுத்துகிறது.

பரிசுத்த வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்துவந்த ஒரு பிரதான ஆசாரியனுடைய தோற்றமானது, ஒரு தேவ ஊழியன் சபையைத் தன்னுடைய நெற்றியில் சுமக்க வேண்டியவன் என்பதையும், தன் தோள்களின் மேல் சுமக்க வேண்டியவன் என்பதையும், தன் இருதயத்தில் சுமக்க வேண்டியவன் என்பதையும் வெளிப்படுத்தி, அவனுடைய அழைப்பின் மேன்மையைக் காண்பிக்கிறது. பிர்தான ஆசாரியன் தரித்திருந்த வஸ்திரங்கள் 'பரிசுத்த வஸ்திரங்கள்' என்று அழைக் கப்பட்டன (யாத். 28 : 2). இவைகளில் முதல் ஐந்து வஸ்திரங்களும், அவன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கும்போது தரித்துக் கொள்ளவேண்டியவையாயிருந்தன. மற்ற ஐந்து வஸ்திரங்களும் 364 நாட்களும் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்வதற்காக அவன் முந்தின வஸ்திரங்களுடன் சேர்த்து அணிய வேண்டியவையா யிருந்தன. வெளியே அணியப்பட்ட வஸ்திரங்கள் அவனுக்கு அலங்காரமாய் இருந்ததினால் அவை 'அலங்கார வஸ்திரங்கள்' என்றும் அழைக்கப்பட்டன. ஆனால், "உன் சகோதரனாகிய ஆரோனுக்கு, மகிமையும் அலங்காரமுமாய் இருக்கும்பொருட்டு, பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணுவாயாக" (யாத். 28 : 2) என்று கர்த்தர் கூறியிருப்பதால், ஆவிக்குரிய பிரகாரமாக அப்பத்து வஸ்திரங்களையுமே அலங்கார வஸ்திரங்களென்றும் மகிமையின் வஸ்திரங்களென்றும் நாம் விளங்கிக்கொள்ளலாம். ஏனென்றால் கர்த்தருடைய ஊழியத்தைக் குறித்து அப். பவுல், 'மகிமையின் ஊழியம்' (II கொரி. 3 : 8) என்றும், நம்முடைய ஜீவியத்தைக் குறித்து, "அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமை யடைந்து மறுரூபப்படுகிறோம்" (வச. 18) என்றும், கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் சபையைக் குறித்து, "பரிசுத்த மும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபை" (எபே. 5 : 27) என்றும் கூறுகிறார். சங்கீதக்காரனும், "பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்" (சங். 96 : 9) என்று குறிப்பிடு வதில், பரிசுத்தத்தை 'அலங்காரம்' என்று குறிப்பிடுகிறான்.

ஆதலால், பிரதான ஆசாரியனின் வஸ்திரங்கள் அனைத்துமே மகிமையும் அலங்காரமுமாய் இருந்தன என்று நாம் சொல்வது பிழையாகாது.

## 3. அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்படுதல்:

மோசே, பிரதான ஆசாரியனுக்கு மேற்கூறப்பட்டுள்ள மகிமையும் அலங்காரமுமான பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, அபிஷேக தைலத்தை எடுத்து முதலாவது கூடாரத்தையும் அதன் பணிமுட்டுகளையும் அபிஷேகம் பண்ணினான்; பின்பு, பிரதான ஆசாரியனையும் அவனுடைய குமாரரையும் அதே தைலத்தினால் அபிஷேகம்பண்ணினான் (யாத். 40 : 12 - 16 ; லேவி. 8 :10 - 13). இது, அபிஷேகம்பண்ணப்பட்ட சபைக்கு ஊழியஞ்செய்வதற்கு அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியனே தகுதியுள்ளவன் என்பதைக் காண்பிக்கிறது. தண்ணீரில் ஸ்நானம்பண்ணி ஆசாரிய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்ட ஆசாரியனின் சிரசின் மேல் வார்க்கப்படும் இந்த அபிஷேக தைலமானது, தண்ணீர் ஞானஸ்நானத்திற்குப் பின் ஒருவர் பெற்றுக்கொள்ளும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறிக்கிறது (லூக்கா 4 : 18 ; எபி. 1 : 9). அபிஷேகம் பெற்றவர்கள் மாத்திரமே கர்த்தருடைய ஊழியஞ்செய்யத் தகுதியுள்ளவர்கள் என்றும், அந்த அபிஷேகம் தேவஜனங்களைக் கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப் படுவதற்குத் தகுதியுள்ளவர்களாக்குகிறது என்றும் இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்ளுகிறோம்.

"மேன்மையான சுகந்தவர்க்கங்களாகிய சுத்தமான வெள்ளைப் போளத்தில் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி ஐந்நூறு சேக்கல் இடையையும், சுகந்த கருவாப்பட்டையிலே அதில் பாதியாகிய இருநூற்று ஐம்பது சேக்கல் இடையையும், சுகந்த வசம்பில் இருநூற்று ஐம்பது சேக்கல் இடையையும், இலவங்கப்பட்டையில் ஐந்நூறு சேக்கல் இடையையும், ஒலிவ எண்ணெயில் ஒரு குடம் எண்ணெயையும் எடுத்து, அதனால், பரிமள தைலக்காரன் செய்வதுபோல, கூட்டப்பட்ட பரிமளதைலமாகிய சுத்தமான

அபிஷேக தைலத்தை உண்டுபண்ணுவாயாக; அது பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கக்கடவது" (யாத். 30 : 23 - 25).

அபிஷேக தைலம் மேற்கண்ட ஐந்து பொருட்களைக் கொண்டு செய்யப்பட்டது. இவை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் ஒரு தேவபிள்ளை பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களைக் குறிக்கின்றன.

*1. வெள்ளைப்போளம்:* இது அரேபியாவிலும் கிழக்கு ஆப்பிரிக்காவிலும் வளரும் குட்டையான, முட்களுள்ள, சொர சொரப்பான, காசித்தும்பை போன்ற நறுமணமுள்ள ஒரு வகை மரத்தின் (balsam) தண்டுகளிலிருந்து வெளிவரும் பிசின் உலர வைக்கப்படுவதினால் கிடைக்கும் பொருளாகும். இதற்கு இலேசான நறுமணம் உண்டு. இதன் ருசி கசப்பானது. *சுத்தமான* வெள்ளைப்போளம் என்பது இங்கே, 'தாராளமாகப் பாய்ந்து வரக் கூடியது' என்று பொருள்படும். இதன் மிகச் சிறந்த வகை தானாகவே பட்டையிலிருந்து வெளிவருகிறது. தரம் குறைந்த வகையோ, பட்டையை உரிக்கும்போது நிறைவாகப் பாய்ந்து வழியும். அபிஷேக தைலம் தயாரிப்பதில் வெள்ளைப்போளம் சேர்க்கப்படுவது, பரிசுத்த ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்குள்ளிருந்து வேண்டுதல் செய்வதைக் குறிக்கிறது (ரோமர் 8 : 26). உபத்திரவங்களின் வழியாகச் செல்லும் போது, அல்லது நொறுக்கப்படும்போது, நம்மை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்காகவுங்கூட நம்மிலிருந்து ஜெபம் எழும்ப வேண்டும். மேலும் மனுஷருடைய மீட்புக்காகவும் ஆவியானவர் நமக்குள்ளிருந்து பாரத்துடன் வேண்டுதல் செய்கிறார்.

***2. சுகந்த கருவாப்பட்டை:*** இது ஸ்ரீலங்காவிலும், இந்து மகா சமுத்திரத்தின் சில தீவுகளிலும் வளரும் ஒரு மரத்தின் உள்ளான பட்டையாகும். இதுவும் அபிஷேக தைலம் செய்யப்படுவதற்கு உபயோகிக்கப்பட்டது. இது நாம் பரிசுத்த ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பெலப்படுத்தப்படுவதைக்

காண்பிக்கிறது (எபே. 3 : 16). அதன் மூலம் நம் இரகசிய ஜீவியத்தில் தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தப்படுகிறது.

***3. சுகந்த வசம்பு:*** இது வாசனையுள்ள, பிரம்பு வகையைச் சார்ந்த ஒரு தாவரத்தின் வேராகும். இது விலையுயர்ந்த சுகந்த வர்க்கமாகும். இது அரேபியாவிலும் இந்தியாவிலும் வளருகிறது. இதுவும் அபிஷேக தைலம் செய்யப்படுவதற்கு உபயோகிக்கப் பட்டது. நாம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின், கர்த்தராகிய இயேசுவின் தாழ்மையைப் பெற்றுக்கொள்வதற்கு ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். இந்தத் தாழ்மை கிறிஸ்துவின் மற்றெல்லாச் சுபாவங்களும் நம்மில் உருவாவதற்கு அடிப்படையானதாயிருக்கிறது.

வெள்ளைப்போளமும் இலவங்கப்பட்டையும் தனித்தனியே 500 சேக்கல் எடுக்கப்படும்போது, கருவாப்பட்டையும் வசம்பும் சேர்ந்து 500 சேக்கல் எடுக்கப்படுகின்றன. இது, பரிசுத்த ஆவி யானவரால் நம்மில் உண்டாகும் தாழ்மையின் வளர்ச்சியிலேயே நம் உள்ளான வல்லமை தங்கியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

***4. இலவங்கப்பட்டை:*** இது ஒருவகை புதர்ச் செடியின் பசையுள்ள பட்டையாகும். இது பார்ப்பதற்குக் கருவாப் பட்டையைப் போன்று இருக்கும். இது கிழக்கத்திய தேசங்களின் பெரும்பாலான பகுதிகளில் வளருகிறது. இப்பட்டையும் பொடியாக்கப்பட்டு அபிஷேக தைலம் செய்யப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இது நாம் பரிசுத்த ஆவியானவராலே சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுவதைக் காட்டுகிறது (I பேதுரு 1 : 2 ; I தெச. 5 : 23).

***5. ஒரு குடம் ஒலிவ எண்ணெய்:*** மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்திலும் சாலொமோனின் தேவாலயத்திலும் சில பொருட்கள் செய்யப்படுவதில் ஒலிவ மரம் பெரும் பங்கு வகித்தது. கிழக்கத்திய நாடுகளில், ஒலிவ மரமானது அழகு, பெலன், தெய்வீக ஆசீர்வாதம், செழிப்பு, நட்பு, சமாதானம் இவற்றின்

சின்னமாகக் கருதப்படுகிறது. ஒலிவப் பழத்திலிருந்து எடுக்கப்படும் ஒலிவ எண்ணெய் அதனுடைய கொழுமையைக் குறிக்கிறது. விழிப்புள்ள ஜீவியத்தின் மூலமாகவும் தியானத்தின் மூலமாகவும் ஒருவரின் ஆத்துமா செழிப்பானதாய் மாற்றப்படுவதை இது குறிக்கிறது (சங். 63 : 5). ஒலிவ எண்ணெய் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் கிடைக்கும் சந்தோஷத்தை வெளிப்படுத்துவதினால், இந்த அபிஷேகம் 'ஆனந்த தைலம்' என அழைக்கப்படுகிறது (எபி. 1 : 9).

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் நாம் பெற்றுக்கொள்ளும் சந்தோஷமானது எல்லாவித உபத்திரவங்களிலும் நாம் சந்தோஷமாயிருப்பதற்கு நமக்கு உதவி செய்கிறது. கர்த்தருக்குள் எப்பொழுதும் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்துக்குள் இருப்பதினாலேயே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு ஜெபம்பண்ணுவதற்கு நமக்குக் கிருபை கிடைக்கிறது. இந்தச் சந்தோஷத்தினாலேயே நம்மில் தாழ்மையும் வல்லமையும் பாதுகாக்கப்படுகின்றன. இந்தச் சந்தோஷம் நமக்குள் எப்பொழுதும் கிரியை செய்துகொண்டிருந்தால் மாத்திரமே நாம் பரிசுத்தமாக்கப்படக் கூடும்.

அபிஷேக தைலமானது மனித சரீரத்தின் மேல் வார்க்கப்படலாகாது (யாத். 30 : 32, 33). இதனாலேயே அது ஆரோனுடைய சரீரத்தின் மேல் ஊற்றப்படாமல், பாகை தரிக்கப்பட்ட அவனுடைய தலையின் மேல் ஊற்றப்பட்டு, அவனது தாடியில் வடிந்து, அங்கிகளின்மேல் இறங்குகிறது (சங். 133 : 2). அபிஷேகம் பண்ணப்படுவதற்கு முன்பு ஆரோன் தண்ணீரில் ஸ்நானம் பண்ணி, ஆசாரிய வஸ்திரம் தரித்துக்கொண்டது போல, புதிய ஏற்பாட்டிலும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக ஒவ்வொருவரும் மனந்திரும்பி, தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்கள் *விசுவாசத்தினால்* தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். இவர்கள்

யூதர் கிரேக்கர், அடிமை சுயாதீனர் போன்ற பாகுபாடுகளுள்ள மனுஷரல்ல (கலா. 3 : 26 - 28). இவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டு, ஆவியானவரால் நடத்தப்படுவதின் மூலம் தேவபுத்திரராகிறார்கள் (ரோமர் 8 : 14, 15). இவ்விதம் பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு தங்கள் உள்ளங்களில் ஊற்றப்பட்ட வர்கள் மத்தியிலிருந்து, ஆரோனைப் போல தேவனுடைய கனமான ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டவர்களான ஒரு சாரார் புதிய ஏற்பாட்டு ஊழியஞ்செய்யத் தகுதியுள்ளவர்களா கிறார்கள். கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப் படும்படியாக இவ்விரு சாராரையும் பரிசுத்த ஆவியானவரே ஆயத்தப்படுத்தி, தகுதிப்படுத்துகிறார். கர்த்தருடைய வருகையில் இவர்கள் தேவபுத்திரராக வெளிப்படுவார்கள் (வச. 19).

**4. பிரதிஷ்டைக்கான பலிகளைச் செலுத்துதல்:**

ஆரோன் ஆசாரிய வஸ்திரங்கள் தரிப்பிக்கப்பட்டு அபிஷேகம்பண்ணப்பட்ட பின் பிரதானமாக மூன்று பலிகள் செலுத்தப்பட்டன.

**1. பாவநிவாரண பலி:**

ஆசாரியப் பிரதிஷ்டையின்போது பாவ நிவாரண பலி யாக ஒரு காளை கொண்டுவரப்பட்டது (லேவி. 8 : 14 - 17). இந்தக் காளையின் மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கை களை வைத்து, தங்கள் ஆசாரிய ஊழியத்துக்குரிய அக்கிரமங் களை அதின் மேல் சுமத்தினார்கள். அதன் பின் அந்தக் காளை கொல்லப்பட்டு, அதன் இரத்தம் பலிபீடத்தின் கொம்புகளின் மேல் சுற்றிலும் பூசப்பட்டு, மற்ற இரத்தம் பலிபீடத்தின் அடியில் ஊற்றப்பட்டது. இது, ஒரு தேவ ஊழியன் கர்த்தருடைய ஊழி யத்தில் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் தன்னை முற்றிலும் ஒப்படைப்பதைக் குறிக்கிறது. பலிபீடத்தின் மேல் மிருகத்தின் கொழுப்பும் மற்ற பகுதிகளும் தகனிக்கப்பட்டது, ஒரு தேவ ஊழியன் ஜெயஜீவியம் செய்கிறவன் என்பதை வெளிப் படுத்துகிறது. அவன் முழுவதுமாய்ப் பாவத்துக்கும் உலகத்துக்கும்

மரித்தவனே. அதன் மாம்சம் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக் கப்பட்டது. 'பாளயத்துக்குப் புறம்பே' என்பது, அவன் கிறிஸ்து வோடு சேர்ந்து பாடுகளையும் நிந்தைகளையும் அனுபவிப்பதைக் காட்டுகிறது (எபி. 13 : 11 - 13). மிருகத்தின் மாம்சம் சுட்டெரிக்கப் பட்டு சாம்பலாக்கப்படுவது, மற்றவர்களுடைய அக்கிரமத்தைச் சுமக்கும் ஒரு தேவ ஊழியன் அதன் மூலம் எவ்விதம் பரிசுத்த மாக்கப்படுகிறான் என்பதைக் குறிக்கிறது. ஆரோனும் அவ னுடைய குமாரரும் தங்களுக்காக மாத்திரமல்ல, சபைக்காகவும் பாவநிவாரணம் செய்கிறார்கள். இவ்வித ஊழியத்தின் வாயிலாகவே ஊழியம் செய்கிறவர்களும் ஊழியம் செய்யப்படுகிறவர்களும் பரிசுத்தமாக்கப்பட்டு, கர்த்தருடைய இரகசிய வருகைக்குத் தகுதி யாக்கப்படுகிறார்கள்.

**2. சர்வாங்க தகனபலி:**

ஆசாரியப் பிரதிஷ்டையில் சர்வாங்க தகனபலிக்காக ஒரு ஆட்டுக்கடா கொண்டுவரப்பட்டது (லேவி. 8 : 18 - 21). அது சந்துசந்தாகத் துண்டிக்கப்பட்டு, முழுவதுமாய்ப் பலிபீடத்தின் மேல் சர்வாங்க தகனபலியாகத் தகனிக்கப்பட்டது. ஒரு தேவ ஊழியன் பரிசுத்த ஆவியினால் நிறைந்து தன் சகல அவயவங் களையும் கர்த்தருக்காகப் பலியாக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பதை இது காட்டுகிறது. பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட சாம்பலானது முதலில் பலிபீடத்தின் பக்கத்தில் கொட்டப்பட்டு, பின்பு பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்தில் கொட்டப் படுகிறது (லேவி. 6 : 10, 11). இது பரிசுத்த ஆவியின் அக்கினி யினால் சுத்திகரிக்கப்படும் ஒரு தேவ ஊழியனின் சாட்சியின் ஜீவியத்தை வெளிப்படுத்துகிறது. முன்பு சபைக்குள்ளும் பின்பு வெளி உலகத்திலும் நாம் சாட்சிகளாக வேண்டும். "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலே மிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார் (அப். 1 : 8).

**(3) பிரதிஷ்டையின் ஆட்டுக்கடா:**

ஆசாரியப் பிரதிஷ்டையின்போது பிரதிஷ்டைப்படுத்துவதற்கென மற்றொரு ஆட்டுக்கடா கொண்டுவரப்பட்டது (லேவி. 8 : 22 - 29). இந்த ஆட்டுக்கடா அடிக்கப்பட்டு, அதனுடைய இரத்தத்தில் கொஞ்சம், ஆரோன், அவன் குமாரர் ஆகியோரின் வலதுகாதின் மடலிலும், வலதுகையின் பெருவிரலிலும், வலது காலின் பெருவிரலிலும் பூசப்பட்டது. மேலும் அதின் இரத்தம் பலிபீடத்தின் மேல் சுற்றிலும் தெளிக்கப்பட்டது. இங்கே *வலது காதின் மடலில்* இரத்தம் பூசப்படுதல், ஒரு தேவ ஊழியனின் செவிகள் பூரணமாய்க் கர்த்தருடைய சத்தம் கேட்கும்படி ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும், அவன் முற்றிலும் பிரதிஷ்டை பண்ணப்பட்டவனாய், எல்லாவற்றிலும் கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடுக்கிறவனாயிருக்க வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகிறது. *வலதுகையின் பெருவிரலில்* இரத்தம் பூசப்படுதல், ஒரு தேவ ஊழியன் தன் சொந்தக் கிரியைகளுக்கும் சொந்தத் திட்டங்களுக்கும் மரித்து, கர்த்தருடைய சித்தம் மாத்திரம் செய்யும்படி தன்னை ஒப்புக்கொடுப்பதைக் காட்டுகிறது. *வலது காலின் பெருவிரலில்* இரத்தம் பூசப்படுதல், கர்த்தருடைய சித்தத்தின்படி நடக்கும்படியாக ஒரு தேவ ஊழியனின் கால்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதையும், அவன் தன் சொந்த பெலத்துக்கு மரித்திருக்க வேண்டும் என்பதையும் காட்டுகிறது. அதனாலேயே "அவர் ... வீரனுடைய கால்களில் பிரியப்படார்" (சங். 147 : 10) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆதலால் எந்தக் காரியத்தையும் செய்யும் முன்பு அவன் தன் சொந்த ஞானத்தையோ, மாம்ச பெலத்தையோ சார்ந்துகொள்ளாமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று அறிந்து அதையே செய்ய வேண்டும். கிறிஸ்துவே அவனுக்குத் தலையாயிருக்கிறார். ஆகவே அவராலேயே அவன் நடத்தப்பட வேண்டும் (கொலோ. 1 : 18, 19). அவனுடைய பெலன் கிறிஸ்துவிலேயே தங்கியிருக்கிறது (I கொரி. 1 : 24 ; II கொரி. 10 : 4, 5). தேவனால் உண்டாயிராத வல்லமையையோ, அறிவையோ அவன் கர்த்தரின் ஊழியத்தில் உபயோகிக்கலாகாது.

ஆரோன் லேவி குடும்பத்தில் பிறந்து, கர்த்தருடைய ஊழியத்துக்காக வேறுபிரிக்கப்பட்டு, பூரண பிரதிஷ்டையுள்ள வனாக இருந்தபோதிலும், அவன் கர்த்தருடைய சத்தம் கேட்டு அவருடைய சித்தம் செய்ய இன்னும் அதிகமாய்த் தன்னைப் பூரணமாய் ஒப்புக்கொடுக்க வேண்டியதாயிருந்தது. அப்படியே புதிய ஏற்பாட்டுத் தேவ ஊழியனும் தன்னுடைய மாம்ச சம்பந்தமானவர்களையெல்லாம் வெறுத்து, தனக்குண்டாயிருந்த எல்லாவற்றையும் விட்டு, பிரதிஷ்டை பண்ணப்பட்டவனாயி ருந்தாலும் (லூக்கா 14 : 26), தன்னுடைய சிந்தைகளையும் கிரியை களையும் பெலத்தையும் பூரணமாய்க் கர்த்தருக்காகப் பிரதிஷ்டை பண்ணினவனாய் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் மாத்திரமே அவனுடைய ஊழியம் ஆசீர்வதிக்கப்படும்.

அபிஷேக தைலமும் பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவின் இரத்தமும், ஆரோன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும், அவன் குமாரர்மேலும் அவர்களுடைய வஸ்திரங்கள்மேலும் தெளிக்கப் பட்டன (லேவி. 8 : 30). இது அபிஷேகதைலத்தினால் வேறு பிரிக்கப்பட்டிருக்கும் ஒரு தேவ ஊழியன், கிறிஸ்துவின் இரத்தத் தினாலும் வேறுபிரிக்கப்பட வேண்டுமென்பதை வெளிப்படுத்து கிறது (எபி. 13 : 12). ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே இரத்தம் தெளிக்கப்படுதலுக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசி களின் கூட்டத்திற்குத் தலைவனாயிருக்கும் ஒரு தேவ ஊழிய னுக்கு ஆரோன் நிழலாட்டமாயிருக்கிறான் (I பேதுரு 1 : 2). ஆதலால் கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிறவன், முற்றிலுமாய்க் கர்த்தருக்கென்று வேறுபிரிக்கப்பட்டவனாய் இருக்க வேண்டும்.

**அசைவாட்டும் பலி:** ஆசாரியப் பிரதிஷ்டையின்போது செலுத்தப்பட்ட இந்தப் பலி, ஒரு தேவ ஊழியன் எந்த வித்தி யாசமுமின்றி முழு உலகத்தின் இரட்சிப்புக்காகவும் ஜீவிக்கும் பிரதிஷ்டையை வெளிப்படுத்துகிறது.

**ஏறெடுத்துப் படைக்கும் பலி:** ஆசாரியப் பிரதிஷ்டை யின்போது செலுத்தப்படும்படி தேவன் கட்டளையிட்டிருந்த

இந்தப் பலியானது (யாத். 29 : 27 , 28), ஒரு தேவ ஊழியன் கர்த்தருடைய மகிமைக்காக மாத்திரம் பிரதிஷ்டைபண்ணப்பட்டவனாக, கர்த்தருக்காக ஜீவிப்பதையும் அவருக்காக ஊழியஞ் செய்வதையும் காட்டுகிறது (II கொரி. 5 : 15). ஆசாரியனுடைய பிரதிஷ்டையின் ஏழு நாட்களும் தினமும் காலையிலும் மாலையிலும் பலி செலுத்தப்பட வேண்டும். இதுவே நித்திய சர்வாங்க தகனபலி எனப்படும் (யாத். 29 : 42). ஏழு நாள் என்பது பூரணத்தைக் காட்டுகிறது. ஆதலால் இந்த ஏழு நாள் பிரதிஷ்டை என்பது, ஒரு தேவ ஊழியன் தன்னுடைய பிரதிஷ்டையைத் தன் ஜீவியத்தின் கடைசி பரியந்தமும் காத்துக்கொள்ள வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. அவன் ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் ஜெபத்தில் தன்னைப் புதிதாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, ஆவியினால் நிறைந்து ஜீவிப்பது, அவன் தன்னுடைய ஊழியத்தில் தன்னை அறியாமலேயே வரக்கூடிய ஆவிக்குரிய காரியங்களைப் பற்றிய பெருமை, தன்னைப் பற்றிய மேன்மைபாராட்டல்கள் போன்றவற்றிலிருந்து தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ள அவனுக்கு உதவி செய்கிறது. அவ்விதமின்றி இவற்றிற்குத் தங்கள் ஜீவியத்தில் இடங்கொடுக்கிறவர்கள் தங்களுக்காகவே சபையைக் கட்டி, ஏராளமான ஆத்துமாக்கள் கிடைக்கும்போது பெருமையடைந்து அழிந்துபோவார்கள். இது சம்பவியாமலிருக்கும்படி இந்தப் பிரதிஷ்டையின் ஜீவியம் தேவ ஊழியருக்கு அவசியமாயிருக்கிறது. இப்படிப் பிரதிஷ்டைபண்ணி கர்த்தருடைய ஒழுங்கின்படியும் நியமங்களின்படியும் ஜீவிப்பதினாலேயே அவர்கள் கர்த்தருடைய ஊழியர் என்று மற்றவர்கள் அறியத்தக்க விதத்தில் அவர்களுடைய ஊழியம் ஆசீர்வதிக்கப்படும். ஒவ்வொரு நாளும் இப்படி ஒப்புக்கொடுத்து ஜீவிப்பதினால், கர்த்தர் அவர்களோடு பேசி, அவர்களைக்கொண்டு தமது மகிமையான ஊழியத்தைச் செய்கிறார்.

அதிகாரம் 13

# பலிகள்

கர்த்தராகிய தேவன் ஆசரிப்புக் கூடாரத்துக்குரிய பிரமாணங்களை மோசேக்குக் கொடுத்தபோது, ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்தில் முதலாவது அதன் வாசலுக்கு முன்பாகப் பலிபீடத்தை வைக்கும்படி கட்டளையிட்டார். அது, பலிபீடத்திற்கடுத்த ஊழியமே எல்லா ஊழியங்களிலும் முதன்மையானது என்பதை வெளிப்படுத்துகிறது. எனவே, ஆசரிப்புக் கூடாரத்தில் இஸ்ரவேலர் செலுத்த வேண்டியதாயிருந்த பலிகளையும், அவற்றின் ஆவிக்குரிய கருத்துக்களையும் பற்றி இங்கு நாம் ஆராய்வோம்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் பலிகளின் மூலமாகவே மனுஷன் தேவனோடு கிட்டிச் சேர்ந்தான். அதனால் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் சமாதானம் ஏற்பட்டது. பழைய ஏற்பாட்டின் பலிகள் புதிய ஏற்பாட்டின் ஆவிக்குரிய அனுபவங்களுக்கு நிழலாட்டமாய்ச் செலுத்தப்பட்டன. பலியின் சிந்தை முதலாவது தேவனிடத்திலேயே காணப்பட்டது. அதனாலேயே தேவன் திரித்துவராக வெளிப்பட்டார். உலகத்தோற்றத்துக்கு முன்பு, தேவனுக்கு ஒரு ஆசாரியர் இருந்தார் என்பதினால் இது விளங்கும். இவர் நாட்களின் துவக்கமில்லாத ஆசாரியர் ஆவார் (எபி. 7 : 1 - 3). திரித்துவ தேவன் பிதாவாகவும் குமாரனாகவும்

பரிசுத்த ஆவியானவராகவும் (ஆசாரியராகவும்) வெளிப்பட்ட போது, அன்பின் மூன்று பக்கங்கள் வெளிப்படுத்தப்பட்டன. எனினும் பலியின் சிந்தையே இவைகளுக்கெல்லாம் காரணமா யிருந்தது. உலகத்தோற்றமுதல் ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப் பட்டதினால், தேவனுக்குள் மறைந்திருந்த பலியின் சிந்தை, உலகத்தோற்றத்தில் வெளியாயிற்று. ஆட்டிக்குட்டியானவர் அடிக்கப்பட்டபடியினாலேயே அவர் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறானார்.

'பலி' என்ற வார்த்தையானது சாதாரணமாக 'இழந்து போவதை' வெளிப்படுத்துகிறதாயிருந்தாலும், கிறிஸ்துவின் பலி யினாலே சிருஷ்டிகள் உண்டாக்கப்பட்டபடியினால், இதில் சிருஷ்டிக்கப்படுதலும் உண்டென்பதை நாம் மறந்துபோகக் கூடாது. இதுவே நாம் கிறிஸ்துவில் காணும் பலியின் பிரமாணம் ஆகும். தேவனுக்குள் இந்தச் சித்தம் இருந்தபடியினால், மனுஷ னுடைய விழுகைக்குப் பின் அவனுக்குத் தோல் உடையை உண்டாக்கும்படி அவரால் ஒரு மிருகம் பலியாக்கப்பட்டபோது (ஆதி. 3 : 21), அது கிறிஸ்துவின் கல்வாரி பலிக்கு நிழலாட்ட மாயிற்று. இந்தச் சித்தமானது, ஆபேல், மற்றும் பல பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் எப்படி நிழலாட்டமாய்க் கிரியை செய்ததென்பதையும் நாம் வேதாகமத்தில் காண்கிறோம்.

ஆசரிப்புக் கூடாரத்தின் பலிபீடத்தில் செலுத்தப்பட்ட பலிகள் முதலாவது கிறிஸ்துவைக் காண்பிக்கின்றன. இரண்டாவது, இவை, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பூரணப்படுவதற்காகச் செலுத்தப்பட வேண்டிய ஆவிக்குரிய பலிகளைக் குறிக்கின்றன.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செலுத்தப்பட்டுவந்த பலி களைப் ***பிரதான பலிகள்*** என்றும், ***சிறிய பலிகள்*** என்றும் இரண்டாக நாம் வகையறுக்கலாம். 1. சர்வாங்க தகனபலி, 2. போஜன பலி, 3. சமாதான பலி, 4, பாவநிவாரண பலி, 5. குற்ற நிவாரண பலி ஆகியவை பிரதான பலிகளாகும். இவைகளுள்

சர்வாங்க தகனபலி, போஜன பலி, சமாதான பலி என்னும் மூன்று பலிகளும் கட்டாயமாக அல்ல, மனப்பூர்வமாகச் செலுத்தப்பட வேண்டியவையாயிருந்தன. இவை தேவனுக்கு நன்றியைத் தெரிவிப்பதற்காகவும், அவரைக் கனப்படுத்துவதற்காகவும் செலுத்தப்பட்டன. பாவநிவாரண பலியும், குற்ற நிவாரண பலியும் பாவநிவாரணத்துக்காகக் கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டியவையாயிருந்தன. 1. அசைவாட்டும் பலி, 2. ஏறெடுத்துப் படைக்கும் பலி, 3. பானபலி, 4. ஸ்தோத்திர பலி, 5. உற்சாக பலி ஆகியவை சிறிய பலிகளாகும்.

## பிரதான பலிகள்

இஸ்ரவேல் புத்திரர் பிரதானமாகச் செலுத்த வேண்டியதாயிருந்த ஐந்து பலிகளைக் குறித்தும் அவற்றின் ஆவிக்குரிய கருத்துக்களைக் குறித்தும் சுருக்கமாக நாம் கீழே காண்போம்:

### 1. சர்வாங்க தகனபலி

(லேவி. அதி. 1 ; 6 : 9 - 12)

சர்வாங்க தகனபலி மாடுகளிலிருந்தாவது, ஆடுகளிலிருந்தாவது, பறவைகளிலிருந்தாவது தெரிந்தெடுக்கப்பட்டுச் செலுத்தப்பட்டது. இப்பலியில், பலிப்பொருள் பூரணமாய்ச் சுட்டெரிக்கப்பட்டு, சாம்பலாக்கப்பட்டது.

கர்த்தராகிய இயேசு, நம்முடைய பாவங்களைச் சுமந்து, நமக்காகச் சர்வாங்க தகனபலியானார் (எபே. 5 : 2). ஒருவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளும்போது அவனுக்குள் சர்வாங்க தகனபலியின் அனுபவம் ஆரம்பமாகிறது.

சர்வாங்க தகனபலிக்காகக் கொண்டுவரப்பட்ட பலிப்பொருள் முழுவதுமாய்த் தகனிக்கப்பட்டதால் இது சர்வாங்க தகனபலி என்று அழைக்கப்பட்டது. அதைச் செலுத்துபவர்கள் தங்கள் நிலைவரத்துக்குத் தக்கதாய், காளை, செம்மறியாட்டுக்கடா, வெள்ளாட்டுக்கடா, காட்டுப்புறா அல்லது புறாக்குஞ்சு இவை

களில் ஒன்றைக் கொண்டு வர வேண்டும். இப்பிராணிகளும் பறவைகளும் சுத்தமானவையாயிருப்பினும், இவை விழுந்து போன மனுஷனுடைய சுபாவங்களை வெளிப்படுத்துகின்றன.

***காளை:*** இது பூமிக்குரிய ஜீவியம் செய்து, பூமிக்குரிய காரியங்களுக்காகவே உழைத்து, உலகத்திற்குரிய சிற்றின்பங்களை அனுபவிக்கிற மனுஷனுடைய மாம்ச சுபாவத்தை வெளிப் படுத்துகிறது (எசே. 39 : 18).

***செம்மறியாடு:*** இது மந்தை மந்தையாய் ஜீவிக்கிற ஒரு மிருகமாகும். தன்னுடைய ஜாதி, இனம் இவைகளை விட்டுப் பிரியாமல், தேசம், பாஷை முதலிய வித்தியாசங்களுக்கு அடிமைப்பட்டு, பூமிக்குரிய ஜீவியம் செய்யும் மனுஷரை இது காண்பிக்கிறது.

***வெள்ளாடு:*** இது மேய்ப்பனுடைய கட்டுப்பாட்டின் கீழ் இராமல் அங்கும் இங்கும் ஓடிச் செல்லும் சுபாவமுடைய மிருக மாகும். இது மனுஷனுக்குள்ளிருக்கும் கீழ்ப்படியாமையின் சுபாவத்தை வெளிப்படுத்துகிறது (சக. 10 : 2).

***காட்டுப் புறா:*** இது சுயாதீனமாய்ப் பறக்கும் ஒரு பறவை யாகும். இது சுயாதீன ஆவியுள்ள மனுஷரை வெளிப்படுத்து கிறது.

மேற்கூறப்பட்டுள்ள சுபாவங்கள் யாவும் பரிசுத்த ஆவி யின் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட வேண்டும்.

**பலி செலுத்தும் முறையும் அதின் ஆவிக்குரிய விளக்கமும்** (லேவி. 1 : 1 - 9, 14 - 17) :

***பலிமிருகத்தின் தலையின் மேல் கை வைத்தல்:*** இது, நமக்காகப் பாவமாக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுவின் மீது நம் முடைய பாவங்கள் சுமத்தப்பட்டதைக் குறிக்கிறது (ஏசாயா 53 : 6 ; II கொரி. 5 : 21).

***மிருகம் கொல்லப்படுதல்:*** எந்த மிருகத்தின் மீது ஒரு வனது பாவம் சுமத்தப்பட்டதோ அந்த மிருகம் அப்பாவிக்காகக் கொல்லப்பட்டது. பாவத்தின் சம்பளம் மரணமாயிருப்பதால் (ரோமர் 6 : 23), இது மனிதர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்த கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது (எபி. 2 : 9).

***இரத்தம் தெளிக்கப்படுதல்:*** பலிபீடத்தின் மேல் சுற்றிலும் இரத்தம் தெளிக்கப்படுதல் என்பது முழு உலகத்திலும் உள்ள தேவஜனங்களின் பரிசுத்தமாகுதலுக்காகச் சிந்தப்பட்ட கர்த்த ராகிய இயேசுவின் இரத்தத்தைக் காட்டுகிறது (எபி. 13 : 12).

***மிருகத்தின் தோலுரித்தல்:*** ஒரு மிருகத்தைத் தோலுரித்த பின்பு, அம்மிருகத்தின் நிறத்தைக் கண்டுபிடிக்க முடியாது. இது ஜாதி, நிறம், தேசம், பாஷை முதலிய எல்லா வித்தியாசங்களும் நம்மை விட்டு நீக்கப்படுவதைக் குறிக்கிறது (I கொரி. 12 : 13).

***சந்துசந்தாகத் துண்டித்தல்:*** இது நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் நாம் பிரதிஷ்டை செய்வதைக் காட்டுகிறது. அதன் மூலம், நாம் கர்த்தராகிய இயேசுவைப் போல அழகும் சௌந்தரியமும் அற்றவர்களாகிறோம் (ஏசாயா 53 : 2).

***குடல்களையும் தொடைகளையும் கழுவுதல்:*** தேவனுடைய வழிகளில் நடக்கும்படி, உள்ளான தீர்மானத்துடன் நம் சொந்த நினைவுகளையும் சொந்த வழிகளையும் விட்டுவிடுவதால் நம்மில் உண்டாகும் சுத்திகரிப்பை இது குறிக்கிறது (ஏசாயா 55 : 7, 8).

***அக்கினி போடுதல்:*** இது பரிசுத்த ஆவியின் பரிசுத்த மாக்கும் அக்கினியைக் காண்பிக்கிறது (ரோமர் 15 : 15).

***கொழுப்பையும் தலையையும் தகனித்தல்:*** 'கொழுப்பு' சுகஜீவியத்தை வெளிப்படுத்துகிறது; 'தலை' உலக ஞானத்தின் இருப்பிடமாயிருக்கிறது. இவை பரிசுத்த ஆவியின் அக்கினியி னாலே சுட்டெரிக்கப்பட வேண்டும்.

*அக்கினியின் மேல் கட்டைகளை அடுக்கி வைத்தல்:* கட்டைகள் அக்கினியின் மீது அடுக்கி வைக்கப்பட வேண்டும். இந்தக் கட்டைகளின் மேல் பலிமிருகத்தின் தலையையும் துண்டங்களையும் கொழுப்பையும் குடல்களையும் தொடைகளை யும் அடுக்கி வைத்துத் தகனிக்க வேண்டும். 'கட்டை' உபதே சத்தைக் காட்டுகிறது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒரு மனுஷனுடைய ஜீவியம், உபதேசத்தின் ஒழுங்குக்குள்ளும் கட்டுப்பாட்டின் கீழும் கொண்டுவரப்பட்டால் மாத்திரமே அவன் பரிசுத்த ஆவியினால் பூரணமாய்ப் பரிசுத்தமாக்கப்படுவான் என்பதை இது காட்டுகிறது.

*புறாவின் தலையைக் கிள்ளுதல்:* இது நம்மிலுள்ள சுயாதீன ஆவி, சுய சித்தம் முதலியன நீக்கப்படுவதைக் காண்பிக்கிறது.

*செட்டைகளுடன் பிளப்பது:* இது, தேவனுடைய வசனத் தால் நாம் நம்முடைய இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, நம் ஜீவியங்கள் தேவனுக்கு முன்பாக மறைவில்லாமல் திறந்து வைக்கப்படுவதைக் காண்பிக்கிறது (எபி. 4 : 12, 13).

*சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணம்:* இந்தப் பலி ஒவ்வொரு நாள் காலையும் செலுத்தப்பட்டு, பலிபீடத்தின் மேல் இராமுழுவதும் விடியற்காலம் மட்டும் எரிந்துகொண்டிருக்க வேண்டும் (லேவி. 6 : 9). 'விடியற்காலம்' என்பது கர்த்தருடைய வருகையைக் குறிக்கிறது (வெளி. 22 : 16 ; II பேதுரு 1 : 19). 'இராமுழுவதும் விடியற்காலம் மட்டும்' என்பது கர்த்தருடைய வருகை வரை சோதனைகளின் மத்தியிலுங்கூட, நாம் பரிசுத்த ஆவியினால் நிறைந்த, பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியத்தைப் பாதுகாத்துக்கொள்வதைக் காட்டுகிறது.

*சாம்பலைக் குறித்த பிரமாணம்:* ஆசாரியன் பலிபீடத்தின் மேல் அக்கினியில் எரிந்த சர்வாங்க தகனபலியின் சாம்பலை எடுத்து, பலிபீடத்தின் பக்கத்தில் கொட்டி, பின்பு தன் வஸ்திரங் களைக் கழற்றி, வேறு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தச்

சாம்பலைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய்ச் சுத்தமான ஒரு இடத்திலே கொட்ட வேண்டும் (லேவி. 6 : 10, 11). 'பலி பீடத்துக்குப் பக்கத்தில்' என்பது சபையையும், 'பாளயத் துக்குப் புறம்பே' என்பது வெளியுலகத்தையும் காட்டுகிறது (எபி. 13 : 10, 13). தன்னைப் பலியாகச் செலுத்தும் மனுஷன் இவ்விரு இடங்களிலும் கர்த்தருக்குச் சாட்சியாக இருக்க வேண்டும். எரிந்து சாம்பலாகுதல் பரிசுத்த ஆவியால் பரிசுத்தமாக்கப்பட்டு, சுய மில்லாத நிலைவரத்தை அடைவதைக் காட்டுகிறது.

சர்வாங்க தகனபலியே பலிபீடத்தில் முதலாவது வைக்கப் பட வேண்டிய பலியாகும். சர்வாங்க தகனபலியின் மேலேயே மற்ற பலிகளெல்லாம் வைக்கப்பட்டுத் தகனிக்கப்படுகின்றன. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல் ஒருவன் 'பலியின் ஜீவியம்' செய்ய முடியாது என்பதை இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்கிறோம். சர்வாங்க தகன பலியில் பலிப்பொருள் அக்கினி யில் முற்றிலுமாய் எரிந்து சாம்பலாக்கப்படுகிறது. அதுபோலவே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமாய் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும்.

**பலி செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள்:**

1. காலையிலும் மாலையிலும் நாடோறும் - ஒரு ஆட்டுக் குட்டி (லேவி. 6 : 12 ; எண். 28 : 3, 4).

2. ஆசாரியப் பிரதிஷ்டையில் - பிரதிஷ்டையின் ஆட்டுக் கடா (யாத். 29 : 15 - 18 ; லேவி. 8 : 18 - 21).

3. பாவநிவாரண பலியில் பெண்ணாட்டுக் குட்டியைக் கொண்டுவர சக்தியில்லாத ஒருவன் செலுத்த வேண்டியது - ஒரு காட்டுப் புறா அல்லது ஒரு புறாக்குஞ்சு (லேவி. 5 : 6, 7).

4. ஆசாரியப் பிரதிஷ்டை முடிந்து எட்டாம் நாளில் ஆரோன் செலுத்த வேண்டியது - ஒரு ஆட்டுக்கடா (லேவி. 9 : 2).

5. ஆசாரியப் பிரதிஷ்டை முடிந்து எட்டாம் நாளில் ஜனங்கள் செலுத்த வேண்டியது - ஒரு கன்றுக்குட்டி, ஒரு ஆட்டுக்குட்டி (லேவி. 9 : 3).

6. பிரசவித்த ஸ்திரீயின் சுத்திகரிப்புக்காக - ஒரு வயதுள்ள ஆட்டுக்குட்டி அல்லது ஒரு காட்டுப் புறா அல்லது ஒரு புறாக் குஞ்சு (லேவி. 12 : 6 - 8).

7. குஷ்டரோகியாயிருந்து சொஸ்தமானவனின் சுத்திகரிப்புக்காக - ஒரு ஆட்டுக்குட்டி அல்லது ஒரு காட்டுப்புறா அல்லது ஒரு புறாக்குஞ்சு (லேவி. 14 : 7, 10, 19, 20, 22, 31).

8. பிரமியம் நீங்கிச் சுத்தமானவன் செலுத்த வேண்டியது - ஒரு காட்டுப் புறா அல்லது ஒரு புறாக்குஞ்சு (லேவி. 15 : 13 - 15).

9. பாவநிவாரண நாளில் ஆரோனுக்காக - ஒரு ஆட்டுக்கடா (லேவி. 16 : 3).

10. பாவநிவாரண நாளில் சபையாருக்காக - ஒரு ஆட்டுக்கடா (லேவி. 16 : 5).

11. அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டைச் செலுத்தும் நாளில் - ஒரு வயதுள்ள பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டி (லேவி. 23 : 12).

12. அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டு செலுத்தப்பட்ட ஐம்பதாம் நாளில் இரண்டு அப்பங்களோடு சேர்த்து - ஒரு வயதுள்ள பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகள், ஒரு காளை, இரண்டு ஆட்டுக்கடாக்கள் (லேவி. 23 : 18).

13. நசரேயன் தீட்டுப்பட்டால் அவனுடைய சுத்திகரிப்புக்காக - ஒரு காட்டுப் புறா அல்லது ஒரு புறாக்குஞ்சு (எண். 6 : 10, 11).

14. நசரேய விரதங்காக்கும் ஒருவன் தன் விரத நாட்கள் நிறைவேறின பின் செலுத்த வேண்டியது - ஒரு வயதுள்ள பழுதற்ற ஆண் ஆட்டுக்குட்டி (எண். 6 : 13, 14).

15. பலிபீடத்தின் பிரதிஷ்டையின் பன்னிரண்டு நாட்களும் - ஒரு காளை, ஒரு ஆட்டுக் கடா, ஒரு வயதுள்ள ஒரு ஆட்டுக் குட்டி (எண். 7 : 15).

16. லேவியர் பிரதிஷ்டைபண்ணப்பட்டபோது - ஒரு காளை (எண். 8 : 12).

17. சபையார் கற்பனைகளின்படி செய்யாமல் தவறி நடந்தால் - ஒரு காளை (எண். 15 : 24).

18. ஏழாம் மாதம் எக்காளப் பண்டிகையில் - ஒரு காளை, ஒரு ஆட்டுக்கடா, ஒரு வயதுள்ள பழுதற்ற ஏழு ஆட்டுக் குட்டிகள் (எண். 29 : 2).

19. யுத்தத்துக்குப் போகுமுன் (I சாமு. 13 : 11, 12) – இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சவுல் தானாகப் பலி செலுத் தியது அவன் செய்த தவறாகும்.

## 2. போஜன பலி

(லேவி. அதி. 2 ; 6 : 14 - 23)

பிதாவின் சித்தம் செய்து அவருடைய கிரியையை முடிப்பதே தம்முடைய போஜனமாயிருக்கிறது என்று கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவான் 4 : 34 ; எபி. 10 : 7). பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற தேவபிள்ளைகள் ஒவ்வொரு வரும் தேவனுடைய சித்தம் செய்வதினால் போஜன பலியாக்கப் படுகிறார்கள். தேவனுடைய சித்தம் செய்வதினாலேயே நாம் கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட முடியும் (மத். 7 : 21 - 27).

போஜன பலி மகா பரிசுத்தமானது. இந்தப் போஜனத்தைப் புசித்தால் மாத்திரமே பரிசுத்தவான்கள் பூரணமாக்கப்பட முடியும். அதனாலேயே போஜன பலி ஆரோனையும் அவன் குமாரரை யும் சேரும் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆரோனும் அவன்

குமாரரும் அதைப் புசிக்கலாம் - பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்பவர்களும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பவர்களும் இதைப் புசிக்க வேண்டும். இதிலிருந்து தேவசித்தம் செய்கிற வர்களின் ஊழியமே விசேஷமானது என்பதையும், மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்குத் தேவசித்தம் செய்து பூரணப்பட வேண்டியது இன்றியமையாதது என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளலாம்.

**பலி செலுத்தும் முறையும் அதின் ஆவிக்குரிய விளக்கமும்** (லேவி. 2 : 1, 2):

***தானியம் மெல்லிய மாவாகும்வரை இடிக்கப்பட வேண்டும்:*** தானியம் இடிக்கப்படும்போது, கோதுமை மணிகள் யாவும் ஒன்று சேர்ந்து மெல்லிய மாவாவது போல, தேவசித்தம் செய்கிறவர்கள் தங்கள் சுயசித்தம் உடைக்கப்பட இடங்கொடுத்து, ஒன்றாகப் பாடுகள் அனுபவித்து (எபி. 11 : 25), முறுமுறுப்பும் தர்க்கிப்பும் இல்லாமல் (பிலி. 2 : 16) அவற்றைப் பொறுமையாய்ச் சகிக் கிறார்கள். நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருந் தாலும், தேவசித்தம் செய்கிற ஜீவியத்தின் மூலம் ஒன்றாக்கப்படு வதினால் மட்டுமே, கர்த்தருடைய நோக்கம் நம்மில் பூரணமாய் நிறைவேறும்.

***எண்ணெய்:*** மெல்லிய மாவுடன் எண்ணெய் சேர்க்கப் படும்போது அது பிசைந்த மாவாக ஒன்றாயிருப்பது போல, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற பரிசுத்தவான்கள், பிரதிஷ்டையின் ஜீவியத்தின் மூலம் தேவசித்தம் செய்யும்படி ஒன்றாக்கப்படுகின்றனர்.

***தூபவர்க்கம்:*** போஜன பலியில் தூபவர்க்கம் சேர்க்கப் படுகிறது. தூபம் என்பது இருதயத்தின் ஆழத்திலிருந்து உண்டாகும் நன்றியைக் காட்டுகிறது.

***ஒரு கைப்பிடி நிறைய பலிபீடத்தின்மேல் தகனித்தல்:*** ஒரு கைப்பிடி நிறைய என்பது தேவசித்தம் செய்யும்படி ஒருவன்

தன்னை முழு இருதயத்தோடும் ஒப்புக்கொடுப்பதைக் காண்பிக்கிறது. (ஒரு நபரின் இருதயத்தின் அளவும் அவரது கைப்பிடியின் அளவும் ஒன்றே என்று கூறப்படுகிறது). பலிபீடத்தின் மேல் அதைத் தகனிப்பது என்பது, நாம் நம்முடைய சுயசித்தத்தைப் பலியாக்குவதைக் குறிக்கிறது.

போஜனபலியில் **தேன்** சேர்க்கப்படக் கூடாது (லேவி. 2 : 11): போஜன பலியில் தேன், அதாவது, இனிப்பு சேர்க்கப்படக் கூடாது என்பது, ஒருவன் தேவசித்தம் செய்யும்போது, தன்னையோ, மற்றவர்களையோ பிரியப்படுத்த முடியாது என்பதைக் காண்பிக்கிறது.

போஜனபலி ***புளித்தமாவினால்*** செய்யப்படக் கூடாது (லேவி. 2 : 11): தேவசித்தம் செய்வதில் துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்த மாவோ, துர்ப்போதனை என்னும் புளித்த மாவோ காணப்படக் கூடாது (I கொரி. 5 : 8 ; மத். 16 : 12).

போஜனபலியில் ***உப்பு*** சேர்க்கப்பட வேண்டும் (லேவி. 2 : 13): போஜனபலியில் உப்பு சேர்த்தல், கர்த்தரோடும் பரிசுத்தவான்களோடும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் பாதுகாத்துக் கொண்டு, தேவகிருபையினால் தேவசித்தம் செய்வதைக் காண்பிக்கிறது (மாற்கு 9 : 50 ; கொலோ. 4 : 6).

*போஜன பலி வேறு பல விதங்களிலும் செலுத்தப்பட்டது. அவையாவன:*

1. அடுப்பில் பாகம்பண்ணப்படுதல் (லேவி. 2 : 4).
2. தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்படுதல் (லேவி. 2 : 5).
3. பொரிக்குஞ் சட்டியில் பாகம்பண்ணப்படுதல் (லேவி. 2 : 7).

இவைகள் தேவசித்தம் செய்கிறவர்களுக்கு வருகிற பலவிதமான உபத்திரவங்களையும் அக்கினி போன்ற பரீட்சைகளையும் காண்பிக்கின்றன.

பலி செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள்:

1. ஒவ்வொரு நாளும் (எண். 28 : 3, 5, 12, 13, 28).

2. நசரேய விரதம் முடிந்த பின் (எண். 6 : 13 - 17).

3. ஆசாரியனுக்காகச் செலுத்தப்படுதல் (புசிக்கப்படாமல் முழுவதும் தகனிக்கப்பட வேண்டும்) (லேவி. 6 : 23).

4. ஆசாரியப் பிரதிஷ்டை முடிந்து எட்டாம் நாளில் (லேவி. 9 : 1 - 4).

5. குஷ்டரோகியின் சுத்திகரிப்புக்காக (எண்ணெயில் பிசைந்த மெல்லிய மா) (லேவி. 14 : 7, 10).

6. முதற்பலனாகிய கதிர்க்கட்டு செலுத்தப்படும்போது (லேவி. 23 : 12, 13).

7. முதற்பலனாகிய கதிர்க்கட்டு செலுத்தப்பட்ட ஐம்பதாம் நாள் (லேவி. 23 : 16).

8. பலிபீடத்தின் பிரதிஷ்டையின்போது (எண். 7 : 10, 13).

9. லேவியரைப் பிரதிஷ்டைபண்ணும்போது (எண். 8 : 6 - 8).

10. எக்காளப் பண்டிகையில் (எண். 29 : 1 - 3).

## 3. சமாதான பலி

(லேவி. அதி. 3)

மனுஷன் பாவம் செய்தபோது தேவனுக்கும் மனுஷனுக்கும், மனுஷனுக்கும் மனுஷனுக்கும், மனுஷனுக்கும் ஜீவராசிகளுக்கும் இடையில் இருந்த சமாதானம் அற்றுப்போயிற்று. "பிரியமானவர்களே, ... நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" என அப். பேதுரு எழுதுகிறார் (II பேதுரு 3 : 14). கர்த்தருடைய இரகசிய வருகையில் அவருடைய சந்நிதியில் பூரண சமாதானத்துடன் காணப்பட நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சமாதான பலி வெளிப்படுத்துகிறது.

கர்த்தரைச் சமாதானத்துடன் சந்திக்க நாம் சமாதானத்தின் நான்கு அனுபவங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்:

1. நமக்கும் தேவனுக்கும் இடையில் சமாதானம் (ரோமர் 5 : 1);
2. நம் இருதயத்திற்குள் சமாதானம் (கொலோ. 3 : 15);
3. சபையில் ஒருவரோடொருவர் சமாதானம் (மாற்கு 9 : 50);
4. எல்லா மனுஷரோடும் சமாதானம் (ரோமர் 12 : 18).

சமாதான பலி செலுத்துபவன், காளை அல்லது பசு, ஆட்டுக்குட்டி, வெள்ளாடு இவைகளில் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் (லேவி. 3 : 1, 7, 12).

சமாதான பலி சர்வாங்க தகனபலியைப் போலவே செலுத்தப்பட்டது. இதில், குடல்களை மூடிய கொழுப்பு, குடல் களிலுள்ள கொழுப்பு, இரண்டு குண்டிக்காய்கள் (சிறுநீரகங்கள்), குண்டிக்காய்களின் (சிறுநீரகங்களின்) மேல் சிறு குடல்களி னிடத்தில் இருக்கிற கொழுப்பு, கல்லீரலின் மேல் இருக்கிற ஜவ்வு ஆகியவை தகனிக்கப்பட வேண்டும். இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான பலியாகும் (லேவி. 3 : 5, 11, 14 – 16).

**பலி செலுத்தும் முறையும் அதின் ஆவிக்குரிய விளக்கமும்** (லேவி. 3 : 2 - 5):

***மிருகத்தின் தலையின்மேல் கை வைத்தல்:*** நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை கர்த்தராகிய இயேசு வின்மேல் சுமத்தப்பட்டதை இது குறிக்கிறது (ஏசாயா 53 : 5).

***மிருகத்தைக் கொன்று, அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் மேல் சுற்றிலும் தெளித்தல்:*** இது கர்த்தராகிய இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே பிதாவாகிய தேவன் யாவையும் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளச் சித்தமாகி, நமக்குச் சமாதானத்தை உண்டாக்கினதையும், அவர் மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத் தினாலே நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கிக்கொண்டதையும் குறிக்கிறது (கொலோ. 1 : 20 - 22).

*குடல்களை மூடிய கொழுப்பு:* 'குடல்கள்' மனதுருக் கத்தைக் காண்பிக்கிறது (ஏசாயா 16 : 11). இருப்பினும் இங்கு இது மற்றவர்கள் மீதுள்ள மனதுருக்கத்தை அல்ல, தனக்காக மற்ற வர்கள் கவலைப்படுவதில்லை என்ற சுய அனுதாபத்திற்கு இடங் கொடுத்து, சமாதானத்தை இழந்துபோவதையே காட்டுகிறது. எனவே, ஒரு மனுஷனுடைய சமாதானம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், இது அவனை விட்டு முற்றிலும் நீக்கப்பட வேண்டும்.

*குடல்களிலுள்ள கொழுப்பு:* இது, ஒருவன் சொகுசான, சுகபோகமான ஜீவியம் செய்ய வேண்டும் என்று தன் இருதயத்தின் ஆழத்தில் வாஞ்சிப்பதைக் காட்டுகிறது. இது நம்மிலிருந்து நீக்கப்படாவிட்டால், "என்னுடைய சமாதானத்தையே உங்க ளுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்க ளுக்குக் கொடுக்கிறதில்லை" (யோவான் 14 : 27) என கர்த்தராகிய இயேசு கூறி, நமக்கு அருளும் பூரண சமாதானத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. மேலும் அவர், "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவை களை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்" (யோவான் 16 : 33) என்று கூறினார்.

*இரண்டு சிறுநீரகங்கள்:* சிறுநீரகங்கள் மனுஷனின் இரகசிய ஜீவியத்தைக் குறிக்கின்றன. ஒரு மனுஷன் தனக்குள் ஆழமான சமாதானத்தை அனுபவிக்க வேண்டுமாயின், அவன் தன் இருதயத்தின் ஆழத்தில் மறைந்திருக்கும் இரகசியங்களைப் பலிபீடத்தின் மேல் வைக்க வேண்டும்.

*சிறுநீரகங்களின்மேல் சிறுகுடல்களினிடத்திலுள்ள கொழுப்பு:* இது, ஒருவன் தன்னைத்தானே பெரியவன் என எண்ணி, தன் பதவியையும் ஸ்தானத்தையும் பாதுகாத்துக்கொள்ளப் பிரயாசப்படு வதைக் காட்டுகிறது. எல்லாச் சூழ்நிலைகளிலும், நாம் தாழ்த்தப் படும்போதுங்கூட, நம்முடைய சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் இந்த மனப்பான்மை நம்மை விட்டு நீங்க வேண்டும்.

***கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வு:*** கல்லீரலின் வேலை ஆகாரத்தை ஜீரணிப்பதும், ஆகாரத்தில் சரீரத்திற்கு அவசிய மில்லாதவற்றைப் பிரித்தெடுத்து நீக்குவதுமாகும். இது, நாம் நமது சொந்த ஜீவனைப் பாதுகாப்பதற்காகப் பிரயாசப்படுவதைக் காட்டு கிறது (மத். 16 : 25). இதன் மூலம் நாம் நம்முடைய சமாதானத்தை இழந்துபோக ஏதுவுண்டாகும். எனவே, இச்சுபாவம் சுட்டெரிக்கப் பட வேண்டும்.

**சமாதான பலியில் கவனிக்கப்பட வேண்டியவை:**

1. இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்துப் படைக்கும் சமாதான பலி ஆரோனைச் சேர வேண்டும் (யாத். 29 : 27, 28).

2. சமாதான பலியின் கொழுப்பு சர்வாங்க தகனபலியின் மேல் எரிக்கப்பட வேண்டும் (லேவி. 6 : 12).

3. ஸ்தோத்திரத்துக்காகச் சமாதான பலி செலுத்தப்பட வேண்டும் (லேவி. 7 : 11, 12).

4. பொருத்தனையாயாவது, உற்சாக பலியாயாவது சமாதான பலி செலுத்தப்படலாம் (லேவி. 7 : 16).

5. ஒருவன் தீட்டுள்ளவனாயிருக்கும்போது சமாதான பலி யைப் புசிக்கக் கூடாது (லேவி. 7 : 20).

6. ஆசாரியப் பிரதிஷ்டை முடிந்து எட்டாம் நாளில் சமாதான பலி செலுத்தப்பட வேண்டும் - ஒரு காளை, ஒரு ஆட்டுக்கடா (லேவி. 9 : 1 - 4).

7. சமாதான பலியின் ஒரு பகுதி ஆசாரியனுக்கும் அவனுடைய பிள்ளைகளுக்கும் உரியது (லேவி. 7 : 15, 16 ; 10 : 14).

8. சமாதான பலி மன உற்சாகத்துடன் செலுத்தப்பட வேண்டும் (லேவி. 19 : 5).

9. ஐம்பதாம் நாள் பண்டிகையின்போது சமாதான பலி செலுத்தப்பட வேண்டும் (லேவி. 23 : 16 - 19).

10. நசரேயன் விரதங்காக்கும் நாள் நிறைவேறும்போது சமாதான பலி செலுத்தப்பட வேண்டும் - ஒரு ஆட்டுக்கடா (எண். 6 : 13, 14).

11. பலிபீடத்தின் பிரதிஷ்டையின்போது சமாதான பலி செலுத்தப்பட வேண்டும் (எண். 7 : 10, 17).

## 4. பாவ நிவாரண பலி

(லேவி. அதி. 4)

பாவ நிவாரண பலி, நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்குப் பாவமறியாத அவர் நமக்காகப் பாவ நிவாரண பலியாக்கப்பட்டதைக் குறிக்கிறது (II கொரி. 5 : 21). நம்முடைய பாவங்களைச் சுமந்தபோது அவர் நம்முடைய பாவங்களுக்காகப் பாவநிவாரண பலியாகி மரித்ததினால், கல்வாரி பலியை விசுவாசிக்கிற நாம் அவருக்குள் தேவநீதியாகிறோம். இந்தத் தேவ நீதி பாவம் அறியாத தன்மையாகும்.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்பு, தேவனுடைய பிள்ளைகள் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்யக் கூடாது. அப்படிப்பட்ட பாவங்களுக்கு நிவாரணமில்லை (எபி. 10 : 26, 27). தேவனுடைய பிள்ளைகள் தங்கள் அறியாமையினால் செய்யும் பாவங்களுக்காகவும், சிந்தனை மண்டலத்தை மேற்கொள்ளும் பாவங்களுக்காகவும் (கொலோ. 3 : 5) பாவநிவிர்த்தி செய்யும்படி பாவ நிவாரண பலி செலுத்தப்படுகிறது.

சாதாரண ஜனங்களில் ஒருவன் அறியாமையினால் பாவம் செய்தால், அவன் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு பெண் குட்டியைத் தன் பாவநிவாரணபலியாகக் கொண்டுவர வேண்டும் (லேவி. 4 : 27, 28). ஒரு பிரபு அறியாமையினால் பாவஞ்செய்தால், அவன் பழுதற்ற ஒரு இளம் வெள்ளாட்டுக் கடாவைக் கொண்டுவர வேண்டும் (வச. 22, 23). ஜனங்கள் குற்றத்திற்குட்படத்தக்கதாக ஒரு ஆசாரியன் அறியாமையினால் பாவஞ்செய்தால் ஒரு இளங்காளை கொண்டுவரப்பட வேண்டும் (வச. 3). அதுபோலவே முழுச்

சபையாரும் அறியாமையினால் உட்படும் பாவத்திற்காகவும் ஒரு இளங்காளை கொண்டுவரப்பட வேண்டும் (வச. 13, 14). அவர்கள் கொண்டுவரும் பலிப்பொருளின் மூலம் ஒரு ஆசாரியனுடைய பாவமானது முழுச் சபையின் பாவத்திற்கும் சமமாயிருக்கிறது என நாம் அறிந்துகொள்ளலாம்.

ஆசாரியன், சபையார் இவர்கள் அறியாமையினால் செய்யும் பாவத்தினால் ஆசரிப்புக்கூடாரத்தில் கீழ்க்காணும் மூன்று இடங்கள் தீட்டுப்படுகின்றன (லேவி. 4 : 6, 7, 17, 18): (1) திரைச்சீலை (2) தூபபீடம் (3) பலிபீடம்.

***1. திரைச்சீலை:*** இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் குறிக்கிறது. சபையை நடத்தும் ஒரு தேவ ஊழியன் ஜனங்கள் குற்றத்திற்குட்படத் தக்கதாகப் பாவஞ்செய்தால், அவன் நிமித்தம் சபை பரிசுத்தக் குலைச்சலாகிறது. அவ்வாறே சபையாரெல்லாரும் சேர்ந்து ஒரு பாவத்திற்குள்ளானால், சபை முழுவதும் தீட்டுப்படுகிறது. காளையின் இரத்தம் திரைச்சீலைக்கு எதிரே 'ஏழுதரம்' தெளிக்கப்படுதல் (லேவி. 4 : 17), சபையானது பரிசுத்தத்தின் பூரண நிலைக்குக் கொண்டுவரப்படுமளவும் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது (எபி. 10 : 19, 20).

***2. தூபபீடம்:*** இது நன்றியுள்ள இருதயத்தையும், ஒருவர் ஜெபத்தில் தன் ஜீவனை ஊற்றும் அனுபவத்தையும் காண்பிக்கிறது. ஜனங்கள் குற்றத்திற்குட்படத்தக்கதாக உத்தரவாதமுள்ள ஒரு தேவ ஊழியன் செய்யும் பாவத்தினாலோ, அல்லது சபையார் அனைவரும் சேர்ந்து பாவத்திற்குட்படும்போதோ - சபையில் நன்றியுள்ள இருதயமும், ஜெப ஜீவியமும் பாதிக்கப்படுகின்றன. தூபபீடத்தின் கொம்புகள், நன்றியுள்ள ஜீவியத்தினாலும் ஜெப ஜீவியத்தினாலும் நாம் பெற்றுக்கொள்ளும் பெலனைக் காட்டுகிறது. தூபபீடத்தின் கொம்புகளின் மேல் இரத்தம் பூசப்படுதல் (லேவி. 4 : 7), சபை இழந்துபோன தன் வல்லமையைப் பரிசுத்தமாகுதலின் மூலம் மீண்டும் பெற்றுக்கொள்வதைக் காட்டுகிறது.

*3. பலிபீடம்:* ஜனங்கள் குற்றத்திற்குட்படத்தக்கதாக உத்தரவாதமுள்ள ஒரு தேவ ஊழியன் செய்யும் பாவத்தினாலோ, அல்லது சபையார் அனைவரும் சேர்ந்து பாவத்திற்குட்படும் போதோ - பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு தேவனுக்குப் பிரியமான பலியாக வேண்டிய புறஜாதியாராகிய பலி (புதிய ஏற்பாட்டுச் சபை), அவரால் அங்கீகரிக்கப்படக் கூடாதவாறு தீட்டுப்படுகிறது. அப்போது மிருகத்தின் இரத்தம் முழுவதும் பலிபீடத்தின் அடியில் ஊற்றப்படுவது போல (லேவி. 4 : 18), சபையானது திரும்பவும் ஆதி நிலைவரத்திற்குக் கொண்டு வரப்படும்படி, அக்கிரமம் சுமக்கும் பரிசுத்தவான்கள் தங்கள் இரத்தம் முழுவதையும் செலவழிக்க வேண்டும்.

சமாதான பலியில் தகனிக்கப்படும் உள் அவயவங்களே பாவநிவாரண பலியிலும் தகனிக்கப்படுகின்றன (லேவி. 4 : 8 – 10). நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பதைக் காண்பிக்கும்படியாகக் காளையின் உள் அவயவங்களும் சரீரமும் சுட்டெரிக்கப்படுகின்றன. காளையின் சரீரமும் தோலும் மீதியான சகலமும் பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட வேண்டும் என்பது (லேவி. 4 : 11, 12), நாம் கிறிஸ்துவுடன் நிந்தைகளையும் பாடுகளையும் அனுபவிப்பதைக் காட்டுகிறது (எபி. 13 : 12, 13). இப்பலி மகா பரிசுத்தமானது (லேவி. 6 : 17).

**பலி செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள்:**

1. நித்தமும் - ஒரு வெள்ளாட்டுக்கடா (எண். 28 : 15).

2. ஆரோன் பிரதிஷ்டைபண்ணப்படும்போது - ஒரு காளை (யாத். 29 : 9 - 14).

3. ஆசாரியனின் ஏழுநாள் பிரதிஷ்டையில் ஒவ்வொரு நாளிலும் - ஒவ்வொரு காளை (யாத். 29 : 36, 37).

4. அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அறியாமையினால் பாவம் செய்தால் - ஒரு இளங்காளை (லேவி. 4 : 3).

5. சபையார் யாவரும் அறியாமையினால் பாவம் செய்தால் - ஒரு இளங்காளை (லேவி. 4 : 13, 14).

6. ஒரு பிரபு அறியாமையினால் பாவம் செய்தால் - ஒரு இளம் வெள்ளாட்டுக்கடா (லேவி. 4 : 22, 23).

7. ஒரு சாதாரண மனிதன் அறியாமையினால் பாவம் செய்தால் - ஒரு பெண் வெள்ளாட்டுக் குட்டி (லேவி. 4 : 27, 28).

8. ஆசாரியர் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்பு எட்டாம் நாளில் ஆரோன் செலுத்த வேண்டியது - பழுதில்லாத ஒரு கன்றுக்குட்டி (லேவி. 9 : 1, 2).

9. பிரசவித்த ஸ்திரீயின் சுத்திகரிப்புக்காக - ஒரு புறாக்குஞ்சு அல்லது ஒரு காட்டுப்புறா (லேவி. 12 : 6).

10. குஷ்டரோகியாயிருந்து சொஸ்தமானவனின் சுத்திகரிப்புக் காக - ஒரு ஆட்டுக்குட்டி அல்லது ஒரு காட்டுப்புறா அல்லது ஒரு புறாக்குஞ்சு (லேவி. 14 : 7, 10, 19, 22, 31).

11. பிரமியம் நீங்கிச் சுத்தமானவன் செலுத்த வேண்டியது - ஒரு காட்டுப்புறா அல்லது ஒரு புறாக்குஞ்சு (லேவி. 15 : 14, 15).

12. ஆரோன் பாவநிவாரண நாளில் செலுத்தவேண்டியது - ஒரு காளை (லேவி. 16 : 3).

13. இஸ்ரவேலர் பாவநிவாரண நாளில் செலுத்த வேண்டியது - இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள்: பாவநிவாரண பலியாக ஒன்று; போக்காடாய் விடப்படுவது ஒன்று (லேவி. 16 : 5 - 9).

14. ஐம்பதாம் நாள் பண்டிகையில் செலுத்தப்பட வேண்டியது - ஒரு வெள்ளாட்டுக்கடா (லேவி. 23 : 19).

15. நசரேயனுடைய சுத்திகரிப்புக்காகச் செலுத்தப்பட வேண்டியது - ஒரு புறாக்குஞ்சு அல்லது ஒரு காட்டுப்புறா (எண். 6 : 9 -11).

16. பன்னிரண்டு கோத்திரப் பிரபுக்களும் பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காகச் செலுத்தியது - ஒரு வெள்ளாட்டுக் கடா (எண். 7 : 10, 16).

17. லேவியரின் சுத்திகரிப்புக்காகச் செலுத்தப்பட வேண்டியது - ஒரு காளை (எண். 8 : 6 - 8).

18. ஏழாம் மாதம் எக்காளப் பண்டிகையின் நாளில் செலுத்தப்பட வேண்டியது - ஒரு வெள்ளாட்டுக்கடா (எண். 29 : 1, 11).

## 5. குற்றநிவாரண பலி

(லேவி. அதி. 5 ; 7 : 1 - 7)

குற்றநிவாரண பலி, ஒரு மனிதன் தன் அறிவின் வளர்ச்சிக் கேற்றபடி குற்றம் என்று தான் அறிந்த தன் பாவத்திற்காகச் செலுத்தும் பலியாகும். ஆங்கிலத்தில் இது 'Tresspass Offering' என்று சொல்லப்பட்டுள்ளது. 'Tresspass' என்ற வார்த்தையின் பொருள் 'மீறுதல்' என்பதாகும். இது, தேவபிள்ளைகள் தங்களுடைய எல்லைக்குள் தங்கியிராமல், அதற்கு மீறிப்போய்க் கிரியை செய்வதால் உண்டாகும் பாவமாகும். மிரியாம், ஆரோன், தாவீது ஆகியோர் மீறுதலுக்குட்பட்ட சில சந்தர்ப்பங்களை நாம் இதற்கு உதாரணமாகக் கூறலாம் (எண். 12 : 1 , 2 ; II சாமு. 24 : 1 - 10).

பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் வந்து மறைவின் திரைச்சீலையை இறக்கி, அதினாலே சாட்சியின் பெட்டியை மூட வேண்டும். அதன் பின் கோகாத் புத்திரர் வந்து அதைச் சுமக்க வேண்டியதாயிருந்தது. அவைகள் மூடப்படும் போது கோகாத் புத்திரர் வந்து அவற்றைப் பார்த்தால், அது ஒரு மீறுதல் அல்லது குற்றமாகும். அதுபோலவே, புதிய ஏற்பாட்டின் காலத்தில் போதகனாய் அழைக்கப்பட்டிருக்கும் ஒருவன், தன் எல்லையை மீறி, அப்போஸ்தலனுடைய ஊழியத்தில் தலையிடக் கூடாது.

லேவியராகமம் 5 : 1 - 4 - இல் எந்தெந்த குற்றங்களுக்காகக் குற்றநிவாரண பலி செலுத்தப்பட்டது என நாம் வாசிக்கிறோம். "சாட்சியாகிய ஒருவன், இடப்பட்ட ஆணையைக் கேட்டிருந்தும், தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்து பாவஞ்செய்தால், அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்" (வச. 1).

செய்யத் தகாததை ஒருவன் செய்யும்போது, அதைக் கண்டவன், அறிவிக்க வேண்டியவர்களுக்கு அதை அறிவிக்காவிட்டால், சபையின் பரிசுத்தத்திற்காக இவன் கிரியை செய்யாததினால் இவன் குற்றவாளியே. மேலும், எந்த அசுத்தத்தினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனையோ, அசுத்தமான யாதொரு மிருகத்தையோ, வஸ்துவையோ ஒருவன் அறியாமல் தொட்டு, பின்பு அதை அறிந்துகொண்டால், அவன் குற்றமுள்ளவனாவான். மனிதர் பதறி ஆணையிடும் எந்தக் காரியத்திலானாலும், ஒருவன் தீமை செய்கிறதற்காவது நன்மை செய்கிறதற்காவது, தன் மனம் அறியாமல், தன் உதடுகளினால் பதறி ஆணையிட்டு, பின்பு அவன் அதை அறிந்துகொண்டால், அதைக் குறித்து அவன் குற்றமுள்ளவனாவான்.

ஒருவன் இப்படிப்பட்ட குற்றங்களை அறிக்கை செய்து, தன்னைத் தானே சுத்திகரித்து, தன் ஜீவியத்தைப் பாதுகாத்துக் கொள்வதால், அவன் பூரண பரிசுத்தத்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியாக்கப்படுகிறான். இதற்காகவே நம்முடைய அக்கிரமங்கள் அனைத்தும், நம்மைப் பரிசுத்தப்படுத்தும்படியாகக் குற்றநிவாரண பலியான கர்த்தராகிய இயேசுவின் மேல் சுமத்தப்பட்டன (ஏசாயா 53 : 6). இப்பலி மகா பரிசுத்தமானது (லேவி. 7 : 1).

பாவம் ஒரே அளவாயிருந்தாலும், செலுத்தப்பட வேண்டிய பலி, அவனவனுடைய திராணிக்குத் தக்கதாய், கீழ்க் கண்டவைகளில் ஏதேனும் ஒன்றாய் இருக்க வேண்டும் (லேவி. 5 : 6 - 11) - ஆடுகளிலாவது, வெள்ளாடுகளிலாவது ஒரு பெண் குட்டி; இரண்டு காட்டுப் புறாக்கள் அல்லது இரண்டு புறாக் குஞ்சுகள்; அல்லது ஒரு எப்பா அளவான மெல்லிய மாவில் பத்தில் ஒரு பங்கு.

**பலி செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள்:**

1. ஒருவன் செய்த குற்றத்தினிமித்தம் - ஆடுகளிலாவது, வெள்ளாடுகளிலாவது ஒரு பெண்குட்டி செலுத்தப்பட வேண்டும் (லேவி. 5 : 5, 6).

2. ஒருவன் பரிசுத்தமானவைகளில் குற்றஞ்செய்து, அறியாமையினால் பாவத்திற்குட்பட்டால் - ஆசாரியன் அவன் மேல் சுமத்தும் அபராதம் எவ்வளவோ, அவ்வளவு வெள்ளிச் சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடா (லேவி. 5 : 15); அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகக் கூட்டி ஆசாரியனுக்குக் கொடுக்கப்பட வேண்டும் (வச. 16).

3. பொய்யாணையிட்டுச் சம்பாதித்த பொருளுக்காக - ஆசாரியனுடைய மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஆட்டுக்கடா செலுத்தப்பட வேண்டும். அது செலுத்தப்படும் நாளில் அப் பொருளும், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவும் கூட்டி, அதற்குரியவனுக்குச் செலுத்தப்பட வேண்டும் (லேவி. 6 : 5, 6).

4. குஷ்டரோகியாயிருந்து சொஸ்தமானவன் தன் சுத்திகரிப்புக்காகச் செலுத்த வேண்டியது - ஒரு ஆட்டுக்குட்டியும் ஒரு ஆழாக்கு எண்ணெயும் (லேவி. 14 : 7, 12).

5. ஒரு அடிமையைக் கற்பழித்தவன் செலுத்த வேண்டியது- ஒரு ஆட்டுக்கடா (லேவி. 19 : 20, 21).

## சிறிய பலிகள்

இது வரை பிரதானமான ஐந்து பலிகளைக் குறித்து நாம் படித்தோம். இங்கே ஐந்து சிறிய பலிகளின் ஆவிக்குரிய கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

**1. அசைவாட்டும் பலி** (யாத். 29 : 24 - 27): இது மனித வர்க்கத்தின் இரட்சிப்புக்காகப் பரிசுத்தவான்கள் தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுத்திருப்பதைக் காண்பிக்கிறது.

**2. ஏறெடுத்துப் படைக்கும் பலி** (யாத். 29 : 27): இது, பரிசுத்தவான்கள் தங்களைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுப்பதை வெளிப்படுத்துகிறது.

**3. பான பலி** (யாத். 29 : 40): இது, பரிசுத்தவான்கள் ஊழியத்தில் தங்கள் ஜீவனை ஊற்றுவதைக் காட்டுகிறது (பிலி. 2 : 17 ; மத். 16 : 25).

**4. ஸ்தோத்திர பலி** (லேவி. 7 : 12): இது, பரிசுத்தவான்கள் தேவன் செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து நன்றியுள்ள இருதயத்தோடு ஜீவிப்பதைக் குறிக்கிறது.

**5. உற்சாக பலி** (லேவி. 7 : 16): இது, பரிசுத்தவான்கள் தங்கள் மனதில் நியமித்ததின்படியே, கர்த்தருக்கு மனப்பூர்வமாய்ப் பலி செலுத்துவதைக் காண்பிக்கிறது (II கொரி. 9 : 7).

# முடிவுரை

ஆவிக்குரிய பிரகாரம் இவ்வுலகமாகிய வனாந் தரத்தைக் கடந்துசெல்லும் நம் பிரயாணத்தில், நாமே தேவனுடைய வாசஸ்தலமாகும்படியாக, அப்போஸ்த லருடைய அந்நியோந்நியத்திலும் உபதேசத்திலும் நம்மை நாம் காத்துக்கொள்ள எச்சரிக்கையாயிருந்து, கர்த்தருக்குச் சுகந்த வாசனையாயிருக்கும்படி ஜீவபலி யாக நம்மை ஒப்புக்கொடுக்க 'ஆசரிப்புக் கூடாரம்' பற்றிய இவ்வேதபாடங்கள் நமக்கு உதவிசெய்வதாக! மீட்கப்பட்ட தம்முடையவர்களைத் தம்முடைய மகிமை யின் புகழ்ச்சிக்காகத் தம்மிடம் சேர்த்துக்கொள்ளும்படி கர்த்தராகிய இயேசு பிரசன்னமாகும்போது, நாம் கறை யற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத் தோடே அவரது சந்நிதியில் காணப்படும்படி ஆயத்தமா யிருப்போமாக! அப்படியானால் வரப்போகும் நித்தி யத்தில் நாமே தேவனுடைய நித்திய வாசஸ்தலமாயிருப் போம். மகிமையடைந்த புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தன்னுடைய தரிசனத்தில் கண்ட அப்போஸ்த லனாகிய யோவான், "பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயி ருப்பார்" (வெளி. 21 : 3) என்று கூறுகிறபடி நம்முடைய தேவன் என்றென்றும் நம்மிடத்தில் வாசமாயிருப்பார். அல்லேலூயா!

தேவன் மனிதரோடு வாசம்பண்ண எப்போதும் விருப்பமுள்ளவராகவே இருந்திருக்கிறார். ஆகையினாலேயே அவர் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்தினின்று வெளியே கொண்டுவந்தபின், தாம் அவர்கள் நடுவில் வாசம்பண்ணும்படி தமக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கும்படி அவர்களிடம் கூறினார். ஆசரிப்புக் கூடாரம் என அழைக்கப் பட்ட இந்த வாசஸ்தலம், பரலோகத்திலுள்ளவை களின் சாயலும் நிழலுமாய் இருந்தது. ஆசரிப்புக் கூடாரத்தின் ஒவ்வொரு பகுதியும், அதின் ஒவ்வொரு உபகரணமும் எவ்விதம் ஆவிக்குரிய அர்த்தமுள்ளதாயிருக்கிறது என்பதை இந்நூல் உமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

பழைய ஏற்பாட்டில் மனுஷனோடு வாசம் பண்ணின தேவன், புதிய ஏற்பாட்டில் மனுஷனுக்குள் வாசம்பண்ண விரும்புகிறார். நீர் இந்நூலை வாசித்து, உம் வாழ்க்கையை அவர் வாசம்பண்ணும் ஆசரிப்புக் கூடாரமாகக் கட்டியெழுப்பிக்கொள்வீராக!

REHOBOTH
BIBLE BOOK CENTRE
40